விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 ஆவணி 05 புதன்கிழமை (21.08.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 245

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

# தமிழ் கூட்டமைப்பு வேட்பாளர் மீது நகரப்பகுதியில் வைத்து தாக்குதல்

## அச்சத்தில் உறைந்தனர் மக்கள்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் யாழ்.மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர் ஒருவர் மீதும் அவர் பயணித்த வாகனத்தின் மீதும் இனந்தெரியாத நபர்கள் யாழ்.நகர்ப்பகுதியில் வைத்து நேற்று மாலை 5 மணியளவில் தாக்குதல் மேற்கொண்டுள்ளனர்.

அத்தோடு குறித்த இனந்தெரியாத நபர்கள் துப்பாக்கியைக் காட்டி வேட்பாளர்களை அச்சுறுத்தியதாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.



பட்டப்பகலில் யாழ்.நகரப்பகுதியில் இடம்பெற்ற மேற்படிச்சம்பவம் அங்கு பெரும்பரபரப்பை ஏற்படுத்தியதோடு பெருமளவில் பொலிஸார் குவிக்கப்பட்டிருந்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, வடக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளரான கந்தப்பர் முத்தையாபிள்ளை தம்பிராசா மற்றும் காரைநகர் பிரதேச சபை தவிசாளர் வேலாயுதம் ஆனைமுகன் உள்ளிட்டோர் யாழ்.மின்சார நிலைய வீதி ஊடாக வாகனத்தில் பயணித்துக் கொண்டிருந்தனர்.

இதன்போது மாலை 5 மணியளவில் திடீரென அவர்களை இடைமறித்த சுமார் பத்துக்கும் மேற்பட்ட இனந்தெரியாத நபர்கள் இரும்புக்கம்பிகளினால் வாகனத்தினைத் தாக்கி அதன் கண்ணாடியை உடைத்துள்ளனர்.

அத்தோடு வாகனத்தினுள் இருந்த வேட்பாளரையும் குறித்த நபர்கள் தாக்கியுள்ளனர். இதனால் வேட்பாளரின் கையில் பலத்த காயம் ஏற்பட்டது. (20ஆம் பக்கம் பார்க்க)

# அவதூறாக குற்றம் சாட்டி வாக்கு சேர்க்க முயற்சி

## அங்கஜன் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

எமது வியாபார நிலையத்திற்கு வந்து வலிந்து சண்டைக்கு இழுத்து தன்மீதான தாக்குதல் நடத்தப்பட்டதாக கூறி த்னக்கான அனுதாபத்தைப் பெறும் நோக்குடனேயே நகரப்பகுதியில் இடம்பெற்ற சம்பவம் மேற்கொள்ளப்பட்டதாக அங்கஜன் இராமநாதன் குற்றம் சாட்டியுள்ளார்.

இது தொடர்பில் அவரின் ஊடகப்பிரிவு நேற்றிரவு வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில்மேலும்தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, (19ஆம் பக்கம் பார்க்க)

# வேட்பாளர் மீதான தாக்குதல் முதன்மை வேட்பாளர் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பன் வேட்பாளர் மீதான தாக்குதலை வன்மையாக கண்டிப்பதாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சார்பில் வடக்கு மாகாண சபைத் தேர்தலில் முதன்மை வேட்பாளராக போட்டியிடும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் முன்னாள் பராமன்ற உறுப்பினர் சின்னத்துரை தவராசா தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் யாழ்.மாவட்டத்தில் போட்டியிடும் கந்தப்பர் முத்தையாபிள்ளை தம்பிராசா என்பவர் மீதும் அவர் பயணித்த வாகனத்தின் மீதும் யாழ்.நகரப்பகுதியில் வைத்து நேற்று மாலை 5 மணியளவில் தாக்குதல் (19ஆம் பக்கம் பார்க்க)

# அகதிகள் மூவரை நாடுகடத்த இந்திய மத்திய அரசு உத்தரவு

(சென்னை)

தமிழகத்தில் இருந்து மூன்று தமிழ் அகதிகளை இலங்கைக்கு நாடுகடத்தும்படி இந்திய மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது.

ஈழநேரு, செந்தூரன் மற்றும் இத்தாலி ராஜன் எனப்படும் சௌந்தர்ராஜன் ஆகியோரையே இவ்வாறு நாடுகடத்தும்படி இந்திய மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது.

இந்த நாடுகடத்தல் உத்தரவு தொடர்பில் இம்மூவருக்கும் அறிவித்துள்ள இந்திய மத்திய அரசின் அதிகாரிகள், கடவுச்சீட்டுக்கான புகைப்படம் மற்றும் பிறப்புச் சான்றிதழ்களை ஒப்படைக்குமாறு அவர்களுக்கு பணிப்புரை விடுத்துள்ளது.

இம்மூவர்களில் ஈழநேரு தற்போது திருச்சி மத்திய சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். செங்கலபட்டு சிறப்பு முகாமில் இருந்து விடுவிக்கப்பட்ட செந்தூரன் தற்போது தாம்பரத்தில் (19ஆம் பக்கம் பார்க்க)

# பேச்சைக் குறைத்து செயலில் ஈடுபடுங்கள்

## அரசுக்கு ஐ.நா. வலியுறுத்தல்

(கொழும்பு)

இலங்கை அரசாங்கம் பேச்சைக் குறைத்து செயலில் ஈடுபட வேண்டியகாலம் வந்துள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது. கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றிய ஐக்கிய நாடுகளின் இலங்கைக்கான மனிதாபிமான பிரதிநிதி சுபினாய் நண்டி இதனைத் தெரிவித்துள்ளார்.

2009ஆம் ஆண்டு யுத்தம் இடம்பெற்ற காலப்பகுதியில் சுமார் 4 இலட்சத்து 80 ஆயிரம் பேர் இடம் பெயர்ந்தனர்.

அவர்களை மீள குடியேற்றுவதற்கு ஐக்கிய நாடுகள் உள்ளிட்ட சர்வதே (20ஆம் பக்கம் பார்க்க)

# தேர்தல்கள் ஆணையாளர் இன்று யாழ்ப்பாணம் விஜயம்

(யாழ்ப்பாணம்)

தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய இன்று யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளார் என வடக்கு மாகாண பிரதித் தேர்தல்கள் ஆணையாளரும் யாழ்.மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளருமான சிவசுதன் அச்சுதன் தெரிவித்துள்ளார்.

இன்று வருகை தரும் தேர்தல்கள் ஆணையாளர் காலை 9.30 மணியளவில் யாழ்.பொது நூலக கேட்போர் கூடத்தில் அரசாங்கத் திணைக்களங்களின் தலைவர்களையும் சந்தித்து கலந்துரையாடவுள்ளார் எனவும் அறிவித்தார்.

எனவே இந்தக் கலந்துரையாடலில் தவறாமல் சகல திணைக்கள தலைவர்களும் கலந்து கொள்ளுமாறும் பிரதித் தேர்தல்கள் ஆணையாளர் அச்சுதன் மேலும் தெரிவித்தார். (20ஆம் பக்கம் பார்க்க)

# சர்வதேச சமூகத்தை ஏமாற்ற முயற்சிக்கிறது அரசாங்கம்

## சிலோன் ருடே பத்திரிகையில் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் நடைபெறவுள்ள இரண்டு முக்கிய நிகழ்வுகளின் நிமித்தம் அரசாங்கம் சர்வதேச நாடுகளுக்கு தமது நல்ல முகத்தை காட்ட முயற்சிப்பதாக சிலோன் ருடே ஆங்கில பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த மாத இறுதியில் மனிதஉரிமைகள் ஆணையாளர் இலங்கை வருகின்றமை மற்றும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் மாநாடு போன்றவற்றிற்காக அரசாங்கம் தமது முகத்தை மாற்றிக்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (20ஆம் பக்கம் பார்க்க)

# தமிழ்க் கூட்டமைப்பு 30 ஆம் திகதி சந்திப்பு

(கொழும்பு)

இலங்கைக்கு எதிர்வரும் 25ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை விஜயம் செய்யவுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் மனித வுரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையை எதிர்வரும் 30ஆம் திகதி வெள்ளிக்கிழமை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளது.

இச்சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், திருகோணமலை மாவட்ட நாடாளு (19ஆம் பக்கம் பார்க்க)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயுள்வேத மருந்தகம் திறப்பு விழா

வலி.மேற்கு பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட வகையில் நவாலியில் ஆயுள்வேத மத்திய மருந்தகம் இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு ஹேமலதா ஞாபகார்த்த நிதியத்தில் திறந்து வைக்கப்படவுள்ளது.

வடமாகாண சுதேச மருத்துவ திணைக்கள மாகாண பணிப்பாளர் டாக்டர் திருமதி சி.துரைரட்ணம் இதற்கான அனுமதியை வழங்கியதன் பேரிலேயே நவாலியில் இன்று ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

இந்நிகழ்ச்சி பிரதம அதிதியாக வட மாகாண சுதேச மருத்துவ திணைக்களத்தின் டாக்டர் திருமதி அன்பரசி கேதீஸ்வரன் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

வாரத்தில் இரு நாட்கள் சேவை இடம்பெறக் கூடியதாக இன்றைய ஆரம்ப நிகழ்வு இடம்பெறுமென நிறுவனத்தலைவர் செ.ரமேஷ் தெரிவித்தார். (எ)


## பிள்ளையார் இன்

சனி, ஞாயிறு தினங்களில் புஃவே (Buffet) முறையில் இந்திய சமையற்கலை வல்லுநர்களால் தயாரிக்கப்பட்ட உணவு வகைகள் வழங்கப்படும். 6 - 10 pm - 250/=

தினமும் **12 மணிமுதல் 3 மணிவரை** மிகச் சிறந்த சைவ, அசைவ உணவு வகைகள் வழங்கப்படுகின்றன.

(சி-4396)

**சைவ உணவு: 150/-** **அசைவ உணவு 180/-**

தொடர்புகளுக்கு: இல.31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 021 222 2829

உங்கள் முகம், மேனி, பளபளக்கவேண்டுமா?
எரிகாயங்களினால் ஏற்பட்ட தழும்புகள் மாறவேண்டுமா?
இன்றே பாவியுங்கள்

'றோயல் ஒலிவ் ஒயில்'
Product of Spain

உணவுத் தேவைகளுக்கு ஏற்ற சுத்தமான ஒலிவ் ஒயில்




ஏக விநியோகஸ்தர்:
**சிவா நறுமணப் பூங்கா**
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 2567

Re packed By :
**Royal Industries**
No.221/1, Adamally Building,
Wolfendhal Street,
Colombo - 12, T.P: 0777277670
அனைத்து பாமசிகளிலும் கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம். (சி-4393)


## மாநாட்டில் பங்கேற்பது குறித்து முடிவு எடுக்காத இந்தியா

பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் அமர்வில் பங்கேற்பது குறித்து இந்திய பிரதமர் எதனையும் குறிப்பிடவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. அமர்வுகளில் பங்கேற்பதற்காக விடுக்கப்பட்ட அழைப்பிற்காக நன்றி பாராட்டுவதாக இந்திய பிரதமர் மன் மோகன் சிங் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் டெல்லிக்கு விஜயம் செய்து அமர்வுகளில் பங்கேற்குமாறு பிரதமர் மன்மோகன் சிங்கிடம் நேரடியாக அழைப்பு விடுத்திருந்தார். எனினும் அமர்வுகளில் நிச்சயமாக பங்கேற்கப் போவதாக பிரதமர் எவ்வித உறுதி மொழிகளையும் வழங்கவில்லை.

தமிழகத்தின் முன்னாள் முதல்வர் கருணாநிதி மற்றும் தற்போதைய முதல்வர் ஜெயலலிதா ஆகியோர் அமர்வுகளில் இந்தியா பங்கேற்கக் கூடாது என கோரிக்கை விடுத் துள்ளனர். இதேவேளை இந்திய மீனவர்களை துரித கதியில் விடுதலை செய்யுமாறு இலங்கை வெளிவிவகார அமைச்சரிடம் பிரதமர் மன்மோகன் சிங் கோரியுள்ளார்.

மனிதாபிமான அடிப்படையில் இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டும் எனஅவர் வலியுறுத்தியுள்ளார். (எ-1)


வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு
தொ.பே. : 021 321 0815
E-mail : valampurii@yahoo.com




## வட்டக்கச்சி - கிளிநொச்சி ஸ்ரீ ரங்கநாதப் பெருமாள் கோவில் பிரமோற்சவம் - 2013

வட்டக்கச்சி ஸ்ரீ ரங்கநாதப் பெருமாள் கோவிலில் 2-ம் திருவிழாவான இன்று ஸ்ரீராம அவதாரக் காட்சி இடம்பெறும். காலைத்திருவிழா காலை 9 மணிக்கு ஆரம்பமாகி மதியம் 12 மணிக்கு நிறைவுறும். மாலைத்திருவிழா மாலை 5 மணிக்கு ஆரம்பமாகி இரவு 8 மணிக்கு நிறைவுறும்.

இங்ஙனம்
ஆலய பரிபாலன சபையும்,
விழா உபயக்காரர்களும்

(C-4401)

## SEMINAR ON, ICTAD PRICE FLUCTUATION FORMULA

"நிர்மாணத்துறையில் விலை வேறுபாடு... இக்ராட் விலை சமன்பாட்டு பிரயோகமும் தீர்வுகளும்"

**Topics-**

- Basic Concepts of ICTAD Formula
- Application of the Formula with worked Example

**To whom-**

- Engineers, Quantity Surveyor, Technical officers, Contractors and relevant personnel in the Construction Industry.

**Seminar will be held on 31st August, 2013 at 09.30am, at the Chamber of Commerce and Industries of Yarlpanam, No.124, Rasavinthoddam Road, Jaffna.**

**Investment-Rs.1,300.00**

For Registration and further information, please contact on 0212226609 before 29th August, 2013

(C-4390)

## முதலாம் ஆண்டு நினைவலைகள்




அமரர்
**செல்லையா பிரானுதேவன்**

(முல்லை வடக்கு வலைஞன்மடம் பனை தென்னை வள முன்னாள் தலைவரும் கிளை முகாமையாளரும்)

அன்பின் உறைவிடமாய்
பண்பின் இருப்பிடமாய்
பாசத்தின் ஒளிவிளக்காய்
கடமையில் கண்ணியமாய்
கருமத்தில் காவியமாய்
செயலில் வீரனாய் திகழ்ந்த
எம் உயிர்த் தோழனே
இன்று நீ மறைந்து ஓர் ஆண்டென்ன
ஓராயிரம் ஆண்டுகள் சென்றாலும்
உன் நினைவுகள் எம்மை விட்டு
என்றும் அகலாது.

லோஜிகா பல்பொருள் வாணிபம்
செல்வபுரம், முல்லைத்தீவு

அன்புடன்
நண்பன் சீலன் குடும்பத்தினர்

(C-4402)

## மரண அறிவித்தல்

**அருணாசலம் சிவசுந்தரம்**
**(முன்னாள் கிராம உத்தியோகத்தர்- திருகோணமலை) (கனடா)**



திருகோணமலை திரியாயைப் பிறப்பிடமாகவும் கனடா ஸ்காபரோவை வதிவிடமாகவும் கொண்ட அருணாசலம் சிவசுந்தரம் அவர்கள் 18.08.2013 ஞாயிற்றுக்கிழமை அன்று அதிகாலை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அருணாசலம் கனகம்மா தம்பதியினரின் அன்புப் புதல்வரும், காலஞ்சென்ற பொன்னம்பலம் ஆசைப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகனும், சரஸ்வதி அவர்களின் ஆசைக் கணவரும் சிவாஜினி, தயாளினி, திலீபன், மந்தாகினி ஆகியோரின் அருமைத் தந்தையும், ராஜதுரை, விஜயகுமார், ஜெயந்தினி, நந்தகுமார் ஆகியோரின் அன்பு மாமனாரும் வைசால், சாரூஜன், ஜெனுசன், கபிஷன், சாம்பவி, சரண், மான்சி, ரிஷ்யா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று புதன்கிழமை Canada Chapel Ridge Funaral Home -ல் நடைபெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

**வளலாய், அச்சுவேலி.**
**தொலைபேசி இலக்கம்**
**0776034513**
**தொலைபேசி இலக்கம் கனடா**
**0014162619668 (வினோத்)**
**0016472429668**

(சி-4394)

**தகவல்: காந்தி (மைத்துனர்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுநலவாய உச்சிமாநாட்டுக்கு ஊடகங்கள் ஒத்துழைக்கவேண்டும்

## ஊடகத்துறை அமைச்சின் செயலாளர்

உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியொன்றை நடத்தும்போது இன, மத, கட்சி, பிரதேச பேதமின்றி ஒத் துழைப்பு வழங்குவதைப் போன்று 15 பொதுநலவாய நாடுகள் பங்கேற்கும் இவ் உச்சி மாநாட்டை வெற்றிகரமாக நட த்தி முடிப்பதற்கும் ஊடகங்களும் பொது மக்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென வெகுஜன ஊடகத்துறை அமைச்சின் செயலாளர் சரித்த ஹேரத் தெரிவித்தார்.

எதிர்வரும் நவம்பர் மாதம் 10 ஆம் திகதி முதல் 17ஆம் திகதிவரை இலங்கையில் நடைபெறவிருக்கும் பொதுநலவாய உச்சிமாநாடு தொடர்பில் ஊடகங்களுக்கு தெளிவுபடுத்தும் நோக்கில் அமைச்சில் நேற்று முன்தினம் நடைபெற்ற செயலமர்வில் கலந்துகொண்டு உரையாற் றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த அவர்,

பொதுநலவாய அரச தலைவர்கள் மாநாடு மற்றும் அதனை ஒட்டியதாக நடைபெறவிருக்கும் வர்த்தக இளைஞர் மாநாடுகள் குறித்த செய்திகளைச் சேகரிப்பதற்கு 500 சர்வதேச ஊடகவியலாளர்கள் இலங்கைக்கு வரவிருப்பதுடன் 500 உள் ளூர் ஊடகவியலாளர்களும் பங் கெடுக்கவுள்ளனர். பொதுநலவாய உச்சி மாநாடு தொடர்பான அனைத்து தகவல்கள் மற்றும் செய்திகளையும் வழங்குவதற்கு நவீன வசதிகளுடன் கூடிய ஊடக மையமொன்று பண்டார நாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் அமைக்கப்படவுள்ளது. நவம்பர் மாதம் 10 ஆம் திகதிமுதல் 18 ஆம் திகதிவரை இந்த விசேட ஊடக மையத்தின் ஊடாக அனைத்து விபரங்களையும் ஊடகங்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பொதுநலவாய உச்சிமாநாடு தொடர்பான செய்திகளைச் சேகரிக்கும் அனைத்து ஊடகவியலாளர் களும் இணையத்தளத்தின் ஊடா கப் பதிவு செய்துகொள்ள வேண் டும். இதற்கான நடவடிக்கைகள் எடுக்கப் பட்டுள்ளன.

இச்செயலமர்வில் உரையாற் றிய பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் சுனந்த மத்தும பண் டார இலங்கைக்கு எதிராக சர்வதேச ரீதியில் பிரசாரங்கள் முன்னெடுக்கப்பட்டிருக்கும் நிலையில் பொதுநலவாய உச்சி மாநாட்டை நடத்தக் கிடைத்திருக்கும் சந்தர்ப்பமானது நாட்டுக்குக் கிடைத்த பாரிய வெற்றியாகும்.

நாட்டில் முன்னெடுக்கப்பட்டிருக்கும் அபிவிருத்திச் செயற்பாடுகளை உலகத் தலைவர்கள் பார்வையிடுவதற்கான சந்தர்ப்பமாகவும் இது அமைந்துள்ளதுஎன்றார். (அ)

# ஆறுகால்மடம், ஆனைக்கோட்டை வீதிகளுக்கு மின்விளக்கு பொருத்துக

(யாழ்ப்பாணம்)

ஆறுகால்மடம், ஆனைக்கோட்டை பகுதியில் உள்ள வீதிகளை செப்பனிட்டு மின்குமிழ்களையும் பொருத்துமாறு அப்பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இக்கோரிக்கையடங்கிய மகஜர் ஒன்று யாழ். மாநகரசபைக்கும் நல்லூர் பிரதேச சபைக்கும் அனுப்பப்படவுள்ளதாக மக்கள் தெரிவித்தனர்.

யாழ்.மாநகரசபைக்குட்பட்ட வீதியான ஆறுகால்மடம் ஆனைக்கோட்டை பழம் வீதி மிகவும் சேதமடைந்து வருவதனால் இதனை செப்பனிட்டு தருமாறும் இவ்வீதிக்குரிய மின்குமிழ்களைப் பொருத்தி தருமாறும் இம்மக்கள் கோரிக்கை ஒன்றை விடுத்துள்ளனர்.இவ் வீதியின் இரு பக்கங்களும் மிக மோசமாக சேதமடைந்து வருவதனால் காலப்போக்கில் இவ்வீதி முழுவதுமே அழிந்துவிடும் நிலை காணப்படுவதாகவும் இம்மக்கள் தெரிவிக்கின்றனர்


இவ்வீதிக்கும் வண்ணார்பண்ணை குருசு மதவடிப் பகுதிக்கும் மின்குமிழ்கள் பொருத்தப்படாமையால் இரவு வேளைகளில் அவ்வீதிகளில் பயணிப்பது மிகவும் சிரமமாகவுள்ளது என அவர்கள் மேலும் தெரிவிக்கின்றனர்.நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட பெரும்பாலான வீதிகளில் வீதி மின்விளக்குகள் பொருத்தப்பட்டுள்ள போதிலும் குறித்த பகுதியில் மின்விளக்கு பொருத்தப்படவில்லை எனவும் குறித்த இடத்தில் யா/உயரப்புலம் மெதடிஸ்த மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலையும் கண்ணகை அம்மன் ஆலயம் ஒன்றும் உள்ளதாகவும் இவற்றைக் கருத்திற் கொண்டு பிரதேச சபையினர் பொருத்தமான இடத்தில் வீதி மின் விளக்குகளை பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-4)


வடமாகாண சபைத் தேர்தல் 2013


கிளிநொச்சி மாவட்டம்

அகிம்சையையும் சகிப்புத் தன்மையையும்
மேம்படுத்தும்
"யுனேஸ்கோ" விருது பெற்ற இலங்கையின்
ஒரே ஒரு அரசியல்வாதி

வீ. ஆனந்தசங்கரி


தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு (இலங்கைத் தமிழரசுக் கட்சி)


X 2

(EC-4906)


## அறிவித்தல்

மானிப்பாய் கிராம உப அலுவலகம் (ஆனைக்கோட்டை)

வட்டாரம்:- 14,ஆதன இலக்கம்:-149, கல்வளை றோட்

வட்டாரம் 14, கல்வளை றோட், சண்டிலிப்பாய் ஆதன இலக்கம் 149 இல் அமைந்துள்ள (உறுதிப்படி வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம் வலிகாமம் மேற்குப்பகுதி மானிப்பாய், கோவில்பற்று சண்டிலிப்பாய் இறை வலைச்சபதியும் முடவன் பனையும் வடலித் தோட்டமும் சாத்தா வலையும்) என்னும் பெயருள்ள விஸ்தீரணம் நாலு 4 கொண்ட ஆதனம்) இவ் ஆதனமானது கல்வளை வீதி சண்டிலிப்பாய் றோட்டைச் சேர்ந்த சண்முகராசா பெண் இராஜேஸ்வரி என்பவர்களால் சீதன உறுதி மூலம் சண்டிலிப்பாயைச் சேர்ந்த கருணாகரன் பெண் சுகந்தி என்பவருக்கு குறித்த ஆதனம் பிரசித்த நொத்தாரிஸ் மா. தியாகராசா முகதாவில் நிறைவேறிய 10867 ஆம் இலக்க 2009.03.25 ஆம் திகதிய அறுதி உறுதி மூலம் குறித்த ஆதனமானது தமக்கு சொந்தம் என தெரியப்படுத்தி எமது மானிப்பாய் கிராம உப அலுவலக (ஆனைக்கோட்டை) ஆதனப்பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளார்.

இவ் வலைச்சபதியும் முடவன் பனையும் வடலித்தோட்டமும் சாத்தா வலையும் நிலப்பரப்பு 4 இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர்கள் யாராவது இருந்தால் அவ்வுரிமையை உறுதிப்படுத்தும் உறுதிகள் ஆவணங்களுடன் எழுத்து மூலமாக 14 நாட்களுக்குள் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன். அவ்வாறு யாராவது எவ்வித உரிமையும் 14 நாட்களுக்குள் கோரப்படாத விடத்து இவ்வாதனம் கருணாகரன் பெண் சுகந்தி என்பவர் பெயருக்கு மேற்குறித்த ஆதனத்தினை பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

தவிசாளர், வலி.தென்மேற்கு பிரதேசசபை,
மானிப்பாய்.

(3653)

## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1985 இந்து(V)<br>நட்சத்திரம்: பூராடம் 3<br>கி.பா : 7.75 செவ் 12<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: கணனி பொறியியலாளர்<br>UK Citizen<br>தொ.இ:B2269 | பிறப்பு: 1980 இந்து(V)<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா : 62 செவ் 7<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: பட்டதாரி ஆசிரியை<br>தொ.இ:G1079 |
| பிறப்பு: 1980 இந்து(Pa)<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா :24.25 செவ் 12<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்: A/L<br>சாரதி (அரச)<br>தொ.இ:B2270 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி 4<br>கி.பா :33.25<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: MBBS<br>தொ.இ:G1081 |
| பிறப்பு: 1981 இந்து(V)<br>நட்சத்திரம்: மூலம் 4<br>உயரம்: 5'9" சூ,செவ் 4<br>தகைமை/தொழில்: Quantity Surveyor<br>Assisist Engineer<br>கட்டார்<br>தொ.இ:B2271 | பிறப்பு: 1989 இந்து(V)<br>நட்சத்திரம்: கேட்டை 4<br>கி.பா : 29.5 செவ் 8<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: BA<br>தொ.இ:G1084 |
| பிறப்பு: 1987 இந்து(V)<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி 3<br>உயரம்: 5'5" செவ் 12<br>கி.பா : 49.25<br>தகைமை/தொழில்: லிகிதர<br>அரச தொழில்<br>தொ.இ:B262 | பிறப்பு: 1983 இந்து(V)<br>நட்சத்திரம்: பூரட்டாதி 3<br>கி.பா : 10.75<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: BSc<br>சுவீடன் PR<br>தொ.இ:G1087 |

சகல தொடர்புகளுக்கும்:-

**கல்யாண மாலை**

(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )

ஊடக அனுசரணை வலம்புரி





புதிய சுவை! புதிய அநுபவம்! புதிய தொழில்நுட்பம்!

அதிநவீன Pasteurized And Homogenized முறைப்படி தயாரிக்கப்பட்ட 100% சுகாதாரமான ஊட்டச்சத்துக்கள் நிறைந்த ஐஸ்கிறீம் வகைகள் எமது அறிமுக விலையில் நல்லூர் விற்பனை நிலையத்தில் சுவைத்து மகிழலாம். பெறுமதி மிக்க பரிசில்கள் உங்களுக்காக காத்திருக்கின்றன.

ஷைலோ ஐஸ்கிறீம்

No.231 , Temple Road, Nallur, Jaffna.
T.P. 021 4926003

(3587)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## வெறி நோய் (Rabies)

ஒருவர் மிகவும் அமைதியானவர். எப்பொழுதும் மிக மெதுவாகத்தான் நடப்பார்.

எப்பொழுதும் சிரித்த முகம். அப்படிப்பட்ட மனிதர் ஒரு நாள் தலைதெறிக்க ஓடி வந்து கொண்டிருந்தார்.

விடயம் என்னவென்றால்... ஒரு வெறிநாய் அவரைத் துரத்திக் கொண்டிருந்தது. வெறி நாயென்றால் அவ்வளவு பயம்.

வெறி பிடித்த நாய் கடித்து விட்டால் அது மிகவும் ஆபத்தான விடயம். இருந்தாலும் எச்சரிக்கையாக இருந்தால் தப்பித்துக் கொள்ளலாம்.

வெறிநாய் கடித்து விட்டால் உடனே டாக்டரிடம் போய் ஊசி போட்டுக் கொள்வதுதான் நல்லது.

வெறி பிடித்த நாய் 10 நாட்களுக்கு மேல் உயிரோடு இருக்காது.

முன்பெல்லாம் வயிற்றில் தொப்புளைச் சுற்றி 14 ஊசி போட்டுக் கொள்ள வேண்டும். இப்பொழுது வெறும் 6 ஊசி தான். அதுவும் தோள் பட்டையில் போட்டுக் கொண்டால் போதும் அதை விட சுலபமான மருந்துகூட வந்து விட்டது.

நாய், பூனை, மாடு, குதிரை, ஆடு இவற்றுக்கெல்லாம் கூட வெறி பிடித்த பிராணி கடித்தால் அல்லது அதன் நகக்கீறல் ஏதாவது ஏற்பட்டிருந்தால் நாம் செய்ய வேண்டிய முதலுதவி என்ன தெரியுமா?

காயத்தை அதிகளவு தண்ணீர் ஊற்றி சவர்க்காரம் போட்டு கழுவ வேண்டும். அதன் பின்னர் ஏதாவது கிருமி நாசினி அல்லது ஸ்பிறிட் தடவ வேண்டும்.

இன்னொரு முக்கியமான விடயம்- காயத்துக்குக் கட்டுப் போடக் கூடாது. அதைத் திறந்தே வைக்க வேண்டும். உடனே டாக்டரிடம் செல்ல வேண்டும்.

வெறிநோய் என்பது விலங்குகள் மூலமாக மனிதர்களுக்கு பரவக்கூடிய ஒரு வைரஸ் கிருமியால் ஏற்படும் நோய்.

1885 ஆம் ஆண்டு பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த லூயி பாஸ்டர் என்பவர்தான் வெறிநோய் தடுப்பு மருந்தைக் கண்டுபிடித்தார்.

முதல் தடவையாக ஜோசப்மெய்ஸ்டர் என்ற சிறுவனுக்குத் தான் இத் தடுப்பூசியை ஏற்றி வெறி நோயிலிருந்து அச் சிறுவனைக் காப்பாற்றினார்.

அவரைக் கௌரவிக்கும் வகையில் அன்று முதல் வெறி நோய்த் தடுப்பூசிக்கு பாஸ்டர் வெறிநோய்த் தடுப்பூசி என்ற பெயர் ஏற்பட்டது. பல பாஸ்டர் நிறுவனர்கள் உலகம் முழுவதும் உருவாகியது. முதலாம் உலகப்போர் நடந்த சமயத்தில் நாசிக் கூட்டத்தார் பாஸ்டர் நிறுவனத்தை இடித்து தரை மட்டமாக்க முயன்றனர்.

அப்பொழுது அங்கே வாயில் காப்பாளராக இருந்த ஒரு வீரன் அந்த நிறுவனத்தைக் காப்பாற்றும் முயற்சியில் தன் உயிரைத் தியாகம் செய்தான். அவர் யார் தெரியுமா?

அவர்தான் முதன் முதலில் வெறி நோயிலிருந்து லூயி பாஸ்டரால் காப்பாற்றப்பட்ட சிறுவன் ஜோசப் மெய்ஸ்ட்டர்.

இப்பொழுது நவீன மருந்துகளெல்லாம் இருந்தும்கூட கவனக்குறைவால் உயிர் இழப்பவர்கள் அதிகம்.

ஒருவன் ஓடி வந்தான். என்னை ஒரு வெறி நாய் கடித்து விட்டது என்றான்.

"சரி.. அப்படியானால் உன்னைக் கடித்த நாய் எதுவென்று உன்னால் அடையாளம் காட்ட முடியுமா?"

"எப்படி" என்று கேட்டார்.

"அந்த நாய் என்னைக் கடிப்பதற்கு முன் ஜாக்கிரதையாக அதன் காதை கடித்து விட்டேன். இதே பையில் தான் வைத்திருக்கிறேன்." என்று சொல்லி எடுத்துக் காட்டினான்.

*தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

# புகையிரத பாதை நிர்மாணப் பொருட்களை திருடி விற்ற இருவர் பொலிஸாரால் கைது

(யாழ்ப்பாணம்)

புகையிரத பாதை நிர்மாணப் பொருட்களை திருடி விற்பனை செய்த நாட்டின் தென்பகுதியைச் சேர்ந்த இருவரை யாழ். பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

தென்பகுதியைச் சேர்ந்த ஒப்பந்த காரர் ஒருவர் உரும்பிராய் பகுதியிலுள்ள சீன நாட்டு புகையிரத நிறுவனத்திடம் புகையிரத பாதையை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தமொன்றை செய்துள்ளார்.

இவ் ஒப்பந்தத்தின் அடிப்படையில் புகையிரத பாதையின் நிர்மாணப்பணிகளை அவரிடம் அந்த சீன நிறுவனம் கையளித்துள்ளது.

இதையடுத்து ஒப்பந்தத்தைபெறுப் பேற்றுக் கொண்டவரும் அவருடைய சகாவும் இணைந்து புகையிரதபாதை புனரமைப்பிற்கான பொருட்களை திருடியதுடன் 64 ஆயிரம் ரூபா பெறுமதியான ரயில் தண்டவாளங்களையும் உபகரணப் பொருட்களையும் குறைந்த விலையில் விற்று பணமும் பெற்றுள்ளனர்.

ஒப்பந்தகாரரின் திருட்டு வெளிப் பட்டதையடுத்து ஒப்பந்தத்தை அவரிடமிருந்து சீன நிறுவனம் மீள பெற்றதுடன் அவ் ஒப்பந்தகாரருக்கு எதிராக யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளது.

இம் முறைப்பாட்டை அடுத்து நேற்று முன்தினம் தென்பகுதியை சேர்ந்த ஒப்பந்தகாரரும் அவரது உதவியாளரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர் என யாழ். பொலிஸ் நிலைய சிறு குற்றத் தடுப்பு பிரிவு பொலிஸ் பொறுப்பதிகாரி டபிள்யூ.எல். விக்கிரமராச்சி தெரிவித்தார். (அ-4)

# வடமராட்சி பிரதேசத்தில் மீற்றர் வட்டி அதிகரிப்பு

(கரணவாய்)

வடமராட்சி பிரதேசத்தில் மீற்றர் வட்டிக்கு பணம் கடனாக கொடுப்பது அதிகரித்துள்ளதாக பாதிக்கப்பட்டோர் கவலை வெளியிட்டுள்ளனர்.

இப்பிரதேசத்திலுள்ள நெல்லியடி குஞ்சர் கடை, கொடிகாம வீதி, மூடைக்காட்டு பகுதியினர் மீற்றர் வட்டிக்கு பணம் கொடுப்பது அதிகரித்துள்ளது. இந்த நிலையில் மீற்றர் வட்டிக்கு பணத்தைப் பெற்றுக் கொண்ட வர்த்தகர்கள் பணத்தை மீளச் செலுத்த முடியாது திண்டாடி வருகின்றனர்.

மீற்றர் வட்டிக்கு பணம் கொடுப்பவர்களுக்கு அன்றாடம் வருகை தந்து உழைக்கும் பணத்தை முதலுக்கு தமது வட்டியாக பெற்றுச் செல்வதால் தமது வாழ்வாதாரத்தை கொண்டு செல்ல முடியாத நிலைக்குட்பட்டுள்ளதாக வர்த்தகர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

எனவே மீற்றர் வட்டிக்கு பணம் கொடுக்கும் நடைமுறையை இல்லாதொழிக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென பாதிக்கப்பட்டோர் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-9-60)

# நவநீதம்பிள்ளை இலங்கைக்கு எதிராக அறிக்கை சமர்ப்பிப்பார்

## ஜே.வி.பி.தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கம் செய்யும் குற்றச்செயல்களுக்கு ஜே.வி.பி.மீது பழிசுமத்துவதை எம்மால் ஏற்றுக் கொளீள முடியாது.

குற்றவாளிகளிடமே பரிசீலனை நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி அரசாங்கம் பணித்துள்ளது. தவறிழைத்த இராணுவத்தினரே இன்று வெலிவேரிய சம்பவம் தொடர்பில் பரிசீலனை மேற்கொள்கின்றார்கள் என்பதை ஏற்றுக்கொள்ள முடியாதென ஜே.வி.பி யின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

மேலும் இலங்கையின் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை அரசாங்கத்துக்கு எதிரான அறிக்கையை சமர்ப்பிப்பார் எனவும் அவர் தெரிவித்தார்.

பத்தரமுல்லையில் அமைந்துள்ள ஜே.வி.பியின் தலைமை காரியாலயத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (அ)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 40 | 50 | 60 | 40 |
| உருளைக்கிழங்கு | 80 | 90 | 100 | 90 |
| பச்சைமிளகாய் | 70 | 60 | 100 | 80 |
| தக்காளி | 50 | 40 | 60 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 60 | 40 |
| கோவா | 60 | 70 | 100 | 100 |
| கரட் | 60 | 80 | 120 | 120 |
| பூசணி | 30 | 30 | 40 | 40 |
| புடோல் | 30 | 40 | 40 | 50 |
| வாழைக்காய் | 60 | 50 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 160 | 150 | 140-160 | 160-200 |
| பெரிய வெங்காயம் | 140 | 100 | 120 | 120 |
| பாகற்காய் | 60 | 60 | 60 | 80 |
| வெண்டிக்காய் | 40 | 40 | 40 | 40 |
| கருணைக் கிழங்கு | 100 | 80 | 80 | 100 |
| பயற்றங்காய் | 160 | 160 | 120 | 80 |
| லீக்ஸ் | 60 | 100 | 120 | 140 |
| பீற்றூட் | 20 | 30 | 40 | 40 |
| கறிமிளகாய் | 60 | 60 | 80 | 80 |
| முருங்கைக்காய் | 40 | 80 | 120 | 80 |
| போஞ்சி | 160 | 160 | 100 | 160 |
| கத்தரிதம்புள்ள | — | — | — | — |
| கீரை - 1 பிடி | 10 | 20 | 30 | 20 |
| தேசிக்காய் | 350 | 240 | 300 | 320 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 50 | 40 | 30-40 |
| இராசவள்ளி | 100 | 90 | 120 | 120 |

# இராசி பலன்

21.08.2013

(ஆவணி 05, புதன்கிழமை)

சூரிய உதயம் காலை 6.04 மணிக்கு

பூரணை மாலை 8.20 மணிவரை

அவிட்டம் பிற்பகல் 1.21 மணிவரை

இராகுகாலம் 12.05-1.35. மணிவரை

சுபநேரம் 4.35-6.05 மணிவரை

நல்லூர் கந்தன் மஞ்சம்

**மேடம்** ஆனந்தமான நாள், ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு இடம்பெறலாம், குடும்பத்தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வீர்கள், மதிப்பும் மரியாதையும் உயரும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள்

**இடபம்** சொல்லை செயலாக்கி காட்ட முன்வருவீர்கள், சமுதாயத்தில் உயர்ந்த நிலைக்கு வரத் தோன்றும், அரை குறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், போசன நன்மையுண்டு.

**மிதுனம்** பகை விலகி பாசம் கூடும் நாள், ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும், திடீர் பயணங்களால் நன்மையுண்டு, ஆற்றோர் சந்திப்புண்டு, புதிய திட்டங்கள் கைகூடும்.

**கடகம்** கவலைகள் தீர கந்தனை வழிபட வேண்டிய நாள், நேசித்த ஒருவ ருடன் யோசித்துப் பேசும் சூழ்நிலை உருவாகும், வேலைச் சுமை கூடும், போசன சுகமுண்டு, உடல் நலனில் கவனம் எடுக்க வேண்டிய நாள்.

**சிங்கம்** சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், மனதிற்கினிய சம்பவமொன்று இடம்பெறலாம், குடும்பத்தில் அந்நியோன்னியம் அதிகரிக்கும், தொலைபேசி வழித்தகவல் மகிழ்ச்சி தரும்.

**கன்னி** செய்தொழில் மேன்மையுண்டு, உள்ளன்போடு பழகியவர்களின் எண்ணிக்கை கூடும், வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும்.

**துலாம்** சேமிப்பை உயர்த்தும் எண்ணம் மேலோங்கும், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, பிள்ளைகளால் பெரு மைப்படுவீர்கள், கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள்.

**விருச்சிகம்** நண்பர்கள் சந்திப்பால் நன்மையுண்டு, புதிய பொருட்கள் வாங்கும் எண்ணம் மேலோங்கும், கல்வியில் ஆர்வம் காட்டுவீர்கள், பயணங்களால் பலனுண்டு.

**தனுசு** ஆரம்பத்தில் அச்சுறுத்தலாகத் தோன்றிய தகவல் முடிவில் ஆதாயத்தை கொடுக்கலாம், உடன் பிறப்புக்கள் உதவி செய்ய முன்வரலாம், கூட்டு முயற்சி வெற்றி தரும்.

**மகரம்** புதிய முயற்சி ஒன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம், தொலைபேசித் தகவல் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணை புரியும், வருமானம் திருப்தி தரும்.

**கும்பம்** விருப்பங்கள் நிறைவேற கந்தனை வழிபட வேண்டிய நாள், தொழிலில் மேலதிகாரிகளை அனுசரித்து செல்வது நல்லது, போசன சுகமுண்டு, விரயங்கள் கூடும்.

**மீனம்** உறவினரின் அன்புத் தொல்லைக்கு ஆளாகலாம், மூத்த சகோதரர்கள் உங்களின் முன்னேற்றத்துக்கு வழி வகுப்பர், சயன சுகக் குறைவுகள் ஏற்படலாம், சுப செலவுகள் அதிகரிக்கும்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செல்வச்சந்நிதி முருகன் ஆலய தீர்த்தத் திருவிழா -2013.08.21


## கஜமுகன் ஹாட்வெயர்



கட்டடப்பொருட்கள், மிற்சுயி, நிப்போன் சீமெந்து, Akzonobel பெயின்ற் வகைகள் (எமர்சன், எனமல், நிக்கோல், டியூகோ)நஷனல் பி.வி.சி. (National PVC) குழாய்கள் மற்றும் எமது நிறுவனத்தால் யாழ்ப்பாணத்தில் தயாரிக்கப்பட்ட தரமான முட்கம்பிகள் என்பவற்றை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்.

147, 149 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

தொ.பே.இல.:-021 222 2833

## கிருபா லேணர்ஸ்

(அரச அங்கீகாரம் பெற்ற சாரதி பயிற்சிப் பாடசாலை)

குறிப்பிட்ட காலப் பகுதியில் விரைவாக சாரதி அனுமதிப் பத்திரம் வழங்கப்படும்
எழுத்துப் பரீட்சையில் சித்தி அடைய விசேட வீதி ஒழுங்கு வகுப்புகள் நடைபெறும்.
தாம் விரும்பிய நேரங்களில் வாகன பயிற்சி வழங்கப்படும்



தலைமைக் காரியாலயம்,
226, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.இல். 021 2224353

கிளை-ஏ9 வீதி, சாவகச்சேரி,
தொ.பே.இல.021 4923202,
0213201818

கிளை-கிளிநொச்சி
தொ.பே.இல.0212285505

கிளை-நெல்லியடி
தொ.பே.இல.0213006550

கிளை-விசுவமடு
தொ.பே.இல.0213201515

கிளை-சுன்னாகம்
கே.கே.எஸ்.வீதி, மதவடி முன்பாக
தொ.பே.இல.021 2242022,
0714546956

எட்டுத்திக்கும் வலம்வரும் வலம்புரிக்கு எமது வாழ்த்துக்கள்



## ஆர். வி.ஜி R.V.G

மருந்தகம்
504, ஆஸ்பத்திரி வீதி, (O.P.D முன்பாக) யாழ்ப்பாணம்.
தொ.பே.இல: 021 222 2129

ஆங்கில மருந்து வகைகள், ஊட்டச்சத்துக்கள்
மற்றும் பால்மா வகைகள் அனைத்தையும்
நியாயமான விலையில் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்

ஸ்தாபனம்
58, நல்லூர் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.
தொ. பே. இல : 021 222 6806

இடர்கள் பல கடந்து வீறு நடைபோடும் வலம்புரிக்கு எங்கள் இதயம் கனிந்தவாழ்த்துக்கள்

## V.S.P லக் இயில்

தயாரிப்பாளரும்
ஏக விநியோகஸ்தரும்
பரிமளா ஸ்ரோர்ஸ்

இல:26 A, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 0212224135, 0212229165


## அழகே உன் அழகு



மயிலேறி வருமுன் அழகே அழகு
மரகதமே அழ்கா முருகா!
மாம்பழத்திற்கு சண்டையிட்டு ஆண்டியாய்
மலையேறி நின்றாயே வேலவா!
இருள் கொண்ட சூரனை வதம் செய்து
ஒளியேற்றி வைத்தவனே குமரா!
சந்நிதியான் வீதியிலே வலம் வந்து
நம்மவர்க்கு நல்லருள் வழங்கிடுவாய் கந்தனே!

மாவை நா.கஜேந்திரன்

## ஆன்மீக அருளுரை

(யாழ்ப்பாணம்)

சின்மயா மிஷன் வதிவிட ஆச்சாரியார் பிரம்மச்சாரி ஜாக்கிரத சைதன்ய சுவாமிகள் வழங்கும் வாழ்க்கையின் குறிக்கோள் என்னும் தலைப்பிலான அருளுரை நல்லூரிலுள்ள மகேஸ்வரன் மணி மண்டபத்தில் இன்று இரவு 7.15 மணிமுதல் 7.45 மணிவரை இடம்பெறுமென யாழ். சின்மயா மிஷன் அறிவித்துள்ளது.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமராட்சி பிரதேசத்தில் தேர்தல் சுவரொட்டிகள்

(கரவெட்டி)


வடமராட்சி பிரதேசத்தில் அரசியல் கட்சிகளின் தேர்தல் கொடிகளும், கட்டவுட்டுக்களும் வைக்கப்பட்டிருப்பதைப் பொலிஸார் கண்டு கொள்ளாதிருக்கின்றனர்.

வடமாகாண சபைத் தேர்தல் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 21 ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில், தேர்தலில் போட்டியிடும் கட்சிகளின் பிரசார நடவடிக்கைகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

இந்நிலையில் அரச கட்சிகளின் வேட்பாளர்களின் கட்டவுட்டுக்கள் மற்றும் கொடிகள் வடமராட்சி பிரதேசங்களில் தேர்தல் விதிகளை மீறி வைக்கப்பட்டுள்ளன.

நெல்லியடி நகரப் பகுதியில் கட்சி வேட்பாளர்களின் கட்டவுட்டுக்கள் ஆங்காங்கே வைக்கப்பட்டுள்ள போதும், அவற்றை அகற்ற நெல்லியடிப் பொலிஸார் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என சுட்டிக்காட்டப்படுகின்றது. (அ-9-24)




# யாழ்.மாநகர சுகாதார பகுதியால் வாய்க்கால்கள் சுத்திகரிப்பு





(யாழ்ப்பாணம்)

யாழ்.பண்ணைப் பகுதியில் ரெலிக்கொம் அருகிலுள்ள நீரோடும் வாய்க்கால் சுத்திகரிக்கும் பணி நேற்று யாழ்.மாநகர சபையின் சுகாதாரப் பகுதியினரால் முன்னெடுக்கப்பட்டது.

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தாவின் அறிவித்தலுக்கு அமைவாகவே யாழ். மாநகர சபை எல்லைக்குட்பட்ட வாய்க்கால்கள் சுத்திகரிக்கும் பணிகள் நேற்றிலிருந்து ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

யாழ்.மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா மற்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் இணைப்பாளரும் முன்னாள் பராளுமன்ற உறுப்பினருமான கே.வி. குகேந்திரன் (வி.கே.ஜெகன்) உள்ளிட்டோரின் நேரடி கண்காணிப்பில் இந்த வாய்க்கால் புனரமைப்புடன் கூடிய சுத்திகரிப்பு பணிகள் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

யாழ்.பண்ணைப் பகுதியிலுள்ள கொட்டடி மீன் சந்தைப் பகுதியிலிருந்து ரெலிக்கொம் அருகாக செல்லும் சுமார் 3 கிலோமீற்றர் தூரமுடைய மேற்படி வாய்க்கால் கடலைச் சென்று அடை யும் பகுதிவரை சுத்திகரிக்கும் பணி நேற்று ஆரம்பிக்கப்பட்டது.

இதேவேளை, இன்று காலை யாழ்.காந்தி வீதி ஓரமாகவுள்ள அதாவது யாழ். போதனா வைத்தியசாலைக்கு முன்பாகவும் யாழ்.பொலிஸ் நிலையத்திற்கு அருகாகவும் செல்லும் கழிவு நீரோடும் வாய்க்கால் சுத்திகரிக்கும் பணி யாழ்.மாநகரசபை சுகாதாரப் பிரிவினரால் முன்னெடுக்கப்படவுள்ளது என அமைச்சரின் இணைப்பாளர் வி.கே. ஜெகன் தெரிவித்தார்.

இதுதவிர யாழ். மாநகர சபை எல்லைக்குட்பட்ட வாய்க்கால்கள் அனைத்தும் குறுகிய காலப்பகுதிக்குள் சுத்திகரிக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

யாழ்.மாநகர சபையின் ஆட்சிக்காலம் மேலும் ஒரு வருடம் நீடிக்கப்பட்டமையால் இது போன்ற பல நடவடிக்கைகளை முன்னெடுக்க கூடியதாக இருப்பதாகவும் தொடர்ந்து அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்கத் தாம் தயாராகவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)

## சஞ்சிகைக்கு ஆக்கங்கள் கோரப்படுகின்றன

(கரணவாய்)

முதியோர் தினத்தை முன்னிட்டு கரவெட்டி முதியோர் செயலகத்தினால் வெளியிடப்படவுள்ள சஞ்சிகைக்கு ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன.

முதியோர் தொடர்பான கவிதைகள், கட்டுரைகள் என்பனவற்றை எழுதி இன்று புதன் கிழமை முதல் கரவெட்டி பிரதேச செயலகத் திலுள்ள சமூக சேவைப் பிரிவில் சமர்ப்பிக்க முடியுமென பிரசேத செயலர் எஸ். சிவசிறி தெரிவித்துள்ளார். (அ-9-60)

## வல்லைவெளி நீர்ப்பரப்பில் வெளிநாட்டு பறவைகள்



வடமராட்சி வல்லை வெளி நீர்ப்பீரப்பில் வெளிநாட்டு பறவைகள் பல தற்போது அதிகளவில் தங்கியுள்ளன.

தெற்காசிய நாடுகளிலிருந்து காலநிலை மாற்றம் காரணமாக இலங்கைக்கு புலம் பெயரும் இப் பறவைகளே வல்லைவெளி நீரேரியில் அதிகளவாக தங்கியுள்ளன. இப்பறவைகள் மேலும் சில மாதங்கள் இங்கு தங்யிருந்து, பின்னர் வேறு நாடுகளுக் குச் சென்று விடுவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

வல்லைவெளி கடல்நீரேரியின் நீர் தற் போது குறைவடைந்துள்ள நிலையில் இப் பறவைகள் கூட்டம் கூட்டமாக பறந்து திரிவதை இங்கு காணமுடிகிறது. (அ-9-24)

# விவசாய கடனை மீளச்செலுத்த எட்டுமாதகால அவகாசம்

## வழங்கியது இலங்கை வங்கி

(பருத்தித்துறை)

வாதரவத்தை பிரதேசத்தில் விவசாயக் கடனைப் பெற்று மீளச் செலுத்த முடியாது அல்லலுறும் மக்களுக்கு அக் கடனை செலுத்த மேலும் எட்டுமாதகால அவகாசத்தை கோப்பாய் இலங்கை வங்கி வழங்கியுள்ளது.

மேற்படி வங்கியாளர்களினால் கடந்த ஞாயிற்றுக்கிழமை வாதரவத்தை கிராமத்தில் கடன் திட்டம் தொடர்பான கூட்டமொன்று நடத்தப்பட்டது.

இக்கூட்டத்திலேயே விவசாயிகளுக்கு கடனை மீளச் செலுத்த மேலும் எட்டு மாதகால அவகாசம் வழங்கப்பட்டது.

வாதரவத்தை கிராம மக்களின் விவசாய பயிர்கள் கடந்தவருடம் பெருமளவு அழிந்தமையினால், விவசாயிகள் தமது முதலீட்டை முற்றாக இழந்திருந்தனர்.

இதனால் அவர்கள் வங்கிகளில் பெற்ற கடனை மீளவும் செலுத்தமுடியாத நிலையில் அவதியுற்றனர்.

இவ்விடயத்தை கிராம மக்கள் ஈ.பி.டி.பி. கட்சியின் பிரதேச அமைப்பாளர் ஐங்கரனிடம் எடுத்துரைத்தனர்.

அமைப்பாளர் வங்கியாளர்களிடம் கலந்துரையாடிய பின்னரே இக் கால அவகாசம் அவர்களுக்கு வழங்கப்பட்டது. (அ-9-10)

# யாழ்.நகரை சுத்தமாக வைத்திருக்க வர்த்தகர்களும் ஒத்துழைக்க வேண்டும்

## யாழ்.மாநகரசபை முதல்வர் கோரிக்கை

யாழ்.மாநகரத்தை அழகாகவும் சுத்தமாகவும் வைத்திருக்க பொதுமக்கள் மற்றும் வர்த்தகர்களின் ஒத்துழைப்பு தேவைப்படுகின்றது என யாழ்.மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா தெரிவித்துள்ளார்.

அத்தோடு வர்த்தகர்கள் மற்றும் பொது மக்கள் வீதிகளில் வீட்டுக் கழிவுப் பொருட்கள் வீசுவதை தவிர்த்துக் கொள்ளுமாறும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

யாழ்.மாநகரத்தை சுத்தமாக வைத்திருக்க வேண்டுமென்ற நோக்கோடு நாம் வேலைத் திட் டங்களை மேற்கொண்டு வருகின்றோம்.

இதற்கென பல மில்லியன் ரூபா பணம் செல விடப்படுவதோடு பல நூற்றுக்கணக்கான தொழிலாளர்களும் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர்.

இருப்பினும் பொதுமக்கள் மற்றும் வர்த்தகர்களின் போதியளவு ஒத்துழைப்பு இல்லாமையால் நகரத்தை சுத்தமாக வைத்திருக்க எடுக்கப்படும் முயற்சிகளுக்கு தடைகள் ஏற்படுகின்றன.

இதேவேளை, ஊடகங்களும் மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதை விடுத்து அரசியல் நோக்கத்தோடு செய்திகளை வெளியிடுகின்றன.

யாழ்.மாநகர சபையின் சுகாதாரப் பிரிவினர் இரவு பகலாக யாழ்.நகரப்பகுதி உள்ளிட்ட பகுதி களை சுத்திகரிப்பு செய்து வருகின்றனர் எனவும் வெளியிடங்களிலிருந்தும் யாழ். நகரப் பகுதிக்குள் அதிகளவான கழிவுப் பொருட்கள் கொண்டு வரப் பட்டு குவிக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

எனவே, இந்த விடயத்தில் பேருந்து சாரதிகள் மற்றும் நடத்துநர்கள் ஆகியோர் கூடுதல் கவன மெடுத்து செயற்படவேண்டுமெனவும் நகரத்தை சுத்தமாக வைத்திருக்க அனைவரும் ஒத்து ழைப்பு வழங்க வேண்டுமெனவும் அவர் கோரிக்கை விடுத்தார். (அ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெய்வீக சுகானுபவம்-II செப்டெம்பர் நான்காம் திகதி முதல்




இந்திய-இலங்கை அறக்கட்டளை அமையத்தின் (India- Sri Lanka Foundation) ஆதரவுடன் யாழ்ப் பாணத்திலுள்ள இந்தியத் துணைத் தூதரகமும் வ்டமாகாண சபையின் கல்வி பண்பாட்டலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சும் மற்றும் சுவானுபவா விழாக்குழுவும் இணைந்து தெய்வீக சுகானுபவம் II-2013 நிகழ்வை எதிர்வரும் செப் டெம்பர் மாதம் 4 ஆம் திகதி முதல் 6 ஆம் திகதி வரை யாழ்ப்பாணத் தில் நடத்தவுள்ளன என யாழ். இந் தியத் துணைத் தூதுவர் வி. மகா லிங்கம் தெரிவித்தார்.

இந்த கலாசார நிகழ்வு நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த உற் சவ காலத்தின்சமகாலத்தில்சென்னை சுவானுபவா விழாக்குழு ஒருங்கி ணைப்புடன் புகழ்பெற்ற கர்நாடக இசைப்பாடகர் திருமதி சுதா. ரகுநா தன், பரதநாட்டிய கலைஞர் லீலா சாம்ஸன் மற்றும் கர்நாடக சங்கீத கலைஞர் ரி.எம்.கிருஷ்ணா ஆகி யோரைக் கொண்ட இந்திய இசை மற்றும் நடனக் குழுக்கள் இசை நடன நிகழ்வுகளை நடத்த வுள் ளன.

இப் பிரபல கலைஞர்கள் தாம் யாழ்ப்பாணத்தில் தங்கவுள்ள கால த்தில் வடமாகாண பாடசாலை மாண வர்களுக்கும் மற்றும் குரலிசை, நடன துறைகளில் ஆர்வமுள்ள ஏனையோருக்கும் பயிலரங்கு களை நடத்தவும் திட்டமிட்டுள்ளன.

இவ்விழா சுகானுபவம் I எனும் பெயரில் கடந்த 2012 ஆம் ஆண்டில் ஓகஸ்ட் மாதம் நடத்தப் பட்ட நிகழ்வின் தொடர்ச்சியாக நடத் தப்படும் இரண்டாம் கட்ட நிகழ்வா கும்.

இதில் லீலா சாம்ஸனால் வழங் கப்படும் பரத நாட்டிய பயிலரங்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் எதிர் வரும் செப்டெம்பர் மாதம் 4 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 11.30 மணிக்கும் லீலா சாம்ஸன் பங்கு பெறும் பரத நாட்டியம் நிகழ்வு யாழ். நல்லூர் சங்கிலியன் தோப்பிலும் மாலை 6 மணிக்கு இடம்பெறவுள் ளன.

அத்தோடு மறுநாள் வியாழக் கிழமை முற்பகல் 9.30 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் கர் நாடக இசைக் கலைஞர் திருமதி சுதா ரகுநாதனால் வழங்கப்படும் பயி லரங்கம் மாலை 6 மணிக்கு சங்கிலியன் தோப்பில் கர்நாடக இசைக் கச்சேரியும் இடம்பெறவுள் ளது.

இதில் கர்நாடக இசைக் கலை ஞர் சுதா ரகுநாதனும் பங்கேற்க வுள்ளார்.

இதேவேளை எதிர்வரும் செப் டெம்பர் மாதம் 6 ஆம் திகதி வெள் ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் தாள வாத்திய இசை மற்றும் பயிலரங் கும் இடம்பெறவுள்ளது. (அ-4-6)

# பேருந்து கட்டண அதிகரிப்பை ஆராய்வதற்கு உபகுழு அமைப்பு

அரசாங்க அனுமதியின்றி பேரு ந்து கட்டணங்களை அதிகரிக்கப் போவதாக தனியார் பேருந்து உரி மையாளர்கள் அறிவித்துள்ள நிலை யில் அதனைத் தடுக்கும் வகையி லான ஒரு அமைச்சரவை பத்திர த்தை தனியார் போக்குவரத்து சேவை கள் அமைச்சர் சீ.பி.ரத்னாயக்கசமர் ப்பித்துள்ளார்.

இந்தப் பிரச்சினை தொடர்பாக ஆராய்வதற்காக அமைச்சர்கள் மட்டத்திலான குழுவொன்று நியமிக் கப்பட்டுள்ளது. இந்த குழுவில் அமை ச்சர்களான சீ.பி.ரத்னாயக்க, குமார வெல்கம, தினேஷ் குணவர்த்தன, காமினி லொக்குகே மற்றும் சிரே ஷ்ட அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி ஆகியோர் உள்ளடங்குகின்றனர்.

மாகாண சபை தேர்தல் முடியும் வரை தாம் பேருந்து கட்டணத்தை அதிகரிப்பதை தடுக்கவே இந்தக் குழு அமைக்கப்பட்டுள்ளது என தனியார் பேருந்து உரிமையாளர் கள் சங்க தலைவர் கெமுனு விஜய ரத்ன தெரிவித்தார்.

அடுத்த நடவடிக்கைகள் பற்றி ஆராய்வதற்காக சகல தனியார் பேருந்து சங்கங்களின் பிரதிநிதிக ளும் கூடவுள்ளனரென அவர் மேலும் தெரிவித்தார். (அ)

# பக்தர்களை கலாசார உடை அணிய பணிப்பு

(பருத்தித்துறை)

வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் ஆலய மஹோற்சவம் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் ஆரம்பமாகவுள்ளமையால் உற்சவங்களில் கலந்து கொள்ளும் பக்தர்கள் தமிழின சமய கோட்பாடுகளுக்கும் கலாசாரத்திற்கும் அமைவாக ஆடைகளை அணிந்து வர வேண்டுமென ஆலய நிர்வாகம் அறிவித்துள்ளது.


அத்தோடு பக்தர்களின் பாதுகாப்புக்காக தங்க ஆபரணங்களை அணிவதையும் தவிர்த்துக் கொள்ள வேண்டுமெனவும் உற்சவ காலங்க ளில் விசேட போக்குவரத்துச் சேவைகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது எனவும் ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர். (அ-9-10)

# சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்டவருக்கு உதவி

சமூக சேவைகள் அமைச்சினால் யாழ். மாவட்டத்தில் முதன்முறையாக சிறுநீரக நோயினால் பாதிப்படைந்தவருக்கு மருத்துவச் செலவுக்காக 3600 ரூபா பணத்தொகை வழங்கப்பட்டுள்ளது.

கொற்றாவத்தை வல்வெட்டித்துறையைச் சேர்ந்த நாகரத்தினம் தணிகாசலம் என்பவருக்கு மருத்துச் செலவுக்காக இத்தொகை வழங்கப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-9-60)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை



## வேம்பு

**Botanical Name:- Azadirachta Indica**
**Family:-Meliaceae**
**Engl- Neem tree**
**Sinh-Kohambo**

இந்தியா, இலங்கையைச் சார்ந்த மரம். 20 மீற்றர் உயரம் வளரும் பெரிய பசுமை மாறா மரம், அடிமரம் செங்குத்தானது; இலைகள் இறகு கூட்டிலை ; கிளைகளின் நுனியில் தொகுப்பாக அமையும். 5 தொடக்கம்15 சிற்றிலைகள்; வாள் வடிவினமடல்; விளிம்பு ரம்பம் அல்லது பல் போன்றது; மலர்கள் வெள்ளை ; தேன் மணம் கொண்டவை ; நீளமான மஞ்சரியாக அமைந் தவை ; கனி ஒருவிதை கொண்டது; கனிந்த நிலையில் மஞ்சள் நிறம்; விதைகளில் எண் ணெய் காணப்படுகின்றது. வேப்ப மரத்தை **கிராமத்தின் மருந்தகம்** என்பர். பல நோய்க ளுக்கும் மருந்தாக உதவுகின்றது.

### இனவிருத்தியும் பரம்பலும்

யாழ்.மாவட்டத்தில் சர்வ சாதாரணமாக எங்கும், வீட்டுத்தோட்டங்களிலும் தானாக முளைத்து வளரக்கூடியது. பெருங்கிளைகளை வெட்டி வைத்து பயிராக்கலாம். வரண்ட காடு களில் எங்கும் இம்மரங்களை காணலாம். விதைகள்மூலமும் இனவிருத்தியடையும்.

### மருத்துவப் பயன்கள்

❖ குழந்தைகளுக்கு மாந்தம் ஏற்பட்டு மலம் வெள்ளையாக நுரையுடன் வயிற்றுப் போக்கு ஏற்பட்டால் வேப்பிலையை உருவி விட்டு 5, 6 ஈர்க்கு, நெல்லியிலை ஈர்க்கு, நுணர் இலை ஈர்க்கு இலைகளை எடுத்து இரண்டாகக் கிள்ளிப்போட்டு கசாயம் வைக்கவும். எப்போதும் மண்பாத்திரத்தில் கசாயம் அல்லது குடிநீர் வைப்பது நல்லது.ஓரளவு தண்ணீர் ஊற்றிக் காய்ச்சி பாதியளவாகச் சுண்டியதும் இறக்கி வடிகட்டி எடுத்து நான்கு மணிக்கு ஒரு தடவை யாக ஒரு தேக்கரண்டி அளவு கொடுக்க உடனே குணமாகும்.

❖ வேப்பெண்ணெய்யைச் சூடுபடுத்தி புண் கள் மீது தடவிவந்தால் அவை விரைவில் ஆறும்.

❖ வேப்பிலை, நெல்லி முள்ளி (உலர்ந்த நெல்லிக்கனி) இரண்டையும் ஒன்றாகச் சேர் த்து அரைத்து வெண்ணெய் கலந்து உடலில் பூசிக்கொண்டால் அக்கி மற்றும் அரிப்பு குண மாகும்.

❖ வேப்பங்கொழுந்து 2 கிராம் அளவு, கறி வேப்பிலை ஒரு கிராம் என்ற அளவில் ஒவ் வொரு நாளும் காலையில் உட்கொண்டு வந்தால் நீரிழிவு குணமாகும்.

❖ குழந்தைகளுக்கு ஏற்படும் சொறி, சிர ங்கு இவை நீங்க வேப்பங்கொழுந்தை மை போல அரைத்துத் தேய்த்து குளிக்க வைக்க வேண்டும்.

❖ வேப்பமரத்தில் இருந்து கொழுந்து இலை களைப் பறித்து மஞ்சள் சேர்த்து அரைத்து காயங்கள் மீது தடவினால் அவை விரைவில் ஆறும்.

❖ வயிற்றுப்போக்கு குணமாக வேப்பங் கொழுந்து 2 கிராம் அளவுடன் ஒரு கிராம் வெல் லம் சேர்த்து பிசைந்து காலை உணவுக்கு முன் பும் மாலையும் உட்கொண்டால் இரண்டு நாட்களில் வயிற்றுப்போக்கு நோய் குணமாகும்.



❖ வேப்பம்பூவுடன் மிளகு, சீரகம் சேர்த்து உண்டுவந்தால் உடற்சூடு தணியும்.

❖ வேப்பம்பூவை சேகரித்து அவற்றை நிழ லில் உலர்த்திய பின் பானையில் போட்டு மூடி வைக்கவேண்டும். 30 நாட்கள் கழித்து இதை எடுத்து இலேசாக வறுத்துக் கொள்ள வேண் டும். கறிவேப்பிலை காய்ந்ததை பூ அளவிற்கு இடித்து இதனுடன் சேர்த்துக் கொள்ள வேண்டும். இரண்டையும் மீண்டும் இடித்துச் சிறிது உப்பி ட்டுக் கொண்டு காலை உணவுக்கு முன் ஒரு தேக்கரண்டி உண்ண வேண்டும். இப்படிச் செய்து வந்தால் வாந்தி, குமட்டல், இழுப்பு, வயிற்றுப் பொருமல், வயிற்றுப் புழு சம்பந்தப்பட்ட நோய் கள் குணமடையும்.

❖ வேப்பிலை, பூ, பட்டை, உள்கட்டை, பிசின் இவை அனைத்தையும் சம அளவு எடுத்து பொடி த்து, தூளாக்கி, ஒன்றுபட நன்றாகக் கலந்து40 நாட்கள் காலை, மாலை 2கிராம் அளவு தேனுடன் கலந்து உட்[illegible] டன் நோய்களை அணுகவிடாமல் தடுக்கும்.

❖ வேப்பிலையை இடித்துச் சாறுஎடுத்து தேன் கலந்து குடித்துவந்தால் வயிற்றுப்பூச்சி கள் ஒழியும்.

❖ முற்றிய வேப்பமரத்தின் உள்பட்டையை எடுத்து நிழலில் காயவைத்து பொடியாக்கி, தினமும் ஒருவேளை பாலில் இரண்டு ஸ்பூன் கலந்து சாப்பிட்டு வந்தால் நரம்புத்தளர்ச்சி குணமாகும்.

❖ வேப்பிலையுடன் சிறிது மஞ்சள் சேர்த் தரைத்து சொறி, சிரங்கிற்கு பற்றிடலாம். இலையை அவித்த நீரைக்கொண்டு புண்களைக் கழுவி வந்தால் புண்கள் ஆறும்.

❖ வேப்பம்பூ, வெல்லம் இரண்டையும் ஒன்றா கக் கலந்து காய்ச்சி, அதைத் தலையில் தேய்த்துக் குளித்துவந்தால் பொடுகுப் பிரச்சினை இருக்காது.

❖ வேப்பிலை, துளசி இரண்டையும் சேர்த் துக் கொதிக்கவைத்து தலைக்குக் குளித்தால்



பேன், பொடுகுத் தொல்லை தீரும்.

❖ 100 கிராம் அளவுக்கு முற்றிய காய்களின் சதையைத் தட்டி எடுத்து தேங்காய் எண்ணெய் 300 கிராமில் போட்டு நன்றாக எரித்து இறக்கி புண், வீக்கம், தோலில் ஏற்படும் தடிப்பு மேல் பூசி வந்தால் விரைவில் குணமடையும்.

❖ வேப்பம் பருப்பு 200 கிராம், பச்சை வேப் பம் பட்டை 100 கிராம், வேப்பங்காயின் சதை 100 கிராம் மூன்றையும் தனித்தனியாக அரைத்து வைத்துக்கொள்ளவும். முதலில் ஒரு லீற்றர் தேங் காய் எண்ணெய்யை சிறிது சூடேற்றி வேப்பம் பட்டையைப் போட்டு மூடி ஐந்து நிமிடங்களின் பின் னர் பருப்பைப்போட்டுமூடி பத்து நிமிடங்கள் சிறு தீயாக எரித்தபின் வேப்பங்காயின் சதையைப் போட்டு மூடி சிறுதீயாக எரிக்கவேண்டும். தைலப் பதம் வந்ததும் இறக்கி ஆறவிட்டு மருந்தை நீக்கி தைலத்தை மட்டும் எடுத்து சொறி, சிரங்கு, சேற் றுப்புண், படை முதலிய நோய்களுக்கு மேற்பூச் [illegible]லாம்.

❖ வேப்பம்பூவை நெய்யில் வறுத்துப் பொடி செய்து சாப்பிட்டு வந்தால் வயிற்றுப் போக்கு குணமாகும்.

❖ 300 கிராம் வேப்பெண்ணெயில் 200 கிராம் பருப்பைப்போட்டுக்காய்ச்சி இறக்கி வடி த்து ஆறாத புண், நீரிழிவு நோயாளர்களுக்கு ஏற்படும் புண்களுக்கு மேல் தடவி வரலாம்.

❖ நுளம்பு நீங்க வேப்பம் இலையையும் விதைப்பருப்புக்களையும் ஒரேயளவாக எடு த்து அரைத்து சிறுஅடைகளாகத் தட்டி நிழலில் உலர்த்தி வைத்துக்கொள்ள வேண்டும். ஒரு சட்டியில் நெருப்பைப்போட்டு தீ தாங்கும் அளவு க்கு அடைகளைப்போட்டு விரலளவு துவார முள்ள சட்டியால் மூடிவிட வேண்டும். இதை வீட்டுக் குள் வைத்து 30 நிமிடங்கள் வீட்டைப்பூட்டி வைக்க நுளம்புகள் அழியும்.

❖ வேப்பம்பூக்களை தேனில் ஊற வைத்து வேப்பம்பூ குல்கந்து தயாரித்து வைத்துக் கொள் ளவும். சீக்கிரம் கெட்டுப்போகாது. இரவு தூங்கப் போவதற்கு முன்பு ஒரு சிறு உருண்டையளவு இந்த வேப்பம்பூ குல்கந்தையெடுத்து வாயில் போட்டு விழுங்கி விட்டு வெந்நீர் குடித்துக் கொள் ளவும். பித்தம் தெளிந்து உடல் பலம் பெறும். நோய்கள் அணுகாது.

திருமதி விவியன் சத்தியசீலன்(M.D.C.S)
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்த மருத்துவத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்,
கைதடி.

❖ 100 வயதுடைய வேப்பம் பட்டைகளை குடிநீரிலிட்டு காலை, மாலை 30 தொடக்கம் 60 மில்லி அளவு குடிக்க மலேரியா காய்ச்சல் தீரும்.

❖ மாதவிடாய்க்காலத்தில் ஏற்படும் வயி ற்றுவலிக்கு வேப்பங்கொழுந்தை அரைத்து 5 கிராம் அளவு எடுத்து அதனுள் 2 கிராம் உள் ளியை அரைத்து வைத்து விழுங்கவும். ஒரு நாளைக்கு ஒருவேளை விழுங்கினால் வலி தணியும். கர்ப்பப்பை பலப்படும்.

❖ மிகவும் வயதான வேப்பமரத்தின் பட் டைகள் வெடித்து ஒருவித பால்வடியும். இதுவே வேப்பம் கள் எனப்படும். வயதான மரத்திலிரு ந்து இயற்கையாக தானாகவே வடியும் இக்கள் பட்டைகளை செயற்கையாக காயப்படுத்தி சேக ரிக்க முடியாது. அபூர்வமாகத்தான் இக்கள் கிடைக் கும். வடியும் போது இதனைச் சேகரித்து வைத் துக் கொள்ளவும். 3 தொடக்கம் 4 நாட்கள் வரை வடியும். இக்கள்ளை 30 மில்லி அளவு காலை, மாலை அருந்திவர வயிற்றுப் புண் தீரும். உடலை திடகாத்திரமாக வைத்திருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய்பாதம்



ஆன்மீகம் 92

திருமலைநம்பி கோயிலுக்கு அருகில் உள்ள குகைகளில் குதம்மைச் சித்தர் குகை, புண்ணாக்குச் சித்தர் குகை, யோகர்சித்தர் குகை ஆகியன குறிப் பிடத்தக்கன. இங்கு வரையால மரம், கருங்கரிப்பான் செடி போன்ற காய கல்ப மூலிகைகள் உள்ளன. யோக சித்தர் குகைக்கருகில் உள்ள குண்டு மலையின் ஒரம் பெரிய ஆல் விருட்சம் காணப்படும். மரத்தில் உள்ள கருங்கழுகுகளின் சிறகு நவ்வல் பழம்போல் கருப்பாக மரத்தின்கீழ் உதிர்ந்து கிடக்கும். அந்தச் சிறகையெடுத்து கையில் பிடித்து கண்ணுக்கு நேரே வைத்துப் பார்த்தால் வானத்தில் பதினாலு லோகமும் தெரியும் என கோரக்கர் மலை வாகடம் எனும்நூல் கூறுகின்றன. இக்காடுகளில் வேட்டையாடச் செல்பவர்கள் மிகவும் எச்சரிக்கையாகச் செயற்படுவார்களாம். மலையைப்பற்றியும் மிருகங்களைப்பற்றியும் நன்றாக அறிந்திருக்கும் சிலரின் உதவியால் தான் வேட்டையாட முடியுமாம். கையில் நவீன ரக வேட்டைத் துப்பாக்கி, ஈட்டி, வாள்போன்ற ஆயுதங்களுடன் தான் வேட்டையாடச் செல்வார்களாம். ஆனால், நாங்களோ நிராயுதபாணிகளாகவும் ஆசானின் அருளையே கேடயமாகக் கொண்டு அங்கு பயணப்பட்டோம். வழக்கம் போல் எங்கள் கையிலிருக்கும் சங்கினை ஊதி ஒங்கார நாதத்தை எழுப்பிச் செல்வோம். எங்கள் கணிகளில் எந்த மிருகமும் தென்படவேயில்லை. ஆனால், அவற்றின் ஒலிகள் மட்டுமே சமீபத்தில் கேட்டோம். எங்களில் ஒவ்வொரு நபரும் சுமார் பதினைந்து கிலோ சுமைகளை சுமந்து தான் மலை ஏறுவோம். அதில் சமையல் செய்ய பாத்திரங்கள் மற்றும் மளிகைச் சாமான்கள், எங்கள் உடைகள் போன்றவை இருக்கும். பலநேரங்களில் சித்தர்பெருமானே எங்களுக்கு சமையல் செய்து உணவளிப்பார். அதில் அவருக்கு பெரு மகிழ்ச்சி கிடைக்கும். அவர் சமைத்ததை உண்ணும் பெரும்பாக்கியம் எங்களுக்கு கிடைக்கும். சித்தர் சமையல் செய்யத் தொடங்கினால் சீக்கிர் முடிப்பார்.



தாய்பாதத்தில் அன்னை சித்தர்

நாங்கள் நாள்தோறும் மலைகளில் பத்துமணி நேரத்துக்கு குறையாமல் பயணித்தோம். பல நேரங்களில் பல் கூட விளக்க நேரமில்லாமல் நடந்திருக்கிறோம். ஆங்காங்கே சற்று நேரம் பாறைகளில் அமர்ந்து ஓய்வெடுத்து பயணத்தைத் தொடர்ந்தோம்.

சில நேரங்களில் இரவில் தங்குவதற்கு தகுந்த இடத்தைத் தேடுவதற்குள் இருட்டி விடும். அப்புறம் என்ன அங்கேயே சமையல் சாப்பாடு பின்னர் பாறைகளில் படுத்து உறக்கம் என்று இரவை கழிப்போம். இங்கு ஆயிரம் அடிகள் உயரமுள்ள அழகிய மலையை கண்டோம். அதன் சிகரம் மாபெரும் சிவலங்க ஸ்வரூபமாக காட்சியளித்தது. பராசரிஷி அருந்தி வனம் ஆகியவைகளைக் கடந்து சென்றோம். இறுதியாகத் தாய்பாதம் இருப்பிடத்தை அடைந்தோம். அடுத்த வினாடி நான் என்னை மறந்தேன். பிறகு என்ன நடந்தது என்று எனக்குத் தெரியாது. ஆசானின் குரல் எங்கோ பாதாளத்திலிருந்து ஒலிப்பதைப் போல் கேட்டது. நான் என்னிலைக்கு வந்தேன். எல்லோரும் என்னையே பிரமிப்புடன் நோக்குவது கண்டு ஒருகணம் திகைத்தேன். என்ன ராஜா? கதறி அழுதாய். கூவி அழைத்தாயே அழைத்தது வந்ததா? என்றார் சாமி.


தொடரும்

அன்னை சித்தர்
இராஜ்குமார் குருஜி

# தமிழ் தனி ஈழ அரசு என்ற தீர்வுக்கு மாற்று...?

### கூட்டாட்சி ஏற்பாட்டை எதிர்க்கும் இந்திய அரசு

இவ்வாறான கூட்டாச்சி முறைமையைக் கொண்டுள்ள இந்திய அரசு இலங்கையில்அதுவும் தமிழர்களுக்கு அதிகாரம் கிடைக்கும் வகையில் ஒரு கூட்டாட்சித் தீர்வை முழுமுற்றாக எதிர்க்கத்தானே செய்யும்?



இதனை நேர்வே நாட்டின் அரசால் நியமிக்கப்பட்ட குழு உறுதிப்படுத்தி தெரிவித்துள்ளது! இலங்கையில் இரு தரப்பிற்கும் இடையே அமைதி பேச்சுவார்த்தை நடத்தப்படுவதற்கு சமரச நாடாக செயற்பட்ட நேர்வே நாடு, அதன் அமைதிப் பேச்சுவார்த்தை முயற்சிகள் தோல்வி அடைந்துபோனது குறித்து ஆய்வுசெய்ய ஒரு குழுவினை அமைத்தது. அந்த குழுவின் அறிக்கை, அச்சமரச பேச்சு வார்த்தை நடத்தப்பட்ட விதம் குறித்தும் அப்பொழுது இந்தியா, அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் பிற நாடுகள் எவ்வாறு செயற்பட்டன என்பன குறித்தும் விபரங்களை வெளியிட்டுள்ளது. அந்த அறிக்கையில்தான் ஈழத்தமிழர் பிரச்சினையில் ஒரு கூட்டாட்சி அடிப்படையிலான தீர்வு கண்டடைவதைக் கூட இந்திய அரசு தடுத்தது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனை மறுத்து இந்திய அரசு இதுநாள் வரை எந்த விளக்கத்தினையும் வெளியிட்டிருக்கவில்லை என்பது முக்கியமானது.

இந்தியா கூட்டாட்சி தீர்வை கண்டடைவதைக் கூட எதிர்தது என்பது நோர்வே நாட்டின் நாடாளுமன்ற குழு தெரிவித்துள்ள முடிவு தான் தமிழர்களின் தாயகத்தை மறுக்கும் சிங்களத்தின் ஆரிய இன வெறிக்கு இந்திய அரசு துணைநிற்பதை காட்டும் தக்க சான்றாகும். இல்லாவிடில் குறைந்தபட்சம் தமிழர்களின் தாயகத்தையாவது உறுதி செய்யும் கூட்டாட்சி தீர்விற்கு சிங்கள தரப்பு முன்வர வேண்டியிருந்த நிர்ப்பந்தமான நிலைமை உருவாகியிருந்த நிலையில் அதனை சீர்குலைத்துவிட்டு தமிழர்களின் எந்தவொரு கூட்டுரிமையையும் பாதுகாத்திடாத 13-வது திருத்தத்தின் படியான மாகாண ஆட்சி முறையை ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று வலியுறுத்துவதன் காரணமென்ன?

முழுஇறையாண்மை பெற்ற ஈழக் குடியரசு [illegible] ஈழத்தமிழர்[illegible] எவ்வகையிலும் தடுத்துவிட வேண்டும் என்று செயற்படும் இந்திய அரசு, 8 கோடிக்கு மேல் தமிழ் மக்களை கொண்டுள்ள தனது நாட்டின் ஒரு மாநிலமான தமிழ்நாடு மாநில அரசிற்கு வழங்கப்பட்டிராத அதிகாரங்களைக்கொண்ட ஒரு மாநில அரசுரிமையைக்கொண்டு ஒரு கூட்டாட்சி நாட்டில் ஈழத்தமிழர்கள் வாழ்வதையும் கூட தனக்கு அச்சுறுத்தலாகத்தான் கருதுகிறது. அதற்கான காரணம் என்ன?

அது ஈழத்தமிழர் பெற்றுவிடும் அரசியல் உரிமைகள் தமிழ்நாடு தமிழர்களின் உரிமை போராட்டங்களுக்கு வழியமைத்துவிடும் என்ற உண்மைதான். அதுதான் இந்திய அரசிற்கு ஈழத்தமிழர் குறித்த பிரச்சினையில் கடைப்பிடிக்கும் கொள்கைக்கு நிரந்தர அடிப்படையாக அமைகிறது. அதுதான், ஈழத்தமிழர் போராட்டத்தில் தமிழ்நாடு வகிக்கும் பங்கினையும் காட்டுகிறது.

இவ்வாறு ஒரு உண்மையான ஒரு கூட்டாட்சித் தீர்வினைக் கூட முன்மொழிய தயாரில்லாத ஒரு நாடு, ஒருநியாயமான தீர்விற்கு உதவிகள் செய்யக்கூடும் என்று கூறுவதனை எவ்வாறு நம்புவது?

### இலங்கை அரசின் நிலைப்பாடு

இலங்கை அரசு, ஈழத்தமிழ் மக்களின் கூட்டுரிமைகளை உறுதி செய்யும் வகையில் அமைந்த உண்மையான ஒரு கூட்டாட்சித் தீர்வுக்கு ஒரு போதும் ஒப்புக் கொண்டதில்லை. அத்தகைய ஒரு கூட்டாட்சி அரசமைப்பு சட்டத்தீர்வையும் ஒரு போதும் முன்வைத்திருக்கவில்லை. இதனை 60 ஆண்டு கால ஈழத்தமிழர் பிரச்சினையை நன்கறிந்தவர் ஒப்புக்கொள்வர். தமிழர்களின் இன்றியமையா அரசியல், பொருளாதார, பண்பாட்டு உரிமைகளை பாதுகாத்திடும் ஒரு கூட்டாட்சி முறைமை உண்மையில் அங்கு இருக்குமேயானால் அதனை தமிழர்களின் நலன்களை பாதுகாப்பதற்கான ஒரு அரசியல் ஏற்பாடாக சொல்லலாம். அத்தகைய ஒரு தீர்வுக்குத்தான் தொடக்க காலத்தமிழர் தலைவர்களும் போராடினர். 30 ஆண்டுகளுக்கும் மேலாக போராடியும் இலங்கை அரசு ஒருபோதும் அத்தகைய ஒரு கூட்டாட்சித் தீர்வுக்கு அறவே ஒப்புக்கொண்டதில்லை என்பது மறுக்க முடியாத வரலாறு.

விடுதலைப்புலிகளுடனான அமைதிப்பேச்சுவார்த்தை நடைபெற்று வந்தபோதுதான் ஒருகூட்டாட்சி ஏற்பாட்டிற்கு தயாராக இருப்பது போன்று இலங்கை அரசு காட்டிக் கொண்டது.

தொடரும்

ஆய்வாளர் சு. அருணாச்சலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

552

## மாண்டவன் மீண்டான்



18.08.2013 க்குரிய தொடர்ச்சி

வழிப்போக்கன் ஒருவன் அங்கு வந்தான் பரமார்த்தகுருவும் சீடர்களும் அழுது புலம்புவதைப் பார்த்தான். என்ன நடந்தது? ஏன் அழு கிறீர்கள்? என்று கேட்டான்.

என் பெயர் பரமார்த்த குரு. இவர்கள் என் சீடர்கள். இரவில் இந்த ஆற்றைக் கடந்தோம். பாவி ஆறு எங்களில் ஒருவனை விழுங்கிவிட்டது என்றார் அவர்.

ஆற்றில் ஆழம் இல்லையே. யாரும் மூழ்கி இருக்க முடியாதே என்று நினைத்தான் அவன்.

யாரை இந்த ஆறு விழுங்கியது? சொல்லுங்கள் என்று கேட்டான்.

நாங்கள் ஆறு பேர் ஒன்றாக ஆற்றைக் கடந்தோம். இப்பொழுது ஐந்து பேர்தான் இருக்கிறோம். எங்களில் யாரை விழுங்கியது என்பதும் தெரியவில்லை என்று நடந்ததை எல்லாம் சொன்னார் அவர்.

இவர்கள் அனைவருமே முட்டாள்கள். ஆறு பேர் இருக்க ஐந்துபேர் என்கிறார்கள். எண்ணிக்கை கணக்கிடும் போது தங்களைவிட்டு எண்ணி இருக்கிறார்கள்.

இந்த முட்டாள்களை ஏமாற்றிப் பணம் பறிக்க வேண்டும் என்று நினைத்தான் அவன்.

நான் ஒரு மந்திரவாதி. உங்கள் நல்ல காலம் இங்கு வந்தேன். ஆறு விழுங்கியவனை என்னால் மீட்டுத் தர முடியும். ஆனால், அதற்கு நிறைய செலவு ஆகுமே என்றான்.

என்னிடம் ஐந்து பணம் இருக்கிறது. எல்லாவற் றயும் தருகிறேன். என் சீடன் உயிர் பிழைத்தால் போதும் என்று கெஞ்சினான் குரு.

தன் சூழ்ச்சி வெற்றி பெற்றது. இந்த முட்டாள் குருவிடமிருந்து பணம் கிடைக்கப்போகிறது. என்று மகிழ்ந்தான் அவன்.

குருவே! உங்களுக்காக ஐந்து பணத்திற்கு ஒப்புக் கொள்கிறேன் என்றான்.

கையிலிருந்த பிரம்பை அவர்களிடம் காட்டினான்.

இது சாதாரண பிரம்பு அல்ல. மந்திரப் பிரம்பு. ஆறு விழுங்கியவனை உடனே மீட்டுத் தரும் என்று அளந்தான்.

தன் இடுப்பில் முடிந்து வைத்திருந்த பையை அவிழ்த்தார் குரு. அதிலிருந்த ஐந்து பணத்தை எடுத்து அவனிடம் தந்தார்.

பிரம்பை ஆட்டிய அவன் ஓம்! சூ! மந்திரக் காளி என்று உரத்த குரலில் கத்தினான். ஏதோ மந்திரம் சொல்வது போல் நடித்தான்.

மந்திரம் வேலை செய்யப் போகிறது. நான் சொல்வது போல் நடந்துகொள்ள வேண்டும் என்றான் அவன்.

எப்படி நடந்து கொள்ள வேண்டும்? என்று கேட்டார் குரு.

நீங்கள் அனைவரும் முதுகைக் காட்டியபடி வரிசையாக நில்லுங்கள். மந்திரப்பிரம்பால் ஒவ்வொருவர் முதுகிலும் ஒருமுறை ஓங்கி அடிப்பேன்.

முதலாமவனின் முதுகில் பிரம்படி விழும் போது அவன் ஒன்று என்று சொல்ல வேண்டும். அது போலவே இரண்டாமவன் இரண்டு என்று சொல்ல வேண்டும்.

பிரம்படி ஆறாமவனின் முதுகிலும் விழும். அவன் ஆறு என்று சொல்வான். அப்பொழுது நீங்கள் ஆறு பேரும் இருப்பீர்கள் என்றான் அவன்.

அவர்கள் அனைவரும் வரிசையாக நின்றார்கள். முதலில் பரமார்த்தகுரு இருந்தார்.

அவர் முதுகில் பிரம்பால் ஓங்கி அடித்தான் அவன். வலி தாங்க முடியாத அவர் ஒன்று என்று அலறி னான்.

அடுத்துமூடனின் முதுகில் பிரம்படி விழுந்தது. அவன் இரண்டு என்று குரல் கொடுத்தான்.

கடைசியாக மிலேச்சனின் முதுகில் பிரம்படி விழுந்தது. அவன் ஆறு என்று கத்தினான்.


ஆறு என்று கேட்டதும் குரு மகிழ்ச்சி அடைந்தார். பிரம்படியால் பட்ட வலிமையும் மறந்தார்.

மந்திரவாதியே! நல்ல நேரத்தில் வந்தீர்கள். எல்லோரும் திரும்பிப் பார்க்காமல் வேகமாக ஓடுங்கள். அப்பொழுது தான் மந்திரம் வேலை செய்யும். திரும்பிப் பார்ப்பவரைக் காப்பாற்ற என்னால் முடியாது. ஓட்டமாக ஓடுங்கள் என்று கத்தினான் அவன்.

இதைக்கேட்ட அவர்கள் அங்கிருந்து ஒரே ஓட்டமாக ஓடினார்கள்.

பரமார்த்த குரு கதைகள்

## கிழவியின் அறிவுரை



பெருத்த உடலைத் தூக்கியபடி பரமார்த்த குரு வயிறு குலுங்க ஓடினார். முதியவரான அவரால் சீடர்களுக்கு இணையாக ஓட முடியவில்லை.

நீண்ட தொலைவு ஓடியதால் களைப்பு அடைந்த சீடர்கள் நின்றார்கள். குருவிற்காககக் காத்திருந்தார்கள்.

மெல்ல நடந்து சோர்வுடன் அங்கு வந்தார் குரு.

இனி எந்த ஆபத்தும் இல்லை என்று அவர்கள் நினைத்தார்கள்.

அங்கிருந்து நடந்து மடத்திற்கு வந்து சேர்ந்தார்கள்.

தளர்ந்து சேர்வாக வந்த அவர்களைப் பார்த்தாள் வேலைக்காரக் கிழவி.

குருவே! சீடர்களின் வாழ்த்து முழங்க எப்பொழுதும் ஆரவாரமாக வருவீர்களே. என்ன நடந்தது? ஏன் இப்படி அலங்கோலமாக வந்திருக்கிறீர்கள்? என்று கேட்டாள்.

இன்று நாங்கள் பட்ட துன்பம் யாருக்கும் வரக் கூடாது. நாங்கள் ஆறு பேரும் ஒரு ஆற்றைக் கடந்தோம். ஒரு சீடனை அந்த ஆறு விழுங்கிவிட்டது.

அவனை மீட்பதற்காக மந்திரவாதியிடம் ஐந்து பணம் தந்தேன். மந்திரவாதி எங்கள் முதுகில் ஓங்கி அடித்தார். வலி தாங்காமல் துடித்தேன்.

ஆறு விழுங்கியவனை அவர் மீட்டுத் தந்தார்.

திரும்பிப் பார்க்காமல் எங்களை ஓடச் சொன்னார். நாங்களும் உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு ஓடி வந்தோம். என்று நடந்ததை எல்லாம் சொல்லிப் புலம்பினார்.

இதைக்கேட்ட அவள் ஐயோ! குருவும் சீடர்களும் இப்படியா அறிவு இல்லாமல் இருப்பீர்கள். உங்களில் யாரையும் ஆறுவிழுங்கவில்லை. எவனோ ஒருவன் மந்திரவாதி என்று உங்களை ஏமாற்றியிருக்கிறான் என்றாள்.

திகைத்த அவர், என்ன சொல்கிறாய்? நானும் சீடர்களும் பலமுறை எண்ணினோம். ஒவ்வொரு முறையும் ஐந்துபேர்தான் இருந்தோம். ஒருசீட்ன் இல்லையே. அவனை ஆறு விழுங்கவில்லையா? என்று கேட்டார்.

குருவே! உங்களில் யாருக்கும் எண்ணிக்கை [illegible] கிடத் தெரியவில்லை. ஒவ்வொருவரும் தன்னை விட்டு விட்டு எண்ணி இருக்கிறீர்கள். அதனால்தான் எல்லோருக்கும் ஐந்து பேர் இருப்பதாகத் தெரிந்தது.

அந்த ஏமாற்றக்காரன் இதை அறிந்து கொண்டான். தன்னை மந்திரவாதி என்று [illegible] சொன்னான். நீங்களும் நன்றாக ஏமாந்து விட்டீர்கள். என்று விளக்கமாகச் சொன்னாள் அவள்.

நடந்த உண்மை அவருக்குப் புரியத் தொடங்கியது.

கிழவி! நீ சொல்வது போல நாங்கள் நன்றாக ஏமாந்துவிட்டோம். எண்ணிக்கை கணக்கிடத் தெரியாததால் பணத்தை இழந்தோம். பிரம்படி பட்டோம். மூச்சிறைக்க ஓடி வந்து அவமானப்பட்டோம்.

நீ மிகுந்த அறிவு உள்ளவளாகத் தெரிகிறாய். இனி இப்படி ஏமாறாமல் இருக்க நாங்கள் என்ன செய்வது? என்று கேட்டார் அவர்.

அதற்கு அவள், பலர் ஒன்றாகச் செல்லும் போது எண்ணிக்கை கணக்கிட வழி உள்ளது. என அம்மா இதை என்னிடம் சொன்னார்கள். அவர்கள் கூட்டமாகச் செல்லும்போது இந்த முறையைத்தான் பயன்படுத்துவார்களாம் என்றாள்.

என்ன வழி? என்று கேட்டார் அவர்.

மாடுபோட்ட பசுஞ் சாணத்தை எடுக்க வேண்டும். அதைத் தரையில் வட்டமாகத் தட்ட வேண்டும்.

எல்லோரும் அதைச் சுற்றிப் படுக்க வேண்டும். ஒவ்வொருவரும் தங்கள் மூக்கை அதில் வைத்து அழுத்த வேண்டும்.

பிறகு சாணத்தில் உள்ள குழிகளை எண்ண வேண்டும். அதை வைத்து எத்தனை பேர் உள்ளனர் என்று அறியலாம் என்றாள் அவள்.


ஐயோ!இந்த எளிமையான வழி எனக்குத் தெரியாமல் போயிற்றே. தெரிந்திருந்தல் பிரம்படிபட்டிருக்க மாட்டேனே என்று புலம்பினார் அவர்.

தலைவிதியை நொந்தபடி அவரும் சீடர்களும் மடத்தில் ஓய்வு எடுத்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியா இலங்கைக்கு பாடம் புகட்ட வேண்டிய காலம் வந்துவிட்டது

## தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த்



(சென்னை)

**மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகளுக்கு ஆளாகி சர்வதேச அரங்கில் போர்க்குற்றவாளிக் கூண்டில் நிற்கும் இலங்கை அரசு, கொழும்பில் பொதுநலவாய மாநாட்டை நடத்துவது கேலிக்கும், கண்டனத்திற்கும் உரியது என்று தே.மு.தி.க. தலைவரும் நடிகருமான விஜயகாந்த் தெரிவித்துள்ளார்.**

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் கூறியிருப்பதாவது,

கச்சதீவை இலங்கை வசம் ஒப்படைக்கும் ஒப்பந்தத்தில் முறைப்படி அப்போதைய இந்திய பிரதமரும், இலங்கை பிரதமரும் கையெழுத்திட்டுள்ளனர். ஆகவே, கச்சதீவை இந்தியாவிடம் திரும்ப ஒப்படைக்கும் பேச்சுக்கே இடமில்லை என்று இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் டில்லியில் பேட்டியளித்துள்ளார்.

இலங்கையில் தமிழர்கள் வாழும் பகுதியான வடமாகாணத்தையும் கிழக்கு மாகாணத்தையும் இணைத்து தமிழர் வாழும் ஒரே பகுதி என்று 1987 ஆம் ஆண்டு இந்திய பிரதமரும், இலங்கை ஜனாதிபதியும் கையெழுத்திட்டனர். ஆனால், இதை இலங்கை அப்பொழுதே வைவிட்டுவிட்டது. இந்த ஒப்பந்தத்தை மட்டும் இலங்கை மீறலாமா?

வடமாகாணத்தில் தமிழர்கள் வாழும்பகுதிகளில்செப்டெம்பர்மாதத்தில் தேர்தல் நடைபெறவுள்ளது. இதற்கும் முன்னைய ஒப்பந்தப்படி அதிகார பகிர்வை வழங்க இலங்கை அரசு மறுத்து வருகின்றது. இதுதான் இலங்கை அரசு ஒப்பந்தத்தை கடைப்பிடிக்கும் இலட்சணமா? ஒப்பந்தம் என்பது இலங்கையைப் பொறுத்த வரையில் ஒரு வழிப் பாதைதான் போலும்.

1974 ஆம் ஆண்டு இந்திய-இலங்கை ஒப்பந்தப்படியும், 1976 இல் அதில் கொண்டுவந்த கூடுதல் பிரிவுகளின் படியும் தமிழக கடலோர மீனவர்களுக்கு மீன்பிடிக்கும் உரிமையும் பறிபோய்விட்டது. கச்சதீவும் பறிபோய்விட்டது. அதனால் மீனவர்கள் தினந்தோறும் தொல்லைகளுக்கு ஆளாகின்றனர். ஆகவே, இந்த ஒப்பந்தத்தை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என கோருவது எப்படி அநியாயமாகும்?

இலங்கையில் உள்ள சிங்கள மக்கள் 13 ஆவது திருத்தச் சட்டத்தை ஏற்றுக் கொள்ளவில்லை என்றால் எப்படி தமிழர்களின் வடமாகாணத்திற்குரிய நிலம் மற்றும் பொலிஸ் அதிகாரங்களை தான் அளிக்கமுடியும் என்று இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கேட்டுள்ளார்.

இலங்கையில் உள்ள மக்கள் பாதிப்புகளுக்கு ஆளாகிறார்கள் என்கிறபொழுது, ஒப்பந்தத்தை மதிக்க மாட்டோம் என்று கூறுகின்றது இலங்கை அரசு. அதேபோல எங்களுடைய மக்கள் பாதிக்கப்படுகிற பொழுது நாம் மட்டும் ஏன் 1974 ஆம் ஆண்டு ஒப்பந்தத்தை மதிக்க வேண்டும்?

நேற்று வரை இலங்கையில் தமிழ் மக்கள் கொல்லப்பட்டனர். இன்று இஸ்லாமியர்களைத் தாக்கி அவர்களின் பள்ளிவாசலை இடித்துள்ளனர். மக்கள் விரோதபோக்குக்கு அண்டை நாட்டு நல்லுறவு அவசியம் என்ற அடிப்படையில் இலங்கையை பொறுத்த வரைவில் இந்தியா நடந்து கொள்கிறது.

ஆனால், இலங்கையோ, இந்தியா எக்கேடு கெடினும் பரவாயில்லை தங்கள் சுயநலமே முக்கியம் என்ற அடிப்படையில் தொடர்ந்து மக்களிடம் விரோதப் போக்கையே கையாண்டுவருகிறது.

கொழும்பில் பொதுநலவாய மாநாடு நடைபெறுவதை இந்தியா தடுத்திருக்க வேண்டும். ஏனெனில் அத்தகைய மாநாடு நடைபெறின் அதை போர்க் குற்றவாளியான மஹிந்தவே தலைமை ஏற்று நடத்த வேண்டும்.

அதுவே மனிதகுலத்திற்கு எதிரான செயல். இலங்கை தொடர்ந்து இந்தியா நீட்டும் நேசக்கரத்தை புறக்கணித்து, நியாயத்தை நிலை நிறுத்த முன்வராததோடு கெடுதல்களையும் செய்துவருகின்றது.

கொட்டினால் தேள், இல்லையென்றால் பிள்ளைப் பூச்சி என்பார்கள். இந்தியாவைப் பொறுத்த வரை இலங்கை அரசுக்கு ஒரு பாடம் புகட்ட வேண்டிய தருணம் தற்போது வந்துள்ளது.

ஆகவே, கொழும்பில் நடைபெறும் பொதுநலவாய மாநாட்டை இந்தியா புறக்கணிக்க வேண்டும் என்றும், இந்திய பிரதமர் அதில் கலந்து கொள்ளக்கூடாது என்றும் தே.மு.தி.க.சார்பில் தான் கேட்டுக் கொள்வதாக தனது அறிக்கையில் அவர் மேலும் கூறியுள்ளார். (அ)



இலங்கை வங்கியின் 74 ஆம் ஆண்டு நிறைவு விழா அண்மையில் சுன்னாகக் கிளையில் கொண்டாப்பட்டது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை தலைவர் பேராசிரியர் எஸ்.மகேஸ்வரன் 18+ கணக்கை பேணி வந்த திருமணமானவர்களுக்கான தங்க நாணயப் பரிசை வழங்கி வைப்பதை படத்தில் காணலாம்.

(படம்:- புன்னாலைக்கட்டுவன் செய்தியாளர்)

# இந்திய மீனவர் பிரச்சினைகளை மனிதாபிமானத்தோடு அணுக வேண்டும்

## கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்து

“மனிதாபிமானம் தொடர்புடையதான் இருநாட்டு மீனவர் விடயத்திலும் இருதரப்பும் தங்களுக்குள்ளே பரஸ் பரம் பேச்சுவார்த்தை நடத்தி தீர்வுகாண முயலவேண்டும்” ஆனால், இந்த உணர்வுக்கு மாறாக கைதுசெய்யப்பட்டுள்ள தமிழக மீனவர்கள் விடயத்தில் இலங்கை அரசாங்கம் தலையிடாது என்றும், நீதி மன்றமே அவர்கள் விடயத்தை முடிவு செய்யும் என்றும் கூறியிருப்பது ஏற்கத்தக்கதல்ல என இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் செயற்குழு தெரிவித்துள்ளது. இவ்விடயம் தொடர்பில் அக்கட்சி மேலும் தெரிவிக்கையில், மீனவர் பிரச்சினை மனிதாபிமானத்தோடு அணுக வேண்டிய ஒன்று. ஆனால், நடப்பது முரண்பாடாகவுள்ளது.

நூற்றுக்கும் மேற்பட்ட தமிழக மீனவர்கள் இலங்கையின் சிறையில் வாடிக்கொண்டிருக்கின்றனர். இவர்களில் பலர் இரண்டு மாதங்களுக்கும் மேலாக இலங்கையின் சிறைச்சாலைகளில் அடைக்கப்பட்டுள்ளனர்.

வாழ்வாதாரத்துக்காக கடற்றொழிலில் ஈடுபட்ட மீனவர்கள் மீது கொலைக் குற்றவாளிகளைப் போல நடவடிக்கை மேற்கொள்வது இலங்கை அரசாங்கத்தின் மனிதாபிமானமற்ற மனநிலையையே வெளிப்படுத்துகிறது.

மத்திய அரசாங்கம் உடனடியாக இதில் தலையிட்டு இலங்கைச் சிறையில் அடைக்கப்பட்டுள்ள நூற்றுக்கும் மேற்பட்ட இந்திய மீனவர்களை விடுதலை செய்வதற்கு உரியமுயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயற்குழு வலியுறுத்துகிறது.

கடந்த சில மாதங்களாக தமிழக, புதுவை மீனவர்கள், இலங்கை கடற்படையினரால் தாக்கப்படுவதும் கைது செய்யப்பட்டு சிறைபிடிக்கப்படுவதும் மீனவர்களின் வலைகளையும், மீன்களையும் அபகரித்துச்செல்வதுபோன்ற சம்பவங்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

மீனவர்களின் துயரங்கள் தொடர்கதையாகி வருகின்ற நிலையில் மீனவர்களைப் பாதுகாக்க உடனடியான நடவடிக்கைகள் அவசியம். அவர்களுக்கு மீன்வளம் அதிகம் உள்ள பகுதிகளில் மீன்பிடிக்கும் வாய்ப்புக்களை ஏற்படுத்தி, மீனவர்களின் வாழ்வாதார நலன்களைப் பாதுகாக்க வேண்டும்.

இதற்கு தமிழக-புதுவை மற்றும் இலங்கை மீனவர் சங்கங்களின் பிரதிநிதிகள் ஒன்றுகூடி கூட்டம் நடத்தி, விரிவான பேச்சுவார்த்தை ஒன்று நடைபெறுவதற்கு மத்திய அரசாங்கம் உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

இந்தப் பேச்சுவார்த்தையில் இரு நாட்டு அரசுப் பிரதிநிதிகளும் கலந்து கொண்டு உரிய தீர்வுகளை எட்டிட முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென அக்கட்சி மேலும் வலியுறுத்தியுள்ளது. (அ)

# தேர்தல் நடவடிக்கையை ஆராய விரைகிறார் ஆணையாளர்

தேர்தல் இடம்பெறும் வடக்கு, வடமேல் மற்றும் புதிய மாகாணங்களில் தேர்தல் நடவடிக்கைகளைக் கண்காணிக்க தேர்தல்கள் ஆணையாளர் தீர்மானித்துள்ளார்.

இதன்படி இன்று தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய வடக்கு மாகாணத்திற்கு விஜயம் செய்யவுள்ளதாக தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது.

நேற்று வடமேல் மாகாண தேர்தல் நடவடிக்கைகள் குறித்து தேர்தல்கள் ஆணையாளர் ஆராய்ந்ததாக தெரிகிறது.



இன்று மற்றும் நாளை வடக்கு மாகாணத்திற்கு வருகை தரும் தேர்தல்கள் ஆணையாளர் வேட்பாளர்களை சந்தித்து கலந்துரையாடவுள்ளார். அதன் பின்னர் அவர் மத்திய மாகாணத்திற்கு விஜயம் செய்வார் என எதிர்பார்க்கப்படுகிறது. (அ)

# மருந்து பற்றாக்குறையை நீக்க மருந்து மூலிகை வளர்ப்புத்திட்டம்

(கொழும்பு)

உள்ளூரில் மருந்து உற்பத்திக்கான மூலப் பொருள் பற்றாக்குறைக்கு தீர்வுகாணும் நடவடிக்கைகளை சுதேச வைத்திய அமைச்சு மேற்கொண்டுள்ளது.

நாவின்னையிலுள்ள ஆயுர்வேத ஆராய்ச்சி நிலையம் மற்றும் ஹல்துமுல்ல, பட்டிப்பொல, கிரான்துருகோட்டே, பல்லேகல, பின்னதுவ ஆகிய மருந்து மூலிகை நிலையங்களில் மருந்து உற்பத்தி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் இருந்தே சுதேச மருந்துப் பொருட்கள் கூடுதலாக இறக்குமதி செய்யப்படுகின்றன. கடந்த பல வருடங்களாக பல ஆயுர்வேத மருந்துகள் இலங்கைக்கு இறக்குமதியாவதில்லை. இதனால் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

கால நிலைக்கு ஏற்ற மருந்து மூலிகைகள் இங்கு உற்பத்தியாவதாக ஹல்துமுல்ல மருந்து மூலிகை பூங்காவின் பொறுப்பதிகாரி பியல் மாரசிங்க தெரிவித்தார்.

திவிநெகும திட்டத்தின் கீழ் வீட்டுத் தோட்டங்களிலும் மருந்து உற்பத்திக்கான வசதிகள் செய்து கொடுக்கப்படும். விதை, மரக்கன்று, தொழில் நுட்பம், அறுவடை விடயங்களிலும் அறிவூட்டல் நிகழ்ச்சிகள் வழங்கப்படும் என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசுக்கு எதிரான போராட்டங்களுக்கு தயாராகின்றது எதிர்ப்பு இயக்கம்

(கொழும்பு)

**வெலிவேரியவில் இடம்பெற்ற மனிதப் படுகொலை தற்போது சர்வதேச பிரச்சினையாக மாறியுள்ளதென ஐக்கிய தேசியக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரும் அக் கட்சியின் பொதுச் செயலாளருமான திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.**

ராஜகிரியவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

வெலிவேரியவில் இடம்பெற்றது மனிதப் படுகொலையே. இது தொடர்பில் எவ்வித விசாரணைகளையும் அரசாங்கம் மேற்கொள்ளாது தான்தோன்றித்தனமாக செயற்படுகின்றது.

இதற்கு எதிராக அனைத்து எதிர் கட்சிகளும் இணைந்து போராட்டம் நடத்தி மகஜர் ஒன்றையும் ஜனாதிபதி அலுவலகத்தில் சமர்ப்பித்தோம். இது தொடர்பில் 24 மணி நேரத்தில் பதில் தருவதாக அறிவித்த ஜனாதிபதி அலுவலகம் இதுவரை எவ்வித பதிலையும் அளிக்கவில்லை.

இது தொடர்பில் சுயாதீன விசாரணை நடத்துவதிலோ அன்றேல் தீர்ப்பு வழங்குவதிலோ அரசாங்கத்திற்கு அக்கறையில்லை.

இராணுவ ரீதியிலான விசாரணையை மட்டுமே நடத்த அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது. இராணுவ விசாரணையில் எமக்கு சிறிதளவேனும் நம்பிக்கையில்லை.

தற்போது வெலிவேரிய சம்பவம் சர்வதேசபிரச்சினையாகமாறியுள்ளது. எனவே இது குறித்து சுயாதீன விசாரணையை அரசாங்கம் உடனடியாக நடத்த வேண்டும்.

அரசாங்கம் விசாரணைகளை நடத்தும் வரை எமது போராட்டம் தொடரும். மக்கள் விரோத செயற்பாட்டை கண்டித்து எதிர்வரும் 27 ஆம் திகதி வெலிவேரியவிலும் அதனைத் தொடர்ந்து செப்டெம்பர் மாதம் 5 ஆம் திகதி காலியிலும் எதிர்க் கட்சிகளின் எதிர்ப்பு இயக்கத்தினால் போராட்டங்கள் முன்னெடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (அ)

# நான்கு இளைஞர்கள் பொலிஸாரால் கைது

(கரணவாய்)

துன்னாலை கிழக்குப் பகுதியில் பொதுமக்களுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் நடந்து கொண்ட 4 இளைஞர்களை நெல்லியடிப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இப்பிரதேசத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணியளவில் குறித்த 4 இளைஞர்களும் பொது மக்கள் அதிகம் நடமாடும் பொது இடத்திலிருந்து மக்களுக்கு இடையூறு விளைவிக்கும் வகையிலான செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளனர்.

இதனையடுத்து அங்கு வந்த நெல்லியடிப் பொலிஸார் பொதுமக்களுக்கு தொல்லை விளைவித்ததான குற்றச்சாட்டின் பேரில் அவர்களைக் கைது செய்தனர்.

இந்த நான்கு இளைஞர்களும் தற்போது நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

(அ-9-60)

# இலங்கையை புகழ்கிறார் ஹிந்தி நடிகர் ரன்பீர் கபூர்

இலங்கை தூய்மையான நாடு மட்டுமன்றி ஆச்சரியமான நாடும் கூட என ஹிந்தி திரைப்பட நடிகர் ரன்பீர் கபூர் தெரிவித்தார்.

ரன்பீர் கபூர் நடிக்கும் போம்பே வெல்வெட் என்ற திரைப்படம் தற்போது இலங்கையில் படமாக்கப்பட்டு வருகிறது.

இதில் நடிப்பதற்காக அவர் இலங்கை வந்துள்ளார். இலங்கை தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

நான் இலங்கையை மிகவும் நேசிக்கின்றேன். நாங்கள் இலங்கையில் எமது திரைப்பட காட்சிகளை பல நாட்களாக ஒளிப்பதிவு செய்து வருகிறோம். எந்த படப்பிடிப்பிலும் அனுபவிக்காத மகிழ்ச்சியை நான் இலங்கையில் அனுபவித்துள்ளேன் என்றார் அவர். (அ)

# கட்சிதாவும் உரிமையை அரசியல் யாப்பிலிருந்து நீக்க வேண்டும்

(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினர் பதவி என்பது சந்தையில் இருக்கும் பொருட்களில் அதிகம் விற்பனையாகும் பொருள் என்று கோட்டே ஸ்ரீநாக விகாரையின் விகாராதிபதி மாதுளுவாவே சோபிததேரர் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது நாடாளுமன்ற உறுப்பினர்கள் தாம் விரும்பிய நேரத்தில் கட்சி தாவமுடியும். எந்த நேரத்திலும் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரைப் பணம் கொடுத்து வாங்கவும் முடியும். கடந்த காலங்களில் இவைதான் நடந்தன.

ஒரு கட்சியில் அதிகளவான நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருப்பார்களாயின் அவர்களின் பெறுமதி அதிகரிக்கும். நபருக்கு நபர் இந்தப் பெறுமதியில் மாற்றம் இருக்கும்.

நாடாளுமன்ற உறுப்பினர் பதவி என்பது சந்தையில் விற்பனை செய்யக்கூடிய சிறந்த பண்டம். தேர்தலுக்குப் பின்னர் கட்சிதாவும் உரிமைகளை அரசியல் யாப்பில் இருந்து நீக்கவேண்டும்.

நாடாளுமன்றஉறுப்பினர்கள்பலர் பணம்கொடுத்து அரசாங்கத்தில் இணையத்தயாராக இருப்பதாக அண்மையில் அமைச்சர் விமல் வீரவன்ச கூறியிருந்தார் என்றார். (அ)

# 2014 இல் பொதுத்தேர்தல் நடைபெறும்-ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)



எதிர்வரும் 2014 ஆம் ஆண்டும் இலங்கையில் பொதுத் தேர்தல் ஒன்று நடைபெறும் என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசாங்கத்தின் தன்னிச்சையான செயற்பாடுகள் நாட்டின் தமிழ் , முஸ்லிம் மக்களை மட்டுமன்றி முழு சிங்கள மக்களையும் பாதிப்படையச் செய்துள்ளன.

இந்த செயற்பாடுகளுக்கு எதிராக தற்போது மக்கள் ஒன்றிணைந்துள்ளனர். மக்கள் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தும் களம் ஒன்றைத் தற்போது எதிர்பார்த்துள்ளனர். ஐக்கிய தேசிய கட்சியும் அதனையே எதிர்பார்க்கின்றது.

இந்நிலையில் அடுத்த வருடம் பொதுத்தேர்தல் ஒன்று நடத்தப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (அ)

# 200 மில்லியன் டொலரை வழங்கியது உலகவங்கி

உலக வங்கி இலங்கைக்கு 200 மில்லியன் அமெரிக்க டொலரை கடனுதவியாக வழங்கியுள்ளது. சலுகை அடிப்படையில் இந்தக் கடன் வழங்கப்பட்டுள்ளது.

பொதுச்சுகாதார முறைமையை வலுப்படுத்தும் நோக்கிலேயே இந்த உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

தேசிய சுகாதார அபிவிருத்தித் திட்டத்தை அமுல்படுத்தும் அரசாங்கத்தின் நோக்கத்திற்கு உலகவங்கி உதவிகளை வழங்கும் என அறிவித்துள்ளது. (அ)




- 1770 -கப்டன் ஜேம்ஸ் குக் கிழக்கு அவுஸ்திரேலியாவில் தரையிறங்கி அதனை பெரிய பிரித்தானியாவுக்குச் சொந்தமாக்கி அதற்கு நியூ சவுத் வேல்ஸ் எனப் பெயரிட்டான்.
- 1821 - ஜார்விஸ் தீவு கண்டுபிடிக்கப்பட்டது.
- 1831 - கறுப்பின அடிமைகளுக்குத் தலைமை தாங்கி நாட்டர்னர் கிளர்ச்சியைத் தொடங்கினார்.
- 1842 - டாஸ்மானியாவின் தலைநகர் ஹோபார்ட் நகரம் அமைக்கப்பட்டது.
- 1863 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: கூட்டமைப்புத் தீவிரவாதிகளின் தாக்குதலில் கன்சாஸ் மாநிலத்தில் லோரன்ஸ் நகரம் அழிக்கப்பட்டது.
- 1911 - லியனார்டோ டாவின்சியின் ஓவியமான மோனாலிசா பாரிசின் லூவர் அருங்காட்சியகத்தில் இருந்து திருடப்பட்டது.
- 1920 - சேர் ஏ.கனகசபை இலங்கையின் அரசியல் நிர்ணய சபைக்கு தமிழ்ப் பிரதிநிதியாகத் தெரிவானார்.
- 1942 - இரண்டாம் உலகப் போர்: ஸ்டாலின் கிராட் போர் ஆரம்பமானது.
- 1959 - ஹவாய் ஐக்கிய அமெரிக்காவின் 50ஆவது மாநிலமாக இணைக்கப்பட்டது.
- 1968 - சோவியத் தலைமையிலான வார்சா ஒப்பந்த நாடுகளின் படையினர் செக்கோஸ்லவாக்கியாவைக் கைப்பற்றினர்.
- 1983 - பிலிப்பைன்ஸ் எதிர்க்கட்சித் தலைவர் பெனீனோ அக்கீனோ மணிலாவில் கொலை செய்யப்பட்டார்.
- 1986-கமரூனில் நியோஸ் ஆற்றில் காபனீரொட்சைட்டு வளிமம் கசிந்ததில் ஆயிரத்து 800 பேர் வரையில் கொல்லப்பட்டனர்.
- 1991 - லாத்வியா சோவியத் ஒன்றியத்திடம் இருந்து விடுதலையை அறிவித்தது.

**பிறப்புகள்**

- 1906 - ப. ஜீவானந்தம், பொதுவுடைமைவாதி (இ. 1963)
- 1917 - லியோனிடு ஹர்விக்ஸ், ரஷ்யப் பொருளியல் அறிஞர் (இ. 2008)
- 1936 - வில்ட் சேம்பர்லென், அமெரிக்கக் கூடைப்பந்து ஆட்டக்காரர் (இ. 1999)
- 1986 - உசேன் போல்ட், ஜமெய்க்காவைச் சேர்ந்த தடகள ஆட்டக்காரர்

**இறப்புகள்**

- **1901 - அடோல்ப் பிக், தொடு வில்லையைக் கண்டுபிடித்தவர் (பி. 1829)**
- 1940 - லியோன் ட்ரொட்ஸ்கி, ரஷ்யப் புரட்சியாளர் (பி. 1879)
- 1995 - சுப்பிரமணியன் சந்திரசேகர், இந்திய வானியல்-இயற்பியலாளர், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1910)
- 2006 - உஸ்தாத் பிஸ்மில்லா' கான், இந்திய ஷெனாய் இசைக்கலைஞர், (பி. 1916)

**அடோல்வ் விக்**



அடோல்வ் பிக் 1829 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 3 ஆம் திகதி ஜேர்மனியில் பிறந்தார். தொடுகை வில்லையைக் (Contact lense) கண்டுபிடித்தவர்.


ஜேர்மனியரான பிக் 1851 ஆம் ஆண்டு மருத்துவத்தில் கலாநிதிப் பட்டம் பெற்றார். 1887 ஆம் ஆண்டு தொடுகை வில்லையை அறிமுகம் செய்த பிக் முதலில் முயலிலும் பின்னர் தன்னிலும் இறுதியாக சில தன்னார்வலர்களிலும் அதனைச் சோதித்தார்.

இவர் 1901 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 21 ஆம் திகதி [illegible] காலமானார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியா- இலங்கை- 13-வது திருத்தச்சட்டம்- மற்றும் முரண்பாடுகள்





**இவ்வாறு இந்தியாவின் கல்கத்தாவைத் தளமாகக் கொண்ட The Telegraph ஊடகத்தில் Sonia sarkar எழுதியுள்ள கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

13-வது திருத்தச்சட்டம் தொடர்பில் இந்தியா மற்றும் இலங்கை ஆகிய நாடுகளுக்கிடையில் முரண்பாடு ஏற்பட்டுள்ளதாக வல்லுனர்கள் கூறுகின்றனர்.

இலங்கைத்தமிழ் மக்களின் நலன்களைப் பாதுகாப்பதற்கான சிறந்த ஒரு பொறிமுறையாக 13-வது திருத்தச்சட்டம் உள்ளதாக இந்தியா கருதுகிறது.

இந்தியாவானது தனது அயல்நாடுகளுடன் கொண்டுள்ள முரண்பாடானது ஒரு போதும் முடிவுக்கு வராது போல் தெரிகிறது. ஏற்கனவே இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான உறவானது இருநாடுகளின் எல்லைகளைக் கட்டுப்படுத்துவது தொடர்பில் விரிசலடைந்த நிலையில் தற்போது இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையிலான அயல்நாட்டு உறவானது சீரற்றதாக இருப்பதுபோல் தென்படுகிறது. இலங்கையுடனான இந்தியாவின் உறவானது இலங்கையின் உள்விவகாரங்களை அடிப்படையாகக்கொண்டது.

13-வது திருத்தச்சட்டத்தை மீள ஆராய்வதற்காக நாடாளுமன்றத் தெரிவுக்குழுவொன்றை இலங்கை உருவாக்கியுள்ளது. முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்கும் இலங்கையின் முன்னாள் அதிபர் ஜே.ஆர். ஜெயவர்த்தனாவுக்கும் இடையில் 1987 இல் கைச்சாத்திடப்பட்ட இந்திய- இலங்கை கூட்டு உடன்படிக்கையின் அடிப்படையில் இலங்கையில் உள்ள மாகாணங்களுக்கு அதிகாரங்களைப் பகிர்வதை உறுதிப்படுத்துகின்ற 13-வது திருத்தச்சட்டம் உருவாக்கப்பட்டது.

காணி, காவற்றுறை, சுகாதாரதுறை, கல்வித்துறை, நிதித்துறை, வரி அறவீடு, வீடமைப்பு போன்ற பல்வேறு துறைகளுக்கான அதிகாரங்களை மாகாணங்களுக்கு பகிர்ந்தளித்தல் தொர்டர்பில் இந்தியாவின் மாநில அரசாங்கங்கள் போன்று சில விடயங்களில் இலங்கையில் அமைக்கப்பட்டுள்ள மாகாண சபைகள் செற்பட வேண்டும் என 13-வது திருத்தச்சட்டம் குறிப்பிடுகிறது.

இலங்கையின் வடக்கில், தமக்கான தனிநாடு கோரிப் போராடிய தமிழ் மக்களின் தன்னாட்சியை உறுதிப்படுத்தும் விதமாகவும் அவர்களின் நலன்களையும் அவர்களின் உரிமைகளையும் பாதுகாப்பதற்காகவே பிரதானமாக இத்திருத்தச் சட்டம் உருவாக்கப்பட்டது. இலங்கையில் சிங்களம் உத்தியோகபூர்வ மொழியாக இருப்பதுபோல் இச்சட்டம் மூலம் தமிழ் மொழியில் உத்தியோகபூர்வ மொழியாகப் பிரகடனப்படுத்தப்பட்டது.

13-வது திருத்தச்சட்டத்தின் அடிப்படையில் இலங்கையில் வாழும் தமிழ் மக்கள் மதிக்கப்படுவதுடன் அவர்களது நலன்கள் கவனத்திற் கொள்ளப்பட வேண்டும் என இந்தியா கருதுகிறது. 25 ஆண்டுகளுக்குப் பின்பு செப்ரெம்பரில் வடக்கு மாகாண சபைக்கான தேர்தல் நடைபெறவுள்ளது.

ஆனால், 13-வது திருத்தச்சட்டம் தற்போது தேவையில்லை என இலங்கை கருதுகிறது. இலங்கையில் யுத்தம் நடந்துகொண்டிருந்த காலப்பகுதியில் இத்திருத்தச் சட்டமானது இனப்பிரச்சினையை முடிவுக்குக்கொண்டு வருவதற்கான ஒரு தீர்வாக காணப்பட்டது. ஆனால், தற்போது இலங்கையில் போர் முடிவடைந்து அமைதி நிலவுகிறது. தற்போது நாட்டில் மீளிணக்கப்பாடு, மீள்கட்டுமானம் மற்றும் அபிவிருத்திகளை மேற்கொள்ள வேண்டிய தேவை எழுந்துள்ளது என இந்தியாவுக்கான இலங்கையின் உயர் ஆணையாளர் பிரசத் காரியவம்வம் தெரிவித்துள்ளார்.

இந்தியா போன்ற வெளிச்சக்தியால் இலங்கை மீது பலவந்தமாக திணிக்கப்பட்ட ஒன்றே மாகாணசபை முறைமை என இலங்கை அரசாங்க வட்டாரங்கள் கூறுகின்றன. இலங்கையின் 13-வது திருத்தச்சட்டமானது ஒரு அரசியல் யாப்பின் ஏற்பாடாகக் காணப்படுகிறது. இந்நிலையில் மாகாணசபை செயற்படும் வரை பொறுத்திருக்குமாறு நாங்கள் இலங்கை அரசாங்கத்தைக் கோருகிறோம். 13-வது திருத்தச்சட்டமானது அரசியல் யாப்பில் குறிப்பிட்டதுபோன்று செயற்படுத்தப்பட வேண்டும் என நாம் விரும்புகிறோம். இத்திருத்தச்சட்டத்தை நீர்த்துப்போகச் செய்வதற்கான அல்லது ஒழிப்பதற்கான தீர்மானமானது செப்ரெம்பரில் மாகாணசபைத் தேர்தல் இடம்பெற்ற பின்னரே மேற்கொள்ளப்பட வேண்டும் என இந்திய வெளிவிவகார அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஆனால், இலங்கையானது இந்த வேண்டுகோளை கவனத்திற்கொள்ளாததானது இந்தியாவுக்கு மிகப்பெரும் அதிருப்தியை ஏற்படுத்துவதாக இராஜதந்திரிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

13-வது திருத்தச்சட்டத்தை இலங்கை அரசாங்கமானது ஒழித்தால் அல்லது நீர்த்துப்போகச் செய்தால் அது இந்தியாவின் முகத்தில் அறைவது போன்றிருக்கும் என சென்னைப் பல்கலைக்கழகத்தின் தெற்கு மற்றும் தென்கிழக்காசிய கற்கைக்கான மையத்தின் முன்னாள் இயக்குனர் வி.சூரியநாராயணன் தெரிவித்துள்ளார். இலங்கையில் வாழும் தமிழ் மக்களின் நலனில் இந்தியா அக்கறை கொள்வதுடன், இத்திருத்தச்சட்டம் அமுலாக்கப்படுவதற்காக இந்தியா தொடர்ந்தும் உழைக்க வேண்டும் என சூர்ய நாராயணன் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

13-வது திருத்தச்சட்டம் தொடர்பில் இந்தியா மற்றும் இலங்கை ஆகிய நாடுகளுக்கிடையில் முரண்பாடு ஏற்பட்டுள்ளதாக வல்லுனர்கள் கூறுகின்றனர். இலங்கைகத் தமிழ் மக்களின் நலன்களைப் பாதுகாப்பதற்கான சிறந்த ஒரு பொறிமுறையாக 13-வது திருத்தச்சட்டம் உள்ளதாக இந்தியா கருதுகிறது.

காணி மற்றும் காவற்றுறை அதிகாரங்களை மாகாணங்களுக்குப் பகிர்ந்தளிக்கும் போது சில பிரச்சினைகளைச் சந்திக்க வேண்டியேற்படும் என காரியவம்சம் தெரிவித்துள்ளார்.

காணி மற்றும் காவற்றுறை தொடர்பான பெரும்பாலான அதிகாரங்கள் இலங்கையின் மத்திய அரசாங்கத்தால் கட்டுப்படுத்துவது போலவே இத்திருத்தச்சட்டம் வரையப்பட்டுள்ளதாக பலர் கூறுகின்றனர். காணி கையளித்தல், மாற்றுதல், கையகப்படுத்துதல், பயன்படுத்துதல், குடியேற்றுதல் போன்ற அதிகாரங்களை மாகாணசபைகள் கட்டுப்படுத்த வேண்டும் என இத்திருத்தச்சட்டம் குறிப்பிடுகிறது. ஆனால், காணிகளைப் பயன்படுத்துவது தொடர்பான கோட்பாட்டை இலங்கை மத்திய அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டுள்ள தேசிய காணி ஆணைக்குழுவே கட்டுப்படுத்துகிறது. தேசிய காணிக் கோட்பாட்டை அடிப்படையாகக்கொண்டு மாகாணங்களால் அதிகாரங்கள் பிரயோகிக்கப்பட வேண்டும் என திருத்தச்சட்டம் குறிப்பிடுகிறது.

இதேபோன்று காவற்றுறை தொடர்பான அதிகாரங்களும் ஒத்ததாகவே காணப்படுகிறது.

சட்டத்துடன் தொடர்புபட்டு காவற்றுறை அதிகாரங்கள் மாகாண சபையின் கீழ் காணப்படுகிறது. இது தேசிய பாதுகாப்பின் கீழ் காணப்படவில்லை. இந்த அடிப்படையில் மாகாணங்களிடம் கையளிக்கப்பட வேண்டிய காணி மற்றும் காவற்றுறை அதிகாரங்களை விலக்கிக்கொள்ள வேண்டும் எஶ இலங்கை அரசாங்கம் விரும்புகிறது.

செப்ரெம்பரில் வடக்கு மாகாண சபைத் தேர்தல் நடைபெறுவதற்கு முன்னர் 13- வது திருத்தச்சட்டத்தில் மாற்றத்தைக்கொண்டு வரவேண்டும் அல்லது அதனை ஒழிக்க வேண்டும் என இலங்கை அரசாங்கம் கருதுவதாகவும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது வடக்கு மாகாண சபைத் தேர்தலில் வென்றால் 13-வது திருத்தச்சட்டத்தை அமுல்படுத்த வேண்டும் எனகூட்டமைப்பு அழுத்தம் கொடுக்கும் என அரசாங்கம் அஞ்சுவதாகவும் வல்லுனர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இத்திருத்தச்சட்டதை ஒழிக்க வேண்டும் என இலங்கை அரசாங்கம் கருதுவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொடர்பான அச்சமே காரணம் என்கின்ற கூற்றை காரியவம்சம் ஏற்க மறுத்துள்ளார். காவற்றுறை அதிகாரங்களை முழு அளவில் கட்டுப்படுத்துகின்ற திறமையை எமது மாகாண சபைகள் போதியளவில் கொண்டிருக்கவில்லை. இந்த அதிகாரங்கள் தவறாகப் பயன்படுத்தப்படலாம் என நாம் அஞ்சுகிறோம் என காரியவம்சம் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

13-வது திருத்தச்சட்டத்தை இலங்கை அரசாங்கமானது நீர்த்துப்போகச்செய்கின்ற அல்லது ஒழிக்கின்ற தீர்மானத்தை எடுக்கக் கூடாது என வலியுறுத்துமாறு கோரி தமிழ் நாட்டு முதலமைச்சர் ஜெ.ஜெயலலிதா இரு தடவைகள் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு கடிதம் எழுதியுள்ளார்.

இலங்கையில் வாழும் தமிழ் மக்களுக்கு அரசியல் அதிகாரங்களைப் பகிர்ந்து கொடுக்கப்பட வேண்டும் என்பதை இந்தியாவனாது வலியுறுத்தும் எனவும் இதில் இந்தியாவானது மிகத் தீவிர கவனம் செலுத்தும் எனவும் ஒன்றுபட்ட இலங்கைக்குள் தமிழ் மக்கள் தமது தலைவிதியைத் தாமே தீர்மானிக்கின்ற உரிமை வழங்கப்படுவதை இந்தியா உறுதிப்படுத்தும் எனவும் பிரதமர் மன்மோகன் சிங் தெரிவித்துள்ளார்.

13-வது திருத்தச்சட்டம் தொடர்பாக குரல் கொடுப்பதன் மூலம் இந்தியாவானது தனது உள்நாட்டு தமிழ் அரசியற் கட்சிகளை சமாதானப்படுத்த முயற்சிக்கிறது.

இலங்கையின் உள்விவகாரங்களில் இந்தியா அதிகம் தலையீடு செய்வதாக இலங்கையர்கள் விசனப்படுத்துகின்றனர் என இலங்கை அரசாங்கத்தின் மூத்த அதிகாரி ஒருவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இவ்வாறான குற்றச்சாட்டை இந்தியா மறுத்துள்ளதுடன் இலங்கையின் உள்விவகாரங்களில் தலையீடு செய்வதற்கு இந்தியாவின் உள்நாட்டு அழுத்தம் காரணமில்லை என இந்திய அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார் இவ்வாறான முரண்பாடானது வடக்கில் மீண்டும் ஒரு மோதல் ஏற்பட வழி வகுக்கும்.

தனது அயல்நாட்டில் புதிதாக ஒரு பிரச்சினை ஏற்படாதிருப்பதை வழிவகுப்பது இந்தியாவின் பொறுப்பாகும் எனடில்லி, ஜவர்கலால் நேரு பல்கலைக்கழகத்தின் அனைத்துலக கற்கை நெறி மையத்தின் தென்னாசியக் கற்கை நெறியைக் கற்பிக்கும் பி.சகாதேவன் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் உள்விவகாரங்களில் தலையிடுவதால் இலங்கையினடமிருந்து இந்தியா எதிர்ப்பைச் சம்பாதித்துக்கொள்ளும் அதேவேளையில் இவ்வாறு செய்யாவிட்டால் ஈழத் தமிழ் மக்களின் நலன்களில் இந்தியா அக்கறை காட்டவில்லை என்ற குற்றச்சாட்டுக்கு ஆளாகலாம் என்கின்ற இருவேறுபட்ட நிலைப்பாடுகளுக்கிடையில் இந்தியா சிக்கியுள்ளதானது தெளிவாகிறது.

இவ்வாறான இக்கட்டான ஒரு சூழ்நிலையை இந்தியா எவ்வாறு கையாளப்போகிறது என்பதைப் பொறுத்திருந்து பார்க்கவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆவணி மாத இராசி பலன்கள்

## 17.08.2013-16.09.2013



## கும்பம்

**அவிட்டம் 3,4 ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1,2,3 ஆம் பாதங்கள்**

**மற்றவர்களின் எண்ணங்களைப் புரிந்துகொண்டு செயற்படுவதில் வல்லவர்களாக விளங்கும் கும்ப இராசி நேயர்களே!**

**வருமானம் திருப்தி தரும்!**

ஆவணி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது சூரியப் பார்வை உங்கள் இராசியிலேயே பதிகிறது. அதோடு பஞ்சம அஷ்ட மாதிபதி புதனும் இணைந்திருப்பதால் நெஞ்சம் மகிழும் சம்பவங்கள் நிறையவே நடைபெறப்போகிறது. அரசு வழியில் ஆதாயம் கிடைக்கும். புகழ், கீர்த்தி, பொருளாதார உயர்வு அனைத்தும் கிடைக்கும் விதத்தில் கிரக நிலைகள் சாதகமாக உலா வருகின்றன.

எல்லாவற்றிற்கும் மேலாக சகாய ஸ்தானாதிபதி செவ்வாயுடன் கூடிய குரு உங்கள் இராசியைப் பார்க்கிறார். எனவே, தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். துணையாக இருப்பவர்கள் தோள் கொடுத்து உதவுவர். வெற்றிச் செய்திகள் வீடு வந்து சேரும். விருப்ப ஓய்வில் இருப்பவர்கள் கூட சொந்தத் தொழில் செய்யலாமா என்று சிந்திப்பர். வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழ வாய்ப்புக் கிட்டும்.

இராசிநாதன் சனி9 இல் உச்சம் பெறுவது யோகம்தான். பூர்வீக சொத்துக்களில் தகராறுகள் அகலும். தந்தைவழி உறவிலிருந்த விரிசல்கள் மறையும். வாகனம் வாங்கப்போட்ட திட்டம் நிறைவேறும். சுக்ரப்பெயர்ச்சிக்குப் பிறகு மேலும் நன்மைகள் உங்களுக்கு வந்து சேரும். குறிப்பாக பெண் குழந்தைகளின் எதிர்கால நலன்கருதி அவர்களுக்குத் தேவையான ஆபரணங்களை வாங்கிச் சேர்க்க முற்படுவீர்கள். உற்றார் உறவினர்கள் பாராட்டும் விதத்தில் உங்கள் முன்னேற்றம் ஏற்படும்.

உள்ளத்தில் ஒன்றும் உதட்டில் ஒன்றும் வைத்துப்பேசியவர்கள் உங்களை விட்டுவிலகுவர். குரு மங்கள யோகம் இருப்பதால் பெற்றோர்களின் மணிவிழா, பிள்ளைகளின் மணவிழா போன்ற சுப காரியங்கள் இல்லத்தில் நடைபெறுவதற்கான அறிகுறிகள் தோன்றும். இராசி நாதனோடு ராகு இணைந்திருப்பதாலும் சகாய ஸ்தானத்தில் கேது இருப்பதாலும் அரவு கிரகங்களுக் குரிய வழிபாட்டை முறையாக மேற்கொள்வது நல்லது.

அதுமட்டுமல்ல பார்க்கும் குருவைப் பலப்படுத்த வியாழக்கிழமை தோறும் குரு வழிபாட்டையும் மேற்கொள்ளுங்கள். குரு பார்க்கக் கோடி நன்மை என்பதால் அதன் வழிபாட்டின் மூலம் மிகப் பெரிய வளர்ச்சி உங்களுக்கு வந்து சேரலாம்.

**கடகச் செவ்வாயின் சஞ்சாரம்!**

ஆகஸ்ட் 19 ஆம் திகதி கடக இராசியில் செவ்வாய் சஞ்சரிக்கப்போகிறார். கடக இராசி செவ்வாய்க்குரிய வீடாகும். 3,10 க்கு அதிபதி நீச்சம் பெறும் பொழுது முன்னேற்றப் பாதையில் சில முட்டுக்கட்டைகள் ஏற்படத்தான் செய்யும். இருந்தாலும் அவற்றை ஒரு வழியாகச் சமாளித்து விடுவீர்கள். உங்களுக்கோ, உங்களைச் சார்ந்தவருக்கோ மருத்துவச் செலவுகள் அதிகரிக்கலாம். உத்தியோகத்தில் இருப்பவர்கள், உடனிருப்பவர்களை அனுசரித்துச் செல்ல வேண்டிய நேரமிது. மேலதிகாரிகள் உங்கள் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றத் தாமதப்படுத்துவதால் பயணங்கள் அதிகரிக்கும். நண்பர்களிடம் ஒப்படைத்த பொறுப்பு மீண்டும் உங்களிடமே வந்து சேரலாம். நல்ல வாய்ப்புக்களை உபயோகப்படுத்திக்கொள்ள அங்காரக பரிகாரம் செய்வது உத்தமம்.

**உச்ச புதனின் சஞ்சாரம்!**

செப்ரெம்பர் 2 ஆம் திகதி கன்னி இராசியில் புதன் உச்சம் பெறப்போகிறார். பஞ்சம அஷ்டமாதிபதியான புதன் 8 இல் உச்சம் பெறுவதால் நன்மையும் தீமையும் கலந்தே நடைபெறும். ஒரு தொகை செலவழிந்த பின்னரே மற்றொரு தொகை வந்து சேரும். மாமன், மைத்துனன் வழியில் மனக்கசப்பு தரும் செய்தி வந்து சேரலாம். சேமிப்புக் கரைந்தாலும் திடீர், திடீரெனத் தனலாபம் வந்துகொண்டே இருக்கும். அதனால் கரைந்த சேமிப்புக்களை ஈடுகட்டுவீர்கள். பூமிப் பிரச்சினை தலைதூக்கி மறையும். புதன்கிழமை பெருமாளை வழிபட்டு வருவதன் மூலம் பொன்னான வாழ்க்கை அமையும்.

**சுகம் தரும் சுக்ரப் பெயர்ச்சி!**

சுக்ரன் செப்ரெம்பர் 7 ஆம் திகதி துலாம் இராசியில் சஞ்சரிக்கப்போகிறார். சொந்த வீட்டில் சஞ்சரிக்கும் சுக்ரன் உங்களுக்கு நல்ல பலன்களையே வழங்குவார். இல்லம் கட்டிக் குடியேற வேண்டுமென்ற எண்ணம் பூர்த்தியாகும். வீட்டிற்குத் தேவையான விலையுயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். பயணங்களால் பலன் கிடைக்கும். ஆரோக்கியம் சீராகி ஆனந்தப் படுத்தும்.

# வருமானம் திருப்தி தரும்!

## சிவல்புரி சிங்காரம்



## மீனம்

**பூரட்டாதி 4 ஆம் பாதங்கள், உத்திரட்டாதி, ரேவதி**

**தங்கமானவர் என்று தரணியில் போற்றப்படும் மீன இராசிநேயர்களே!**

**வாய்ப்புகள் வந்து சேர வழிபாடுகள் தேவை!**

ஆவணி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மங்கல காரகன் செவ்வாய் உங்கள் இராசிநாதன் குருவுடன் இணைந்து மகிழ்ச்சியை வரவழைத்துக்கொடுக்கும் விதத்தில் இந்த மாதம் அமைந்தாலும் மாதத் தொடக்கத்தில் 6 ல் சூரியன் பலம் பெற்று விளங்குகிறார். அஷ்டமத்தில் சனி உச்சம் பெற்றுள்ளார். செப்ரெம்பர் 7 இல் அஷ்டமாதிபதி சுக்ரனும் அஷ்டமத்தில்வந்து இணைகிறார். எனவே, கூடுதல் விரயத்திற்கு மத்தியில் உங்கள் குடும்ப முன்னேற்றம் அதிகரிக்கும்.

வாக்கு ஸ்தானத்தில் கேது பலம் பெறுவதால் கொடுத் வாக்கைக் காப்பாற்ற இயலுமா? என்பது சந்தேகம் தான். யாருக்கும் பொறுப்புகள் சொல்லும் பொழுது யோசித்துச் சொல்வது நல்லது. 12 க்கு அதிபதி சனி 8 இல் உச்சம் பெறும்பொழுது விபரீத ராஜயோக அடிப்படையில் திடீர் மாற்றங்கள் ஏற்பட்டு திகைக்க வைக்கும் தாமப்பட்டு வந்த சில காரியங்கள் திடீரென நடைபெற்று சந்தோஷத்தை வழங்கும்.

சேமிப்புக் கரைகிறதே என்று கவலைப்பட்டவர்கள் இனி கரைந்த சேமிப்புக்களை ஈடுகட்ட வாய்ப்புகள் கைகூடி வரும். குறிப்பாக மாதத் தொடக்கத்தில் பஞ்சம ஸ்தானாதிபதி சந்திரன் 10 இல் சஞ்சரிக்கும் பொழுது அவரைக் குரு பார்த்து குருச் சந்திரயோகம் உருவாகிறது. எனவே ஆவணி முதல் வாரம் ஒரு அற்புதமான வாரமாக உங்களுக்கு அமையும். தேவைகள் பூர்த்தியாகும். திருமண முயற்சி கைகூடும். கோவில் வழிபாட்டிற்கென்று ஒரு தொகையைச் செலவழிப்பீர்கள்.

கொடுக்கல்- வாங்கல்களில் சந்தித்த ஏமாற்றங்கள் அகலும். விலகிச்சென்ற சொந்தங்கள் விரும்பிவந்து சேருவர். வீடு மாற்றச் சிந்தனைகள் மேலோங்கும். நாடு மாற்றம் செய்து வெளிநாட்டில் வசிப்பவர்கள் ஏதேனும் பிரச்சினைப்பட்டு தாய் நாட்டிற்கே திரும்பும் சூழ்நிலை உருவாகலாம். தங்கம், வெள்ளி போன்றவைகள் தைரியமாக வாங்கிச் சேர்க்க முன்வருவீர்கள்.

சூரிய பலம் கூடுதலாக இருப்பதால் அரசுவழித் தொல்லைகளை ஒருசிலர் சந்திக்க நேரிடலாம். கூட்டுத் தொழில் செய்வோர் கூட்டாளிகளிடம் கவனமாக இருப்பது நல்லது. பொதுவாக 6 ஆம் இடம் வலுக்கும்பொழுது எதிரிகளின் பலம் கூடுதலாகவே இருக்கும். எனவே, வழக்குகளில் சிக்கியிருப்பவர்கள் எதையும் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்துச் செய்வது நல்லது. வாலில் மணிகட்டிய ஆஞ்சநேயர் வழிபாட்டால் உங்கள் வளர்ச்சியைக் கூட்டிக்கொள்ளலாம்.

**கடகச் செவ்வாயின் சஞ்சாரம்!**

ஆகஸ்ட் 19 ஆம் திகதி கடக இராசியில் செவ்வாய் சஞ்சரிக்கப் போகிறார். இதன் விளைவாக விரயங்கள் கூடுதலாகவே இருக்கும். புத்திர ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் செவ்வாய் சனியைப் பார்ப்பதால் பிள்ளைகளன் வழியில் கொஞ்சம் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. பூர்வீக சொத்துக்களில் ஏற்பட்ட பஞ்சாயத்துக்கள் முடிவிற்கு வருவதில் தாமதம் ஏற்படலாம்.

உடன்பிறப்புகளில் உங்களை விட்டு விலகிச்செல்லாமல் பார்த்துக் கொள்வது உங்கள் புத்திசாலித்தனமாகும். கடன் சுமை ஒருபுறம் குறைந்தாலும் புதுக் கடன்களும் ஒருசிலருக்கு வாங்கும் அமைப்பு உருவாகும் நேரமிது. என்பதால் இடத்தை மாற்றலாமா? என்ற சிந்தனை மேலோங்கும்.

**உச்ச புதனின் சஞ்சாரம்**

செப்ரெம்பர் 2 ஆம் திகதி கன்னி இராசியில் புதன் உச்சம் பெறப்போகிறார். இதன்விளைவாக நீண்டதூரப் பயணங்களை மேற்கொள்ளும் வாய்ப்பு ஒரு சிலருக்கு உருவாகும். மாமன், மைத்துனர் வழியில் மங்கல நிகழ்ச்சிகள் நடைபெறுவதற்குரிய அறிகுறிகள் தோன்றும். வாழ்க்கைத்துறை வழியே வரவு வந்த சேரும். குழந்தைகளின் வேலை வாய்ப்புக்களின் மூலம் உதிரி வருமானங்கள் வந்து சேரலாம். ஆரோக்கியம் சீராகும்.

**சுகம் தரும் சுக்ர பெயர்ச்சி!**

செப்ரெம்பர் 7 ஆம் திகதி துலாம் இராசியில் சுக்ரன் சஞ்சரிக்கப்போகிறார். சொந்த வீட்டில் சுக்ரன் சஞ்சரித்தாலும் விபரீத இராஜயோக அடிப்படையில் செற்படப்போகிறது. எனவே, நீங்கள் நினைத்துப் பார்க்காத சில காரியங்கள் இப்பொழுது நடைபெற்று மகிழ்ச்சியை வழங்கும். வீட்டிற்குத் தேவையான மின்சாதனப் பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். செயற்பாடுகளில் எதிர்பாராத விதத்தில் வெற்றி கிடைக்கும் நேரமிது.

(முற்றும்)

# வாய்ப்புகள் வந்து சேர வழிபாடுகள் தேவை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். விருது பெறும் கல்விமான் பேராசிரியர் நீ.மரியசேவியர் அடிகள்

"காவியத்தில் காண்கின்ற சில நல்ல மனிதர்களை வாழ்க்கையிலே காண்கின்ற போது அவர்களை வாழ்த்தத் தோன்றவில்லை வணங்கத்தான் தோன்றுகின்றது" என்ற கவிஞர் மு. மேத்தாவின் வரிகளுக்கு இணங்க இன, மத, மொழி கடந்து தம் அளப்பரிய சேவையால் பலரின் உள்ளங்களில் வாழும் பேராசிரியர் கலாநிதி நீ. மரியசேவியர் அடிகளாருக்கு யாழ். விருது பரிந்துரை செய்யப்பட்டது மிகவும் மகிழ்ச்சிக்குரியதே.



இளவாலை மண்ணில் பிறந்த அடிகளார் யாழ்ப்பாண நகருக்கு மட்டுமன்றி கடல் கடந்து வாழும் தமிழருக்கும் ஏனைய மொழியினருக்கும் கலையாலும், ஆன்மீகத்தாலும், தம்பணி செய்தவர் என்பதில் இரண்டாம் கருத்து இருக்க முடியாது. 1960ஆம் ஆண்டு இறையியல் உயர் தகைமையாக B.th (B.A) பட்டத்தைப் பெற்றதுடன் 1961ஆம் ஆண்டு M.th (MA) பட்டத்தையும் பெற்று இவர் தான் பிறந்த மண்ணுக்கும், தனது குடும்பத்திற்கும், யாழ் திருச்சபைக்கும் பெருமை சேர்த்தவர்.

தன்னுடைய வார்த்தையாலும், வாழ்வாலும் நல்லதொரு ஆன்மீகவாதியாக ஆழமான கலைத்தத்துவங்களை வழங்கிய இவர் சைவ சித்தாந்தத்திலே தனது இரண்டு மேற்படிப்புக்களையும் மேற்கொண்டமை இவர் மதங்கள் பால் கொண்ட பற்றை வெளிப்படுத்தி நிற்கின்றது.

இவர் ஒரு கத்தோலிக்க அடிகளாராக இருந்தபோதிலும் இவர் மதங்களின் பால் கொண்ட அன்புக்கு இவருடைய இரண்டு உயர் கல்விகளும் சான்றாய் அமைகின்றன. இவர் தனது B.th பட்டத்தை றோமாபுரியின் Eurban பல்கலைக்கழகத்திலே பயின்ற போது கிரேக்கம், எபிரேயம், இலத்தீன், சமஸ்கிருதம், சீன மெய்யியல் என்பவற்றை தனது சிறப்புப் பாடங்களாக கற்றார். அது மட்டுமன்றி அரசு அங்கீகாரம் பெற்ற மதுரை தமிழ் சங்கத்திலே இளம் புலவர், வித்துவான் (புலவர்) பட்டங்களையும் பெற்றார்.

பன்மொழி வித்தகராக திகழ்ந்த இவர் லண்டன் பல்கலைக்கழகத்திலே பொதுக் கலைமாணி பட்டத்தைப் பெற்று அதே பல்கலைக்கழகத்தில் அரசியல், இந்து சமயத்திலே முதுகலைமாணி பட்டத்தையும் பெற்றுக் கொண்டார். அத்துடன் நின்றுவிடாது அதே பல்கலைக்கழகத்தில் "வரலாற்றில்" கலாநிதி பட்டத்தையும் பெற்றுக் கொண்டார். இதுதவிரவும் இவருடைய கல்வி ஞானத்திற்கு இன்னுமொரு சான்று ஜேர்மனியின் பஸ்ஸாசு பல்கலைக்கழகத்திலே மெய்யியலில் (சைவ சித்தாந்தம்) D.th அதாவது மெய்யியலில் கலாநிதி பட்டத்தையும் பெற்றுக் கொண்டார். இவருடைய கல்விப் புலமையையும் ஆழ்ந்த அறிவையும் கண்ணுற்ற யாழ்ப்பாண பல்கலைக்கழகம் 2012ஆம் ஆண்டு சிறப்பு கலாநிதி பட்டத்தை வழங்கி கௌரவித்தது. பல கலைப்பாலங்களையும், மொழிப் பாலங்களையும், உறவுப் பாலங்களையும் அமைத்த அடிகளாரின் கலாசாரக் கொள்கைகளை நாம் ஒருபோதும் மறந்துவிட முடியாது. ஒவ்வொரு மக்களினதும் கலாசார பண்பாட்டு விழுமியங்களை திருமறைக் கலாமன்றம் என்ற அளவுகோலால் வளர்த்தெடுத்த பெருமை அடிகளாரையே சாரும். கலைஞனாய், எழுத்தாளனாய், ஆன்மீகவாதியாய், அறிஞனாய், இயக்குநராய், இவைகளுக்கு அப்பால் நல்ல மனிதனாய் யாழ். மண்ணிலே பணி செய்யும் அடிகளாருக்கு அவரது பணிக்காய் யாழ். மாநகர சபையின் சைவசமய விவகாரக் குழுவால் யாழ்ப்பாணத்தின் அதி உயர் விருதான "யாழ் விருது" வழங்கப்பட்டிருப்பது அவரது கலை, கலாசார, சமூக, ஆன்மீக பணிக்கான ஒரு அங்கீகாரமாகும். அன்று தமிழுக்காய் தூது சென்ற தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளார் வழியில் இன்று கலைத்தூது நீ.மரியசேவியர் அடிகள் தமிழுக்கும் தமிழ் அன்னைக்கும் பெருமை புகழ் மாலை சூட்டுவது பெருமையே. இவரின் அளப்பரிய சேவையை, பணியை யாழ். மாநகரசபை நினைவில் கொண்டது பாராட்டுக்குரியதே. அண்மையில் இவர் வெளியிட்ட இறுவெட்டின் புகழ் போல் இன்னும் பல அரிய பணிகளை இவர் செய்ய வேண்டும் என்றும் இவரை கடவுள் இன்னும் பல காலங்கள் ஆசீர்வதிக்க வேண்டும் என்றும் ஆத்மாந்தரீதியில் வாழ்த்துவதோடு தமிழ் உள்ளங்களின் வாழ்த்துக்களும், ஆசிகளும், பிரார்த்தனைகளும் உண்டாகட்டும்.

**ஜொனி மதுரநாயகம், சட்டத்தரணி**

# ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 4498 பிரசார கூட்டங்கள் நடத்தும்

மூன்று மாகாண சபைகளுக்குமான தேர்தலை முன்னிட்டு ஐ.ம.சு.மு மூன்று மாகாணங்களிலும் உத்தியோக பூர்வமாக 4498 கூட்டங்களை நடத்த உள்ளதாக அமைச்சர் டளஸ் அழகப்பெரும கூறினார். ஜனாதிபதி பங்கேற்கும் 14 கூட்டங்கள் உள்ளிட்ட 54 தேர்தல் தொகுதிகளிலும் 54 தொகுதி மட்ட உப பிரதான கூட்டங்களை நடத்த நடவடிக் கை எடுத்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

110 உள்ளூராட்சி சபை தொகுதி மட்டத்தில் மூன்றாம் மட்ட கூட்டங்கள் 110 ஐ நடத்தவும் ஒழுங்குகள் செயற்பட்டிருப்பதாக கூறிய அமைச்சர் 3330 வாக்குச் சாவடிகளின் அடிப்படையிலும் 3330 கூட்டங்கள் நடத்தப்படும் என்றும் தெரிவித்தார்.

ஐ.ம.சு.மு ஏற்பாடு செய்திருந்த ஊடகவியலாளர் மாநாடு நேற்று முன்தினம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையகத்தில் நடை பெற்றது. இங்கு கருத்துத் தெரிவித்த அவர்,

வேட்பாளர்க்ள் வீடு வீடாகச் சென்று முதல் சுற்று பிரசார நடவடிக்கைகளை நடத்தி வருகின்றனர். தேர்தல் நடைபெறும் பிரதேசங்களில் உள்ள 15 இலட்சம் வீடுகளுக்கும் சென்று பிரசாரம் செய்யும் நடவடிக்கை ஓகஸ்ட் மாதம் 31 திகதி மற்றும் செப்டெம்பர் மாதம் முதலாம் திகதிகளில் மேற்கொள்ளப்படும் என்றார். (அ)

# டிசிடி இரசாயனம் அடங்காத பால்மா வகை சந்தைக்கு

## அனுமதித்தது சுகாதார அமைச்சு

தொழில்நுட்ப நிறுவனம் இறக்குமதி செய்யப்படும் 7 வகை பால்மாக்களின் மாதிரிகளை பரிசோதித்து சுகாதார அமைச்சுக்கு அறிக்கை சமர்ப்பித்துள்ளது.

கொழும்பு துறைமுகத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த பால்மா வகைகளில் 7 மாதிரிகள் தொடர்பான பரிசோதனை அறிக்கை நேற்று முன்தினம் சுகாதார அமைச்சின் உணவு ஆலோசனை குழுவிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

அறிக்கையின் மூலம் குறித்த பால்மா வகைகளில் டிசிடி (டைசைனமைட்) இரசாயன பதார்த்தம் இல்லை என உறுதி செய்யப்பட்டுள்ளது.

அதனால் குறித்த பால்மா வகைகளை சந்தைக்கு விநியோகிக்க சுகாதார அமைச்சு அனுமதி அளித்துள்ளது.

இதேவேளை புரோட்டின் தொடர்பில் தொழில்நுட்ப நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட மாதிரிகள் தொடர்பான விசாரணை அறிக்கை இன்று சுகாதார அமைச்சிடம் கையளிக்கப்படவுள்ளது. (அ)

# ஆவணங்கள் எரிப்பு குறித்து தொடர் விசாரணை

(கொழும்பு)

கொழும்பு மாநகர சபையின் ஆவணங்கள் எரிக்கப்பட்டமை தொடர்பில் தொடர்ந்தும் விசாரணை மேற்கொள்ளப்படுவதாக கொழும்பு மாநகர மேயர் ஏ.ஜே.எம்.முஸம்மில் தெரிவித்தார். கொழும்பு மாநகர சபையின் ஆவணங்கள் சில பொரளை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு எரிக்கப்பட்டன.

இது குறித்து தகவல் அறிந்த மாநகர சபை உறுப்பினர்கள் பொரளை மயானத்திற்குச் சென்று ஆவணங்களை மீட்டு மாநகர மேயரிடம் ஒப்படைத்தனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் உள் விசாரணைக்கு மாநகர முதல்வர் உத்தரவிட்ட நிலையில் ஆரம்ப கட்ட விசாரணையில் மாநகர சபையின் முக்கிய ஆவணங்கள் எரிக்கப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. சம்பவத்துடன் தொடர்புடைய நால்வர் மீது ஒழுக்காற்று விசாரணை நடத்துமாறு கொழும்பு மாநகர மேயர் ஏ.ஜே.எம்.முஸம்மில் அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார். (அ)

# விசேட தேவையுள்ளோர் தொடர்பு கொள்க

(கரணவாய்)

கரவெட்டி பிரதேச செயலகத்திற்கு உட்பட மாற்றுத் திறனாளிகள், மனநலம் பாதிக்கப்பட்டோர், நிரந்தர படுக்கை நோயிலுள்ளவர்கள், போக்குவரத்து செய்வதில் பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றவர்கள் ஆகியோரை பிரதேச செயலகத்திலுள்ள சமூக சேவைப்பிரிவில் பதிவு செய்யுமாறு பிரதேச செயலர் எஸ். சிவசிறி அறிவித்துள்ளார்.

இவ்வாறான தேவையுடையோர்களுக்கு கரவெட்டி பிரதேச செயலக சமூக சேவைப் பிரிவினூடாக உதவிகள் பெற்றுக் கொடுப்பதற்கு பதிவுகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (அ-9-60)



கோண்டாவில் மத்திய முன்பள்ளியின் விளையாட்டு விழாவும் பரிசளிப்பு விழாவும் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக கலந்து கொண்ட முன்பள்ளி யாழ். உதவிக் கல்விப் பணிப்பாளர் கந்தசாமி விமலநாதன் மற்றும் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் சிறார்களின் இசையும் அசைவும் நிகழ்வையும் படங்களில் காணலாம். (படங்கள்:- புன்னாலைக்கட்டுவன் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிரந்தர வீடுகள் இன்றி அல்லற்படும் மக்கள்

## உதவ கோரிக்கை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட கரைச்சி பிரதேச செயலர் பிரிவில் உள்ள சிவநகர், உருத்திரபுரம் வடக்கு,உருத்திரபுரம் மேற்கு ஆகிய கிராமங்களில் வாழ்ந்துவரும் குடும்ப அங்கத்தவர்கள் தமக்கு நிரந்தர வீட்டுத்திட்டம் இதுவரையில் வழங்கப்படவில்லை என அரச அதிபர், ஜனாதிபதி மற்றும் உரிய தரப்பினருக்கு முன்னதாகவே கடிதம் மூலமும் நேரடியாகவும் முறையிட்டும் இதுவரை குறித்த விடயம் தொடர்பில் எந்தவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை என கவலை தெரிவித்துள்ளனர்.



கடந்த 2010 ஆம் ஆண்டு மீள் குடியேற்றம் செய்யப்பட்ட இக் கிராமங்களில் 800இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வருகின்ற நிலையில் இன்றுவரை இக்குடும்பங்களுக்கு நிரந்தர வீடுகள் இல்லை. இதனால் இவர்கள் படும் சிரமங்களோ பற்பல.

இப்பகுதிகளில் ஒரு சிலருக்கு மட்டுமே தற்காலிக வீடுகள் வழங்கப்பட்டுள்ளன.

போரினால் சேதமாக்கப்பட்ட தமது வீடுகளை இம் மக்கள் மிகுந்த சிரமங்களுக்கு மத்தியில் புனரமைத்து விட்ட போதிலும் புனரமைப்பிற்கான செலவு செய்த பணம் இதுவரையில் வழங்கப்படவில்லை.

மேலும் இக்கிராமங்களில் பெண்களை தலைமைத்துவமாக கொண்ட குடும்பங்களும் தனிநபரைக் கொண்ட குடும்பங்களும் வாழ்ந்து வருகின்ற நிலையில் இவர்களுக்குக் கூட இன்னமும் எவ்வித வாழ்வாதார உதவிகளும் வழங்கப்படவில்லை.

நெல்சிப் திட்டத்தின் மூலம் சிவநகர், உருத்திரபுரம் மேற்கு ஆகிய கிராமங்களில் உள்ள ஒரு கிலோ மீற்றர் வீதிகள் மட்டுமே புனரமைக்கப்பட்டன. ஏனைய வீதிகள் எவையும் புனரமைக்கப்படவில்லை.

இங்குள்ள மலசலகூடங்கள் போரினால் சேதமடைந்து காணப்படுகின்றன. மேலும் முற்றாக அழிவடைந்த மலசல கூடங்கள் இன்னமும் அமைத்து கொடுக்கப்படவில்லை.

இம் மக்கள் இங்கு மீள்குடியேற்றம் செய்யப்பட்டு மூன்று வருடங்கள் முடிவடைந்த நிலையிலும் இன்னமும் இப்பகுதிகளுக்கு மின்சாரம் வழங்கப்படாமையால் இரவு வேளைகளில் இக் கிராமங்கள் இருளில் மூழ்கிக் கிடக்கின்றன.

இதனால் பாடசாலை மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுகின்றனர்.

இந்திய உதவித் திட்டத்தால் வழங்கப்பட்ட சீமெந்து கூட வழங்கப்படவில்லை. மேற்குறித்த கிராமங்களில் மீள்குடியேற்றம் செய்யப்படுவதற்கு மூன்று மாதங்களுக்கு முன்னதாக மீள்குடியேற்றம் செய்யப்பட்ட ஜெயந்திநகர், உருத்திரபுரம் கிழக்கு, கணேசபுரம், திருநகர் ஆகிய கிராமங்களுக்கு வீட்டுத்திட்டம் உள்ளிட்டஅனைத்து உதவிகளும் வழங்கப்படுகின்றன.

மேலும் இந்திய உதவித் திட்டத்தின் மூலம் ஏனைய கிராமங்களுக்கு வழங்கப்பட்ட சீமெந்து உதவி கூட தமக்கு வழங்கப்படவில்லை என்றும் இவ்வாறு சகல விதங்களிலும் தாம் மட்டும் புறக்கணிக்கப்படுவது ஏன்? எனவும் மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

எனவே, இதுவிடயம் சார்ந்த அதிகாரிகள் தமக்கு உதவிபுரிய விரைவில் முன்வரவேண்டுமென இக்கிராம மக்கள் கோரிக்கை ஒன்றை முன் வைத்துள்ளனர். (ம-254)




# மின்சாரம் இன்மையால் மலையாளபுரம் இருளில்



(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட கரைச்சி பிரதேச செயலர் பிரிவில் உள்ள மலையாளபுரம் கிராமத்திற்கு மின்சாரம் வழங்கப்படவில்லை என கவலை தெரிவித்த அப் பகுதி மக்கள் மின்சாரத்தை வழங்குமாறு கோரிக்கை ஒன்றையும் முன்வைத்துள்ளனர்.

போரினால் அனைத்தையும் இழந்து நிர்க்கதியாக்கப்பட்டு கடந்த 2010 ஆம் ஆண்டு மீள்குடியேற்றம் செய்யப்பட்டு மூன்று வருடங்கள் கடந்த நிலையில் ஒருசில குடும்பங்களுக்கு மட்டுமே மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது. ஏனைய குடும்பங்களுக்கு இதுவரை மின்சாரம் வழங்கப்படாமை கவலைக்குரிய விடயமாகும்.

குறிப்பாக இக் கிராமத்தில் முதியோர் இல்லம் ஒன்று இயங்கும் நிலையில் அவ் இல்லத்துக்கேனும் மின்சாரம் வழங்கப்பட்டிருக்க வேண்டும். இவ் இல்லத்தில் மின்சாரம் இன்மையால் இங்கு தங்கியுள்ள முதியவர்கள் இரவு வேளைகளில் பெரும் சிரமங்களுக்கு உட்படுகின்றனர்.

மேலும் பாடசாலை மாணவர்கள் உள்ளிட்ட அனைவருமே மின்சாரம் இன்றி பல இன்னல்களை எதிர் கொள்ள வேண்டியுள்ளனர்.

இக்கிராமத்திற்கு அருகில் உள்ள பாரதிபுரம்,அறிவியல் நகர் ஆகிய கிராமங்களுக்கு மின்சாரம் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

எனவே, தமது நிலையைகருத்திற் கொண்டு மின்சாரத்தை வழங்கி உதவுமாறு அப்பகுதி மக்கள் வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளனர். (ம)

# வீதியை புனரமைத்து தருமாறு கோரிக்கை

(கிளிநொச்சி)

அம்பாள்குளம் கிராமத்தையும் பாரதிபுரம் கிராமத்தையும் இணைக்கின்ற வீதி புனரமைக்கப் படாதது டன் வீதிநடுவே பாரிய பள்ளம் ஒன்றும் காணப்படுகின்றது.

இந்த பள்ளத்தில் மழைகாலத்தில் பயணிக்க வேண்டிய நிலை காணப்படுகின்றது.

அத்துடன், இவ் வீதியால் பயணிக்கும் பயணிகள் பலர் இப் பெரிய பள்ளத்தில் விழுந்து எழும்பி காயப்பட்டும் செல்லும் நிலை தொடர்ந்த வண்ணம் உள்ளது.



இந்த பள்ளத்தில் மழைகாலத்தில் நீர் தேங்கி நின்று விபத்துக்கள் பல ஏற்படக் கூடிய சாத்திய நிலை காணப்படுகின்றது.

இவ்வீதியில் அம்பாள்குளம் விவேகாணந்தா வித்தியாலயம், பாரதிபுரம் பாரதிவித்தியாலயம் ஆகிய பாடசாலைகள் அமைந்துள்ளமையால் பாடசாலை மாணவர்கள் பெரும் சிரமத்தின் மத்தியிலேயே இவ்வீதியால் பயணிக்கும் வாகனங்கள் பழுதடையும் நிலையும் காணப்படுகின்றது.

இப் பாரிய பள்ளத்தினால் இவ்வீதியால் பயணிக்கும் வாகனங்கள் பழுதடையும் நிலையும் காணப்படுகின்றது.

எனவே இவ் விடயத்தை கவனத்தில் எடுத்து உடன் நடவடிக்கை எடுத்து வீதியை புனரமைத்து இப் பகுதியில் பயணிக்கும் மக்களின் போக்குவரத்திற்கு உதவ வேண்டும் என பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம)





கிளிநொச்சி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானத்தின் வேட்டைத் திருவிழா மற்றும் சப்பறத்திருவிழா அண்மையில் இடம்பெற்ற போது...

(படங்கள்:- சிவநகர் செய்தியாளர்)

### சமுர்த்தி பயனாளிகளுக்கான கொடுப்பனவு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட கரைச்சி பிரதேச செயலர் பிரிவில் உள்ள சிவநகர் கிராம சமுர்த்திப்பயனாளிகளுக்கான கொடுப்பனவு இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு சிவநகர் பொது நோக்கு மண்டபத்தில் வழங்கப்படவுள்ளது.

எனவே சமுர்த்தி பயனாளிகள் தேசிய அடையாள அட்டை, சமுர்த்தி அட்டை ஆகியவற்றுடன் வருகை தருமாறு சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் அறிவித்துள்ளார்.. (ம-254)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





வடமராட்சி வரலாற்றுச் சிறப்பு மிக்க தொண்டைமானாறு செல்வச் சந்நிதி ஆலய் தேர்த்திருவிழா நேற்றுக் காலை இடம் பெற்றது.

இதில் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் புடைசூழ முருகப்பெருமான் தேரிலிருந்து அருள் பாலிப்பதையும் அடியார்கள் அங்கப் பிரதட்சனை செய்வதையும் கலந்து கொண்ட பக்தர்களையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:-எஸ்.செல்வதீபன்)

# நல்லூர் ஆலய சூழலில்...

நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவத்தை முன்னிட்டு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தும் ஆன்மீக சிந்தனை, சமயச் சொற்பொழிவு,கலை நிகழ்வுகள் என்பன உற்சவகாலத்தில் தினமும் பிற்பகல் 3 மணிமுதல் 6 மணிவரை நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணிமண்டபத்தில் நடைபெற்று வருகின்றது. இன்றைய நிகழ்வாக சைவப்புலவர் நித்தியதசீதரன் வழங்கும் மணவாளன் எனும் விடயப் பொருளிலான சொற்பொழிவு இடம்பெறவுள்ளது. தொடர்ந்து மானிப்பாய் மருதடி விநாயகர் அறநெறிப்பாடசாலை, மாதகல் சித்தி விநாயகர் அறநெறிப்பாடசாலை ஆகியவற்றின் மாணவர்கள் வழங்கும் கலை நிகழ்வுகளும் இடம்பெற்று அத்துடன் விசேட நிகழ்வாக ஞான ஏந்தல் மா.ந.பரமேஸ்வரன் வழங்கும் திருப்புகழ் கச்சேரியும் இடம்பெற வுள்ளது.

• • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • •

நல்லூர் முருகன் மஹோற்சவத்தை முன்னிட்டு தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான அனுசரணையுடன் நல்லூர் இளங்கலைஞர் மன்றம் நடத்தும் தெய்வீக இசையரங்கு உற்சவ காலத்தில் தினமும் மாலை 6.45 மணிமுதல் இரவு 8.15 மணிவரை நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் நடைபெற்று வருகின்றது. இதன்படி இன்று உ.இராதாகிருஷ்ணன், திருமதி சைத்தவி நிஷாகரன் ஆகியோரின் வயலின் கச்சேரி நடைபெறும். இந்நிகழ்விற்கு அணி செய் கலைஞர்களாக மிருதங்கம் க.கண்ணதாசன், கெஞ்சிரா பரம்ஸ்ரீ வி.ரமணா, முகர்சிங் எஸ்.சக்திதரன், தபேலா சதா வேல்மாறன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

• • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • •

நல்லூர் கந்தசுவாமி கோவில் மஹோற்சவத்தை முன்னிட்டு சைவத்தமிழ் பண்பாட்டுக் கழகத்தினால் நடத்தப்படும் தெய்வீகப் பேருரை, கலைநிகழ்வு, மாணவர் சொற்பொழிவு, கலைஞர் கௌரவிப்பு நிகழ்வுகள் என்பன மஹோற்சவ காலங்களில் தினமும் பிற்பகல் 6.30 மணிமுதல் இரவு 8 மணிவரை நல்லூர் வடக்கு வீதியில் அமைந்துள்ள நடராஜா பரமேஸ்வரி மணிமண்டபத்தில் நடைபெறும்.

இதன்படி இன்று கவிமணி அன்னை தாசன் வழங்கும் சைவமும் விஞ்ஞானமும் எனும் விடயப் பொருளிலான சொற்பொழிவு இடம்பெறவுள்ளது.

• • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • •

நல்லூர் கந்தனின் மஹோற்சவத்தை முன்னிட்டு சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியத்தின் பரம்மகான சபா நடத்தும் தெய்வீக இசைச் சங்கம் நிகழ்வு தினமும் மாலை 6.30 மணிக்கு நல்லை ஆதீன புதிய மண்டபத்தில் நடைபெற்று வருகின்றது. இதன்படி இன்று அளவெட்டி இசைமாமணி போஜராஜசர்மா விஜயலக்ஷ்மி வழங்கும் பாட்டு கச்சேரி இடம்பெறவுள்ளது.

• • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • •

நல்லூர் கந்தன் மஹோற்சவத்தை முன்னிட்டு நல்லூர் சைவ மகா சபையின் ஏற்பாட்டில் நல்லை ஆதீன குரு மூர்த்த ஆலய மண்டபத்தில் தெய்வீகத் தொடர் இசைப் பேருரை இன்று புதன்கிழமை மாலை 6.30 இற்கு ஆரம்பமாகவுள்ளது. நல்லைக் குருமணியின் பிரதம வாரிசு கானகதாவாரிதி பிரம்ம ஸ்ரீ சிவ. வை. நித்தியானந்த சர்மா வழங்கும் மகாபாரதம் எனும் விடயப் பொருளிலான இசைப்பேருரை சிறந்த பக்கவாத்திய சகிதம் இடம்பெறவுள்ளது. மேலும் நாளை வியாழக்கிழமை பீஷ்மர் சபதம் , நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பாண்டவர் ஜனனம், எதிர்வரும் 24 ஆம் திகதி சனிக்கிழமை குருகுலவாசம்,25 ஆம் திகதி அரங்கேற்றம், 26 ஆம் திகதி அரக்குமாளிகை ஆகிய தலைப்புக்களில் இசைப் பேருரை இடம்பெறவுள்ளது. (அ)

## நல்லைக்குமரன் மலர்-2013(21) வெளியீட்டு விழா

காலம்:- 21.08.2013 புதன்கிழமை இன்று
இடம்:- நாவலர் கலாசார மண்டபம், யாழ்ப்பாணம்
தலைவர்:- திரு. செ.பிரணவநாதன் (சைவசமய விவகார குழுவின் தலைவரும் மாநகர ஆணையாளரும்)
பிரதம விருந்தினர்:- திருமதி யோ. பற்குணராசா (மாண்புமிகு மாநகர முதல்வர்)
சிறப்பு விருந்தினர்கள்:- திரு. சுந்தரம்அருமைநாயகம் (அரசாங்க அதிபர் ,யாழ்ப்பாணம்)
பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் (துணை வேந்தர் , யாழ். பல்கலைக்கழகம்)
ஆசியுரை :- ஸ்ரீல ஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் (நல்லை ஆதீனம் முதல்வர்)
சுவாமி சித்ரூபானந்தா (ஸ்ரீசாரதா சேவாச்சிரமம், பருத்தித்துறை)
ஜாக்ரத சைதன்ய சுவாமிகள்
கௌரவிப்பு : யாழ். விருது வழங்கலும் பொற்கிழி வழங்கலும்
அருட்தந்தை நீ. மரியசேவியர் அடிகளார்(திருமறைக் கலாமன்றம், யாழ்ப்பாணம்)
மலர் வெளியீடும் வெளியீட்டுரையும்
திரு.ந. விஜயசுந்தரம்
ஆய்வுரை : கலாநிதி திருமதி ஜெயலட்சுமி (சிரேஷ்ட விரிவுரையாளர், கல்வியியற்றுறை, யாழ். பல்கலைக்கழகம்)

*முதற்பிரதி பெறுவோர் தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானம்*
*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

சைவ சமய விவகாரக் குழு, யாழ்ப்பாண மாநகர ஆட்சிமன்றம்.


## இவ்வாண்டின் இரண்டாவது திரைப்பட விழா நாளை

யாழ்.பல்கலைக்கழக ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையத்தின் ஏற்பாட்டில் இவ் ஆண்டின் இரண்டாவது திரைப்பட விழா நாளை வியாழக்கிழமை மு.ப. 9 மணி முதல் மாலை 5 மணிவரை இல.84 ஜும்மா பள்ளி வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையத்தின் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் சத்திய ஜித்றே இயக்கத்தில் உருவான சாத்ராங் கி கிலாரி றொபேட் ஜே.ப்ளாஹெறர்ட்டியின் இயக்கத்தில் உருவான ஆவணப்படமான நானூக் ஒப்த் த நோத் மற்றும் இலங்கையில் தயாரித்து வெளியிடப்பட்ட தமிழ்த் திரைப் படமான பொன்மணி ஆகிய தரைப்படங் கள் திரையிடப்படவுள்ளன.

இவ்விழாவில் திரைப்பட ஆர்வலர்கள் கலந்து கொண்டு திரைப்படங்களைப் பார் வையிட முடியும் என யாழ். பல்கலைக்கழக ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (அ)

# நல்லூரான் திருவடிக்கு மஞ்சத் திருவிழா




## வலி நீக்கி வரம் அருள்வாய்

வலி நீக்கி வரம் அருள்வாய் வடிவேலா
எம் மண்ணெல்லாம் விடிவாக
வரம் தந்திடுவாய் நல்லூர் கந்தா
திக்கன்று திக்கும் எம்மவர்க்கு துணையாய்
வந்திடுவாய் ஆறுபடை வீடுடையாய்
இழப்பதற்கு இனியொன்றுமில்லை வலிசுமந்த
நாமெல்லாம் உன்பாதம் சரணடைகின்றோம்
அருள் தந்திடு ஐயா.

ஆனையூர்
உதய. சாளீன்

## மஞ்சத்தில் ஏறி வரும் முருகா...

மஞ்சத்தில் ஏறிவரும் முருகையா- என்
மனமென்னும் மஞ்சத்தில் அமரையா
அன்பெனும் தேன் கலந்த அபிஷேகம்
நாளும் ஆனந்த பஜனை அலங்காரம்
முத்தமிழால் மாலை தினம் சூட்டுவேன்
ஓம் முருகா எனும் நாமம் தினம் ஓதுவேன்
இதயத்தின் ஓசை தான் பூசை மணி
இன்பமும் துன்பமும் ஆராதனை

வேலணையூர்
பா.சசிகுமார்.

## அருளிடையா! அடியவரைக் காத்து

மஞ்சத்திலேறி வரும் முருகா!
மயிலேறி விளையாடும் குமரா!
நெஞ்சினிலே நீயிருக்க பயமுமில்லை-உனை
நினைப்போர்க்கு எந்தவொரு குறையுமில்லை
வஞ்சகமும் சூழ்ச்சிகளும் விலகி
வாழ்வளித்து தமிழரினம் மகிழ
அஞ்சேலென அபயமளிக்கின்ற வேலா!
அருளிடையா அடியவரைக்காத்து

முத்துக்குமார்
மானிப்பாய்

## மஞ்சம் ஏறி வாராயோ!

தஞ்சம் என்றே வந்த தேவர் தம் துயர்தீர்க்க
வெஞ்சமரில் வேலேந்தி வென்ற வெற்றிவேலா
நெஞ்சம் நிறை நீள் துயருடைய மக்களைக்காக்க
மஞ்சம் தனில் மயிலமர்ந்து வலம் வாராயோ நல்லையிலே
பஞ்சம் பிணி போக்கிப் பாமரரை வாழவைக்க
அஞ்சேல் என்றே அபயம் அளித்து அருள்தர நல்லையிலே
குஞ்சரி மணாளனே கொஞ்சும் வள்ளி வேலவனே
மஞ்சம் ஏறி வந்தே மக்களைக் காக்க வாராயோ


விசாகஜன்
தென்கோவை

## நல்லூர் கந்தன் அநுபூதி

என்றும் காக்கு மெழில்வேல் முருகா
நன்றுன் கருணை நயமா யறிவோம்
நின்றெம் துயர்நீக் கிடவே யெழுந்து
இன்றே வந்“தாள்” எம்நல் லூரா!

கலாபூஷணம், சந்தக் கவிஞர். நவ.பாலகோபால்

அமெரிக்கன் வோட்டர்
E.S.P நாகரத்தினம் அன் கோ
52,54, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.இல. 021 222 3096




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன் நோக்கத்தை வாளால் அறுத்துக் கொல்வதைவிட நகைமுகத்தால் சாதித்துக் கொள்வதே சாலச்சிறந்தது ஆகும்
– ஷேக்ஸ்பியர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## தோற்றாலும் பரவாயில்லை நேர்மையாக நடவுங்கள்

வடக்கு மாகாண சபைக்கான தேர்தல் சூடு பிடிக்கத் தொடங்கி உள்ளது. வேட்பாளர்கள் களத்தில் இறங்கி பிரசாரப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர். வாக்காளர்களோ, இந்த நாட்டின் மரியாதைக்குரிய அடையாளச் சின்னம் மௌனம் என்பதை உணர்ந்து கொண்டு அதனைச் செம்மையாகக் கடைப்பிடிக்கின்றனர்.

வாக்காளர்களில் ஒரு பகுதியினர் எவருக்கும் வாக்களிப்பதில்லை என்ற முடிவில் உள்ளனர். மறுபகுதியினர் வாக்களிப்பது என்பது என்ற முடிவை எடுத்துள்ளனராயினும் மௌனமாக இருப்பதை அவர்களும் கிஞ்சித்தும் விலக்கிக் கொள்ளவில்லை.

நிலைமை இதுவாக இருக்கையில், தேர்தல் அறிவிக்கப்பட்டு தேர்தல் நடைபெறுவதற்கு இடைப்பட்ட இக் காலப்பகுதி பிரசாரத்துக்கான காலம் என வேட்பாளர்கள் நினைத்துக் கொள்வது வழக்கம்.

ஆனால், வாக்காளர்கள் இக்காலப்பகுதியை வேட்பாளர்களின் நன்னடத்தைக்கான காலப் பகுதியாகக் கருதுகின்றனர்.

தேர்தல் பிரசார காலங்களில் வேட்பாளர்கள் தங்களின் ஆற்றல், ஆளுமை, பொறுமை, ஜனநாயகப் பண்பு என்பவற்றையெல்லாம் வெளிப்படுத்தவேண்டும்.

எடுத்ததற்கெல்லாம் உணர்ச்சிவசப்படுவது, அடிதடியில் இறங்குவது அவ்வளவு நல்லதல்ல. இத்தகைய நடவடிக்கைகளை ஜனநாயகத்தை மதிக்கும் எவரும் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். எனினும் துரதிர்ஷ்டவசமாக வடபகுதியில் நடைபெறும் ஒவ்வொரு தேர்தல்களின் போதும் அடித்தலும் அடிவாங்குதலும் என்ற நடைமுறை தொடர்கிறது.

பல சந்தர்ப்பங்களில் அடிப்பதும் அடிவாங்குவதுமாகிய இரண்டு செயற்பாடுகளுமே தேர்தல் பிரசாரமாக மாறியிருப்பது வேதனைக்குரிய விடயம்.

இத்தகைய வன்முறைக் கலாசாரத்தினால் தேர்தல் வாக்குறுதிகள் என்பதற்கு எந்த விதமான இடமும் இல்லாமல் போக அடிவாங்குபவர்கள் காயக்கட்டை பிரசாரப் பீரங்கியாகத் தூக்கிப் பிடிக்க, அடித்தவர்கள் தாம் அடிக்கவில்லை என்பதை மறுக்கவோ அல்லது அடித்ததிற்கான காரணங்களை விளக்குவதிலோ நேரத்தைச் செலவிடுவர்.

இத்தகைய போக்குகளால் வாக்காளர்கள் மனவெறுப்படைகின்றனர்.

எனவே சண்டையென்றால் சட்டை கிழியத்தான் செய்யும் என்ற நடிகர் வடிவேலுவின் தத்துவம் போல தேர்தல் என்றால் வெற்றி, தோல்வி இருக்கவே செய்யும். இதற்காக தமது நேர்மைத் தனத்தை எந்த வேட்பாளரும் இழக்கக்கூடாது.

தேர்தலில் தோற்றாலும் அந்த வேட்பாளர் கண்ணியமாக நடந்து கொண்டார் என்ற பொது மக்களின் வாழ்த்து தேர்தல் வெற்றியைவிட பன்மடங்கு உயர்வானதும் உத்தமமானதும் ஆகும்.

# அமைச்சர் பீரிஸ் மீது தமிழக மீனவர்கள் காட்டம்

வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் இருநாட்டு மீனவர்களுக்குமிடையே விரோத மனப்பாங்கை வளர்ப்பதாக தமிழக மீனவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

இலங்கையில் இடம்பெறவுள்ள பொது நலவாய மாநாட்டுக்கு இந்தியப் பிரதமரை நேரில் அழைக்க புதுடில்லி சென்றிருந்த அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்த கருத்துகளுக்கே தமிழக மீனவர்கள் இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கை சந்தித்த பிறகு டில்லியிலுள்ள இலங்கைத் தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், இலங்கைக் கடற்பரப்பிற்குள் நுழையும் இந்திய மீனவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டிய நிலைக்கு இலங்கை அரசு தள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய - இலங்கை மீனவர்களிடையே உறவுகளை மேம்படுத்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வரும் வேளையில் அமைச்சரின் கருத்துக்கள் ஒரு நல்லுறவோடு பேசுவது போல தங்களுக்குத் தெரியவில்லை என்று தமிழ் நாடு விசைப் படகு மீனவர்கள் நலச்சங்கத்தின் பொதுச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் பசில் ராஜபக்ஷ இரு நாட்டு மீனவர்களுக்குமிடையே ஒரு நல்லுறவை ஏற்படுத்த எடுத்த நடவடிக்கைகளுக்கு மாறாக பேராசிரியர் பீரிஸின் கருத்துக்களை உள்ளடக்கிய அறிக்கை தமக்கிடையே மேற்கொண்டு ஒரு பெரிய விரோதத்தை உருவாக்கும் வகையில் அமைந்துள்ளது என்றும் மீனவர்கள் நலச்சங்கத்தின் பொதுச் செயலாளர் குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்து இந்திய மீனவர்களை உடனடியாக விடுதலை செய்யுமாறு 13ஆம் திருத்தச்சட்டத்தை மாற்றாமல் அதனை உடனடியாக அமுலாக்குமாறு பிரதமர் மன்மோகன் சிங் வேண்டுகோள் விடுத்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இதன் போது வடமாகாண சபைத் தேர்தல், 13ஆம் திருத்தச்சட்டம் மீனவர்களின் பிரச்சினைகள் தொடர்பிலும் பேசப்பட்டுள்ளன. வடக்கில் சுதந்திரமான முறையில் தேர்தல் நடத்தப்படும் என்று ஜி.எல். பீரிஸ் பிரதமரிடம் உறுதியளித்துள்ளார். (எ-1)

# கிணற்றுக்குள் தவறி விழுந்த வைத்தியசாலை ஊழியர் பலி

(யாழ்ப்பாணம்)

கிணற்றுக்குள் தவறி விழுந்த வட்டக்கச்சி வைத்தியசாலை ஊழியர் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார். இச்சம்பவம் நேற்றுக் காலை இடம் பெற்றுள்ளது.

வட்டக்கச்சி வைத்தியசாலையில் உள்ள கிணற்றுக்குள் தவறிவிழுந்து உயிரிழந்த நிலையில் அங்குள்ள ஊழியர்களால் அவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவத்தில் வட்டக்கச்சியைச் சேர்ந்த இம்மானுவேல் நிமால் (வயது 33) என்ற சிற்றூழியரே இவ்வாறு பரிதாபகரமாக உயிரிழந்தவர் ஆவார்.

இவரது சடலம் பிரேத பரிசோதனை மற்றும் மரண விசாரணைக்காக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பாக கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம -259)

# நல்லூர் ஆலயச் சூழலில் திருட்டுச் சம்பவங்கள் இல்லை

## பொலிஸார் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தன் ஆலயத்தில் இதுவரை எவ்வித குற்றச்சாட்டும் பதிவு செய்யப்படவில்லையென யாழ். பொலிஸ் நிலைய சிறுகுற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி டபிள்யூ. எல். விக்கிரமராய்ச்சி தெரிவித்தார்.

குற்றச் செயல்களோ திருட்டுச் சம்பவங்களோ இதுவரை பதிவு செய்யப்படாத போதிலும் ஆலயச் சூழலில் சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடிய நால்வர் கைது செய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர் எனவும் அவர் கூறினார்.

கடந்த வருடத்தின் நல்லூர் ஆலய திருவிழா கொடியேற்றத்தின் போது மட்டும் ஐந்து திருட்டுச் சம்பவங்கள் பதிவாகியிருந்தன. ஆனால் இம்முறை இதுவரை (நேற்றுவரை) எவ்வித திருட்டுச் சம்பவங்களும் நடைபெறவில்லை.

இதற்கு பாதுகாப்பு பணிகளில் அதிகளவிலான பொலிஸார் ஈடு படுத்தப்பட்டுள்ளமையே காரணம் ஆகும்.

நல்லூர் ஆலயச் சூழலிலும் ஆலயத்தினைச் சுற்றியுள்ள வெளிப்புறச் சூழலிலும் பொலிஸார் பாதுகாப்பு பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இதனைவிட திருட்டு சம்பவங்களினை கட்டுப்படுத்துவதற்கு முன்னேற்பாடான நடவடிக்கைகளின்ன நாம் எடுத்து வருகின்றோம் என்றார் பொறுப்பதிகாரி. (எ-4)

## சிறுவர்களுக்கான மாபெரும் போட்டி

### இந்துவாக வாழ்வோம்

நல்லைக் கந்தப்பெருமான் உற்சவத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் சின்மயா மிஷன் வழங்கும் கேள்வி பதில்கள்

20.08.2013க்கான **வினாவும் விடையும்:-**

**வினா:-** அதிகாலையில் சூரிய நமஸ்காரம் செய்வது ஏன் சிறந்தது?

**விடை:**
- ➢ அன்றையதினம் முழுவதும் உடல், மனம், புத்தி அனைத்தும் சிறப்பாகத் தொழிற்படும்.
- ➢ உலகின் சக்தி முதலாக இருக்கிறது.
- ➢ புத்தி பிரகாசமடையும். ஞாபகசக்தி அதிகரிக்கும் (சூரியனில் இருந்து வரும் அல்பா கதிர்களால்)

21.08.2013: **வினா:- ஒவ்வொரு இந்துவும் உணவு உண்ண முன் என்ன செய்யவேண்டும்?**

விடை நாளை...

மேலே தரப்பட்டுள்ள கேள்வி விடைகளை ஒரு அப்பியாசப் புத்தகத்தில் ஒட்டி அல்லது எழுதி எதிர்வரும் செப்டெம்பர் மாதம் முதலாம் திகதி (01.09.2013) நண்பகல் 12 மணிமுதல் பிற்பகல் 4 மணிக்கு இடைப்பட்ட நேரத்தில் நல்லூர் மகேஸ்வரன் மணி மண்டபத்தில் கையளிக்கும் போது துணுக்குகளில் வரும் கேள்விகளுக்கு சரியான பதிலைச் சொல்லும் அனைவருக்கும் பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படும். 18 வயதிற்குட்பட்டவர்கள் மட்டும் பங்குபற்றலாம்.

**சின்மயா மிஷன்**
**யாழ்ப்பாணம்**

இல.9, செட்டித்தெரு ஒழுங்கை,
நல்லூர்.

## இடமாற்றம் பெற விரும்பும் அலுவலர்கள் விண்ணப்பிக்குக

வடக்கு மாகாண சபையில் கடமையாற்றும் கிழக்கு மாகாணத்தில் வசிக்கும் அலுவலர்களை கிழக்கு மாகாண சபைக்கு இடமாற்றம் செய்வது தொடர்பாக வடக்கு கிழக்கு மாகாணங்களின் ஆளுநர்கள் வடக்கு கிழக்கு மாகாண அரசாங்க உத்தியோகத்தர் சங்கத்துடன் கலந்துரையாடியுள்ளதாக சங்கத்தின் உப தலைவர் கணேசன் கம்ஸநாதன் தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாண சபைக்கு இடமாற்றம் பெற விரும்புகின்ற அலுவலர்கள் விண்ணப்பப் படிவங்களைப் பூர்த்தி செய்து எதிர்வரும் 27 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு கணேசன் கம்ஸநாதன், இல.18A, மூத்தவிநாயகர் கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

உரிய திகதியின் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் எனவும் இவ்விடயம் தொடர்பான மேலதிக விபரங்களுக்கு 071 847 4341,077 364 8193 எனும் இலக்க [illegible]

## பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்

### நம்பிக்கை உள்ளவனுக்கு எல்லாம் உண்டு



❖ பலவருடங்களாக பூட்டிக்கிடக்கும் அறை இருண்டு கிடக்கும். ஆனால் அந்த அறைக்குள் விளக்கினைக் கொண்டு வந்த உடனேயே இருள் மறைந்து ஒளிபரவும். அதுபோல இறைவனின் கருணைப்பார்வை பட்டவுடனேயே பல பிறவிகளில் செய்த பாவங்களும் உடனேயே நீங்கிவிடும்.

❖ இறைவனின் அருள் என்னும் காற்று இடையறாது வீசிக்கொண்டுதான் இருக்கிறது. வாழ்க்கை என்னும் கடலில் முன்னேற விரும்பினால் உனது மனமாகிய படகின் பாயை விரித்தால் கடலைக் கடந்து கரை சேரலாம்.

❖ இறைவனின் திருப்புகழைப்பாடும் போது கைகளை அசைத்துக் கொண்டும் இசைத்துக்கொண்டும் பாடுவாயாக. அப்போது பாவம் என்னும் பறவைகள் பறந்தோடிப்போகும்.

❖ சேற்றில் புரள்வதுதான் குழந்தையின் இயல்பு. ஆனால் தாய் குழந்தையை அப்படியே விடாமல் குளிக்கச் செய்து சோறூட்டுவாள். அதுபோல பாவம் செய்வது மனித இயல்பு என்று கடவுள் விட்டுவிடுவதில்லை. கடைத்தேற்றும் வழிமுறைகளை அருள்செய்கிறார்.

❖ நம்பிக்கை உள்ளவனுக்கு எல்லாமே உண்டு. நம்பிக்கை இல்லாதவனுக்கோ ஒன்றுமேயில்லை. நம்பிக்கைதான் வாழ்வு. வேண்டாத சந்தேகமோ, மனிதனை அழிவுப்பாதையில் கொண்டு சென்றுவிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைகாசி மாதம் பிறந்தவர்களின்

வைகாசி மாதத்தில் சூரியன் ரிஷப ஸ்தானத்தில் பிரவேசம் செய்திருந்த நேரத்தில் நீங்கள் பிறந்திருப்பதால் உங்களுக்கு இயல்பாக அமைந்திருக்கும் அறிவாற்றலைக் கொண்டுதான் நீங்களாகவே எதைப் பற்றியும் தெரிந்து கொள்வீர்கள். நான், எனது, என்னுடையது, எனது அனுபவம் என்ற சொற்களே உங்கள் பேச்சில் அடிக்கடி தோன்றும். நீங்கள் உலகத்தாருடன் பழகும் போதெல்லாம் இதைப் பாருங்கள். இது என்னுடையது. இதை நானே கஷ்டப்பட்டு உழைத்துத் தேடிக் கொண்டேன் என்று சொல்வது உங்கள் வழக்கமாக இருக்கும். நடைமுறையில் உங்களுக்குள்ள செயலாற்றும் திறமையால் உங்களுக்கு அத்தியாவசியமானவற்றை நீங்கள் சேர்த்துக் கொள்ளத் தவறமாட்டீர்கள்

நீங்கள் எந்த விடயத்திலும் எப்போதும் அவசரப்படமாட்டீர்கள், ஆத்திரப்படவும்மாட்டீர்கள். எந்த விடயத்தையும் நிதானமாகத்தான் கிரகித்துக் கொள்வீர்கள். அதுபோலவே எந்த விடயத்தையும் உடனுக்குடன்மறந்துவிடவும் மாட்டீர்கள். நிதானமாகத்தான் மறப்பீர்கள். ஒரு செயலில் ஈடுபடுவதென்றாலும்கூட ஆய்ந்து தேர்ந்து, ஆலோசித்து, சாவதானமாகத்தான் ஈடுபடுவீர்கள். உங்களுக்கு மன ஆற்றல் மனோ உறுதியோடு நெஞ்சழுத்தமும் இருக்கும். கஷ்டத்தையே பொருட்படுத்தமாட்டீர்கள். சுகத்தையும் பெரிதுபடுத்திக்கொள்ள மாட்டீர்கள். கஷ்டம், சுகம் இரண்டையும் சமமாகவே கருதும் மனோப்பாவம் உங்களுக்கு ஏற்படும்.

பசியேழுந்தாலும்செய்கிறவேலையை முடித்துவிட்டுத்தான் சாப்பிட விரும்புவீர்கள். பொறுமையும் நிதானமும் உங்களுக்கு இயல்புக் குணங்களாகையால் உங்களில் சிலர் வேலையைச் சீக்கிரம் செய்து முடிக்கமாட்டீர்கள். ஆனால், செய்யும்வேலையை சிறப்பாகவும் திறமையாகவும் செய்து முடிக்க வேண்டும் என்ற ஆர்வம் அதிகரிக்கும். விடாமுயற்சியும் சகிப்புத் தன்மையும் கொண்ட நீங்கள் ஒழுக்கத்திலும் நாணயத்திலும் உயர்ந்தவர்களாகவும் திகழ்வீர்கள். நீங்கள் உழைப்பை பெரிதும் மதிப்பவர்களாகையால் உங்களில் பெரும்பாலோர் பிறருக்கு பணி செய்பவர்களாக இருப்பார்கள். நீங்கள் பெரிய முதலாளியாக இருந்தாலும் தொழில் பிரமுகராக இருந்தாலும்கூட உண்மையான ஒரு தொழிலாளியைப் போலவே வேலை செய்வீர்கள். ஆனால், சுயேச்சையாகச் செயல் புரிவதற்குரிய திறமைக்கு ஏதாவது தூண்டுகோல் தேவைப்பட்டுக் கொண்டேயிருக்கும். மின்னல் வேகத்தில் கருத்துக்கள், எண்ணங்கள் உங்களுக்குத் தோன்றுவதில்லை. அப்பொழுதே நினைக்காமற் போனோமே என்றுதான் அடிக்கடி சொல்லிக் கொள்வீர்கள்.




திடகாத்திரமான உடலும் மனந் தளராத ஆரோக்கியமும் உங்களுக்குச் சிறப்பு அம்சங்களாகும். நீங்கள் கடினமான வேலைகளைச் செய்யும் போதும் சலிப்பின்றி உழைப்பீர்கள். எந்த வேலையிலும் மனஞ் செலுத்தி ஊன்றிக் கவனித்துச் செய்வீர்கள். ஆகையால் நீங்கள் வேலை செய்யும் போது உங்கள் கவனத்தை மாற்றுவது எளிதல்ல. நீங்கள் நெடுந்தூரமானாலும் நடந்து செல்லத் தயங்கமாட்டீர்கள். நடக்கும் போது நெடுந்தூரம் நடந்தாலும் சோர்வடையமாட்டீர்கள். நீங்கள் இருந்து தூண்டிக் கொண்டிருந்தால் நீங்கள் செய்யும் தொழிலில் மிகவும் மேன்மை அடைவீர்கள். நீங்கள் செய்கையில் வீரர்களாக இருப்பீர்களே தவிர இலட்சியத்தில் தீவிரமாக இருப்பது அரிது. ஆனால், உடலின் வலிமையும் உழைப்பையும் சிந்தனைக் கருத்துக்களையும் வீணான வழிகளில் செலுத்தமாட்டீர்கள். நீங்கள் செய்யும் தொழிலை விட்டு வேறு தொழிலுக்கு உங்களைத் திருப்புவதும் கடினம்தான். செய்யும் தொழிலிலேயே ஊக்கத்துடன் உழன்று கொண்டிருப்பீர்கள். நீங்கள் வீணான வம்புகளில் தலையிடமாட்டீர்கள். வீம்பு பேசவும் மாட்டீர்கள். வீம்பு பேச ஆரம்பித்தாலோ அதிலேயே விடாப்பிடியாகவும் இருப்பீர்கள். சண்டை என்றால் வாய்ச்சண்டை ஆனாலும் கைச்சண்டையானாலும் அந்தப் போராட்டத்தில் எதிரியை தோற்கடிப்பதோடு எதிரி தனது பலம் முழுவதையும் இழக்கும் வரையிலும் விடமாட்டீர்கள்.

உங்களில் சிலருக்கு திடீரென்று செல்வத்தில் செழித்துக் கொழிக்கும் அளவுக்கு சூழ்நிலை ஒத்துவராமல் போகக்கூடும். ஏணிப்படி மேல் ஏறுவதுபோலவே வாழ்க்கையில் படிப்படியாக முன்னேற்றம் அடைவீர்கள். (தொடரும்)

## குணாதிசயங்கள்

உங்களுடைய ஆலோசனையைவிட உங்கள் உழைப்பினால் நல்ல பயனை அடையமுடியும். நீங்கள் மேற்கொள்ளும் பணியை எப்படிச் செய்ய வேண்டும். எப்போது செய்ய வேண்டும். எப்படிச் செய்தால் விளைவுகள் எப்படியெப்படியிருக்கும் என்பதை போன்ற சிந்தனைகளும் எண்ணங்களும் மாறி மாறி தோன்றிக் கொண்டேயிருக்கும். ஆகையால் எடுத்த வேலையை விரைவாக முடித்து விடவேண்டும் என்ற மனப் போக்கோ வேகமோ இராது.

உங்களிடம் அவசரமான வேலைகளை ஒப்படைத்தால் குறித்த நேரத்தில் அந்த வேலை முடியாது. எவ்வளவு கஷ்டமான வேலையாக இருந் தாலும் அதன் கஷ்டத்தைப் பொருட்படுத்தாத நீங்கள் அதைச் செய்வதில்தான் காலதாமத தப்படுத்துவீர்கள். நீண்டகாலத் தவணையுடைய வேலைகளைச் சிறப்பாகச் செய்து முடிப்பீர்கள். உங்களுக்கு யாராவது ஒருவர் தூண்டுகோலாக

# ஜோதிலிங்க இரதபவனி

வடமராட்சி– காசி விஸ்வநாதர்– கத்திரிப்பாய் சந்தி வழியே முற்பகல்8.00–10.00

அச்சுவேலி சித்தி விநாயகர் கோயில்– பிற்பகல் 12.00– பிற்பகல்4.30

ஆவரங்கால் சிவன் கோயில்– பிற்பகல் 5.30– இரவு

ஆவரங்கால் ஆலடி முருகன் கோயில்

இளைஞர் நிகழ்வு மாலை 6.00– 7.30

வலிகாமம் –ஸ்ரீ சோமநாதர்– கட்டுவன்புலம் ம.வி. வழியே முற்பகல் 10.00–பிற்பகல் 1.00

ஏழாலை கண்ணகையம்மன் கோயில்– பிற்பகல் 2.00– 5.00

ஏழு கோயிலடிச் சிவன் கோயில், ஏழாலைச் சந்தி வழியே இரவு குப்பிளான் சிவபூமி ஞான ஆச்சிரமம்

தென்மராட்சி– இராமேஸ்வரம்– முற்பகல் 8.30–11.00

தட்டாங்குளம் பிள்ளையார் கோயில்– பிற்பகல் 12.30–5.00

மீசாலை காட்டுவளவு கந்தசுவாமி கோயில்–பிற்பகல் 6.30–இரவு கச்சாய் அம்மன் கோயில்

### 90 இலட்சம் ரூபா செலவில்
# இரத்தினசிங்கம் ஞாபகார்த்த தியான மண்டபம் அமைப்பு

பருத்தித்துறை விநாயகர் முதலியார் வீதியில் அமரர் இரத்தினசிங்கம் ஞாபகார்த்தமாக சுமார் 90 இலட்சம் ரூபா செலவில் தியான மண்டபமும் ஆய்வுநூலகமும்நன் கொடையாக அமைக்கப்பட்டுள்ளது.

மேற்படி கட்டடங்களின் திறப்பு விழா எதிர்வரும் செப்டெம்பர் மாதம் முதலாம் திகதி நடைபெறவுள்ளது. தியானமண்டபத்தில் யோகக் கலைமற்றும் தியாணம் ஆகிய பயிற்சிகள் ஆரம்பிக்கப்படவுள்ளதுடன் திரைப்பட வட்டம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டு சர்வதேச கலைத்துவமிக்க படங்களைக் காண்பிக் கவுள்ளதாக தீர்மா னிக்கப்பட்டுள்ளது. ஆய்வுநூலகத் தில் சுமார் 5 ஆயிரத் திற்கும் மேற்பட்ட புத்தகங்கள் வைக்கப்படவுள்ளன. மேற்படி மண்டபத்தில் கலை இலக்கிய கூட்டங் கள், கருத்தரங்குகள் நடத்தக்கூடிய வசதிகளும் ஏற்படுத்தப் பட்டுள்ளமைகுறிப்பிடத்தக்கது. (அ–9–19)


## ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவில் துன்னாலை வடக்கு, புலோலி

**மஹோற்சவ தற்காலிக கடை அமைத்தல்**

இவ்வாலய மஹோற்சவத்தை முன்னிட்டு கீழ்வரும் கடைகளுக்கான இட ஒதுக்கீடு எதிர்வரும் 28.08.2013 புதன்கிழமை காலை 10.00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் வழங்கப்படவுள்ளன. கடைகளை ஏலத்தில் எடுப்பவர்கள் காலை 9.30 மணிக்கு சமுகமளித்து வாடகைப் பணத்தினை அன்றைய தினமே முழுமையாக செலுத்தி ஒத்துழைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

- ✶ ஐஸ்கிறீம் கடை
- ✶ இனிப்புக்கடை
- ✶ கச்சான் கடை
- ✶ புடைவைக்கடை

அறங்காவலர் சபை

(சி/4392) தொ.பே.இ. 0213210983



## மக்கள் வங்கி அறிவித்தல்

மக்கள் வங்கியின் பின்வரும் கிளைகளிலும் சேவை நிலையங்களிலும் 31.07.2012 வரையும் அடகு லவத்து இதுவரை மீட்கப்படாத நகைகள் 07.09.2013 இலிருந்தும் 30.09.2012 வரையும் அடகுவைத்து மீட்கப்படாத நகைகள் எதிர்வரும் 08.10.2013 இலிருந்தும் காலை 8.30 மணிக்கு மக்கள் வங்கி யாழ்.பிராந்திய தலைமைய கத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| கிளைகள் | சேவை நிலையம் |
|---|---|
| யாழ். ஸ்ரான்லி வீதி | நாவலர் வீதி<br>மானிப்பாய் |
| காங்கேசன்துறை | மல்லாகம் |
| யாழ்.பிரதான வீதி | உரும்பிராய் |
| ஊர்காவற்றுறை | — |
| நெல்லியடி | — |
| அச்சுவேலி | புத்தூர் |
| சங்கானை | பண்டத்தரிப்பு |
| சுன்னாகம் | கோப்பாய்<br>அளவெட்டி |
| சாவகச்சேரி | கொடிகாமம் |
| வல்வெட்டித்துறை | உடுப்பிட்டி |
| யாழ். பல்கலைக்கழகம் | திருநெல்வேலி<br>கல்வியங்காடு |
| யாழ்.கன்னாதிட்டி | இணுவில் |
| பருத்தித்துறை | புலோலி |

அறிவித்தலின்றி திகதியை ஒத்திப் போடுவதற்கும் ஏலம் விடப்படும் இடத்தினை மாற்றுவதற்கும் உரிமை வங்கிக்கு உள்ளது.

**பிராந்திய முகாமையாளர்,**
**மக்கள் வங்கி,**
**பிராந்திய தலைமையகம்,**
**கன்னாதிட்டி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(சி-4389)



## Invitation For Bid University of Jaffna Construction and commissioning of 6 nos Tube Wells

•The Vice Chancellor of the University of Jaffna on behalf of the University Procurement Committee will receive sealed bids for **Construction and Commissioniny of 6 nos Tube Wells for the Faculty of Engineering and the Faculty of Agriculture, University of Jaffna at Ariviyalnagar, Kilinochchi.** This work consists of drilling of 200 mm diameter tube wells, construction of pump houses and supplying and installing electrically operated deep well pumps.

•Interested bidders who have **valid Business Registration and experience** in this field may submit their bids. Bid document can be purchased from the Capital Works & Planning branch of the University of Jaffna upon the payment of non-refundable fee of Rs. 500.00 **until 03.09.2013**. Further information can be obtained from Deputy Registrar, Capital Works & Planning, University of Jaffna, Thirunelvely, Jaffna (021-2219201).


•Deadline for submission of bids shall be at **2.00 p.m on 04.09.2013**. The bids will be opened immediately thereafter.

**Chairperson, Procurement Committee,**
**University of Jaffna.**
19.08.2013

(சி/4383)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதிக்கத் துடிக்கும் அஷ்வின்



சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் அசத்த வேண்டுமென தீவிர பயிற்சியில் ஈடுபட்டு வருகிறார் சுழற்பந்து வீச்சாளர் அஷ்வின்.

இந்திய அணியின் சுழற்பந்து வீச்சாளர் அஷ்வின், இதுவரையிலும் 16 டெஸ்ட்டில் 92 விக்கெட், 58 ஒருநாள் போட்டிகளில் 80 விக்கெட் எடுத்துள்ளார்.

இந்நிலையில் இவர் கடைசியாக பங்கேற்ற மேற்கிந்திய தீவுகளுடனான முத்தரப்பு தொடரில 5 போட்டிகளில் 6 விக்கெட் தான் கைப்பற்றினார்.

இதுகுறித்து அஷ்வின் கூறுகையில், தற்போது இந்திய போட்டிகளில்பங்கு பெறாததால்ஓய்வு கிடைத்துள்ளது.

இதனை பயன்படுத்தி எனது பந்துவீச்சு திறமையை வளர்க்க முயற்சித்து வருகிறேன்.

தற்போது பந்தை பிட்சி செய்யும் நீளத்தை குறைத்து வேகமாக செல்லும் வகையில் பயிற்சி எடுத்து எடுகிறேன்.

அத்துடன் வலது கை துடுப்பாட்ட வீரர்களுக்கு கேரம் முறையில் பந்துவீச முயற்சி செய்து வருவதாக தெரிவித்துள்ளார்.

# கோலி சிறந்த தலைவர் தோனி பாராட்டு

இந்திய அணி வீரரான வீராட் கோலியை பாராட்டியுள்ளார் அணித் தலைவர் தோனி.

இந்திய கிரிக்கெட் அணியின் துணை அணித்தலைவரான வீராட் கோலி, ஜிம்பாப்வே சுற்றுப்பயணத்தின் போது அணித்தலைவராக செயல்பட்டார்.


இதில் 5 போட்டிகளிலும் வென்று இந்தியா சாதனை படைத்தது.

இந்நிலையில் வீராட் கோலி குறித்து தோனி கூறுகையில், அணித்தலைவராக மிக சிறப்புடன் செயல்படுகிறார்.

கடந்தாண்டை விட இந்த ஆண்டில் கோலியிடம் மிகப்பெரிய மாற்றம் ஏற்பட்டுள்ளது.

வெற்றிக்காக களத்தில் துணிச்சலுடன் ஆடுவது தான், அணித்தலைவருக்கு உதவியாக இருக்கும்.

அவரது அணுகுமுறை களத்தடுப்பிலும் நல்ல மாற்றத்தை தந்தது. ஜிம்பாப்வே தொடரில் அவரது



செயல்பாடு மிகவும் சிறப்பாக இருந்தது. எதிர்காலத்தில் சிறந்த அணித் தலைவராக வருவார்.

அனைத்து இளைஞர்களை கொண்ட அணியை நான் உருவாக்கியதாக கூறப்படுவதை ஏற்க முடியாது.

அணிக்கு தெரிவு செய்யப்படுவதற்கு உடல்தகுதிமற்றும்திறமையே காரணம்.

40 அல்லது 42 வயது வீரராக இருந்தாலும் உடல் தகுதியே முக்கியம். உடல் தகுதியுடன் இருந்தால் தான் சிறப்பாக களத்தடுப்பு செய்ய முடியும்.

அனைத்து காலக்கட்டத்திலும் விளையாடிய சிறந்த வீரர்களை வைத்து கனவு அணியை தெரிவு செய்வது கடினம்.

எனது கிரிக்கெட் வாழ்வில் எப்போதும் சிறந்த இந்திய கனவு அணியை தெரிவு செய்யப்போவதில்லை.

ஏனெனில் இந்திய அணிக்காக விளையாடிய அனைத்து வீரர்களுக்கும்மதிப்பு கொடுக்க வேண்டும்என்று தெரிவித்துள்ளார்.

# ரைடருக்கு போட்டித் தடை

உள்ளூர் போட்டியின் போது ஊக்கமருந்து உட்கொண்ட நியூ சிலாந்து கிரிக்கெட் வீரர் ஜெசி ரைடருக்கு 6 மாதம் தடைவிதிக்கப்பட்டது.

நியூசிலாந்து அணியின் சர்ச்சைக்குரிய கிரிக்கெட் வீரர் ஜெசி ரைடர். 29 வயதான இவர் நியூசி லாந்து அணிக்காக 18 டெஸ்டில் பங்கேற்று 1269 ஓட்டங்கள் எடுத்துள்ளார்.

தவிர, 39 ஒருநாள் போட்டியில் 1100 ஓட்டங்கள் எடுத்துள்ளார். கடந்த பிப்ரவரி 2012க்கு பின் சர்வதேச போட்டிகளில் ரைடர் பங்கேற்பதில்லை.

ஆனால் உள்ளூர் போட்டி களில் மட்டும் பங்கேற்கும் இவர், கடந்த மார்ச் மாதம் நடந்த உள்ளூர் போட்டியன் போது தடை செய்யப்பட்ட ஊக்க



மருந்து உட்கொண்டது தற்போது தெரியவந்துள்ளது.

இதையடுத்து நியூசிலாந்தின் ஒழுங்கு நடவடிக்கை குழு இவருக்கு 6 மாதம் எந்த போட்டியிலும் பங்கேற்ற தடைவிதித்தது.

# யாழ்.காங்கேசன்துறை ஐக்கிய பெண்கள் அணி சம்பியன்

வடமாகாண இளைஞர் விளையாட்டுக்கழகங்களுக்கிடையில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்ற ரூபவாஹினி கரப்பந்தாட்டப் போட்டியில் பெண்கள் பிரிவில் காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக்கழக அணி சம்பியனாகியது.

ரூபவாஹினி, தேசிய ரீதியில் மாவட்டங்களுக்கிடையிலுள்ள இளைஞர் விளையாட்டுக் கழகங்களின் கரப்பந்தாட்ட அணிகளுக்கிடையில் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியினை தற்போது நடத்தி வருகின்றது.

வடமாகாண இளைஞர் விளையாட்டுக்கழக அணிகளுக் கிடையிலான கரப்பந்தாட்டப் போட்டிகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழக கரப்பந்தாட்ட திடலில் நடைபெற்றது.

முதலில் நடைபெற்ற பெண்களுக்கான போட்டியில், முல்லைத்தீவு பாண்டியன்குளம் பெண்கள் அணியும் யாழ்ப்பாணம் காங்கேசன்துறை ஐக்கிய பெண்கள் அணியும் இறுதிப்போட்டிக்குள் நுழைந்தன.

இறுதிப்போட்டியின் முழு நேர ஆதிக்கமும் காங்கேசன்துறை ஐக்கிய அணியின் பக்கம் இருந்தது.

அடுத்தடுத்து புள்ளிகள் பெற்ற காங்கேசன்துறை ஐக்கிய இளைஞர் அணி 25:09, 25:11 என்ற புள்ளிகள் அடிப்படையில் இரு செற்களையும் இலகுவாகக் கைப்பற்றி சம்பியனாகியது.

இறுதிப்போட்டியில் வெற்றி பெற்றதன் மூலம் காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக்கழக அணி, தேசிய ரீதியில் நடைபெறவுள்ள போட்டிக்கு வடமாகாணம் சார்பாக பங்குபற்றவுள்ளது.

# ஜனநாயக ஆட்சியில் வாழ்வோர் என்னை சர்வாதிகாரி என்கின்றனர்

## ஜனாதிபதி தெரிவிப்பு

தாம் ஓர் சர்வதிகாரி கிடையாது என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். ஜனாதிபதி ஆட்சியின் வாழ்ந்து வரும் பலரே தமக்கு எதிராக சர்வதிகாரி என்ற பட்டத்தை சூட்டி வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். சர்வாதிகாரி என தம்மை குற்றம் சுமத்தக் கூடிய அளவிற்கு கருத்துச் சுதந்திரம் காணப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

கம்பளையில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் கூறுகையில் எதற்காக தம்மை சர்வதிகாரி என அழைக்கின்றார்கள் என்பது புரியவில்லை. நாட்டில் பகிரங்கமான முறையில் என்னை சர்வதிகாரி என அழைக்கின்றார்கள் என்பது புரியவில்லை.

சிங்கள மொழியில் இல்லாத வார்த்தைகளினால் இணைய தளங்களிலும் ஏனைய அச்சு ஊடகங்களிலும் எனக்கு எதிராக சேறு பூசப்பட்டு வருகிறது. இவ்வாறு குற்றம் சுமத்தும் அளவிற்கு சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது.

நாட்டு மக்கள் உச்ச அளவில் கருத்துச் சுதந்திரத்துடன் வாழ்ந்து வருகின்றனர். நாட்டு மக்கள் யார் ஆட்சி நடத்த வேண்டுமென தீமானப்பதாகவும் அதற்கான உரிமையை வழங்கியுள்ளதாகவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் வங்குரோத்து அடைந்த அரசியலவாதிகளும் சர்வதேச அரங்கில் நாட்டை காட்டிக் கொடுத்து வருகின்றனர். இந்த சக்திகளுக்கு எதிராக நாம் போராட வேண்டிய அவசியம் எழுந்துள்ளது.

எமது நாடு மிகவும் மோசமானதாகக் காணப்படுகின்றது என்பதனை உலகிற்கு உணர்த்தவே சிலர் முயற்சித்து வருவதாக குறிப்பிடப்பட்டுள்ளது நாட்டின்சகல மாகாணங்களும் அபிவிருத்தியின் நன்மைகளை பெற்றுக் கொள்வதாக தெரிவித்துள்ளார். (எ-11)

## நவநீதம்பிள்ளையை...

மன்ற உறுப்பினருமான இரா.சம பந்தன் தலைமையில் அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா மற்றும் எம்.ஏ.சுமந்திரனுடன், வடமாகாண முதன்மை வேட்பாளர் சி.வி.விக்னேஸ்வரனும் கலந்து கொள்ளவுள்ளார்.

இதன்போது. வடமாகாணத்தில் நிலைகொண்டுள்ள படைத் தரப்பினரின் எண்ணிக்கை யைக் குறைக்குமாறு அழுத்தம் கொடுக்கும்படியும், தமிழ் அரசியல் கைதிகள் விவகாரத்தில் தலையிட்டு அவர்களை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்கும் படியும் நவநீதம் பிள்ளையிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வலியுறுத்தவுள்ளது. (எ-11)

## அகதிகள் மூவரை...

தங்கியுள்ளார்.

அதேவேளை அவுஸ்திரேலியாவுக்கு சட்டவிரோதமான முறையில் ஆட்களை அனுப்ப முயன்ற வழக்கில் சிறைத்தண்டனை பெற்ற இத்தாலி ராஜன் தற்போது புழல் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

இம்மூவருக்கு எதிராகவும் இலங்கையில் வழக்குகள் நிலுவையில் இருப்பதாகவும் குறிப்பாக விடுதலைப் புலிகளுக்கு விநியோகங்களை மேற்கொண்டதாக செந்தூரன் மது வழக்குள்ளதாகவும்கூறப்படுகிறது.

அதேவேளை இந்திய மத்திய அரசின் இந்த நாடுகடத்தல் உத்தரவைத் தடுத்து நிறுத்த இம் மூவரும் சென்னையில் உள்ள சட்டவாளர்கள் மற்றும் தமிழ் ஆர்வலர்களின் உதவியை நாடியுள்ளதாக தெரியவருகின்றது. (எ-11)

## வேட்பாளர் மீதான...

மேற்கொள்ளப்பட்டதாக அறிந்தேன்.

இந்தத் தாக்குதல் சம்பவம் உண்மையாக இருந்தால் அது வன்மையாக கண்டிக்கத்தக்கது அவர் எந்தக்கட்சியை சார்ந்த வராக இருந்தாலும் தேர்தல் வன்முறைகளை எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ஏற்றுக்கொள்ள முடியாது.

ஆளும் கட்சி வேட்பாளர் ஒருவர் இதில் சம்பந்தப்பட்டிருப்பதாக கூறப்பட்டது. என்னைப் பொறுத்தவரை ஆளும் கட்சியாக இருந்தாலும் சரி எந்தக்கட்சியாக இருந்தாலும் சரி தேர்தல் வன்முறைகளை ஏற்றுக்கொள்ள முடியாது என அவர் மேலும் தெரிவித்தார். (எ-6)

## அவதூறாக குற்றம் சாட்...

வட மாகாண சபை தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் வேட்பாளராகவுள்ள ஒருவரால்தான் தன் மீதான மக்கள் கவனத்தை திருப்பி அதனுடாக பிரபல்யத்தை பெறும் நோக்கோடு திட்டமிட்டு நிகழ்த்தப்பட்டதே இச் சம்பவமாகும்.

யாழ் நகர சிற்றூர்தி தரிப்பிடத்தில் அருகில் உள்ள எமது வியாபார நிலையத்திற்கு பிற்பகல் 3 மணிளவில் வருகை தந்த மேற்படி தமிழ்த் தேசிய கூட்டமைப்பு வேட்பாளர் தம்பிராஜாவும் அவருடன் வந்த சிலரும் முகாமையாளரிடம் என்னையும் எனது தந்தையாரையும் கேட்டு உரத்த குரலில் சத்தமிட்டனர்.

தொடர்ந்து எமது நிறுவனத்தையும் அதன் முன்னர் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நிறுவனத்துக்கு சொநதமான எனது வாகனத்தையும் படம் பிடிக்க முற்பட்ட வேளை அதனை தடுக்க சென்ற எமது நிறுவன முகாமையாளரிடம் தமிழ் தேசியத்தை வைத்து அரசியல் செய்யும் உரிமை தமக்கே உண்டு எனவும் கொழும்பில் இருந்து வந்து எவரும் அரசியல்செய்ய தேவையில்லை என்று கூறியதுடன் எனது மாவட்ட அமைப்பாளர் பதவியை இராஜனாமா செய்ய வேண்டும் அல்லாவிட்டால் எனது உயிருக்கும் எனது தந்தையின் உயிருக்கும் ஆபத்து ஏற்படும் என்பதையும் வலியுறுத்தி சத்தமிட்டு கூறியிருந்தார்.

அது மட்டுமன்றி எனக்கு சொந்தமான வாகனத்தையும் சேதப்படுத்தியுடன் எமது ஆதரவாளர்களுடன் வாய்த்தர்க்கத்திலும் ஈடுபட்டதுடன் தன்னுடன் வந்த குண்டர்களை கொண்டு தனது வாகனத்தையும் தாக்கியுள்ளார்.

மேலும் எமது வியாபார நிறுவனத்திற்கு வந்து எம்மை வலிந்து சண்டைக்கு இழுப்பதன் மூலம் தன் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாக என் மீதான அவதூறையும் தனக்கான அனுதாபத்தையும் தேடிக் கொள்வதே அவரின் குறியாக காணப்பட்டது.

எனவே இவ்வாறானவர்களை மக்கள் இனங்கண்டு கொள்ள வேண்டும் உண்மைத்தன்மை புரிந்து கொள்ள வேண்டும்என்பதே எமது கருத்தாகும்.

இது தொடர்பாக யாழ் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் கூட்டமைப்பு வேட...

இதேவேளை அப்பகுதியில் பணியில் ஈடுபட்டிருந்த பொலிஸார் அங்கு விரைந்து வந்ததையடுத்து குறித்த கும்பல் அங்கு இருந்து தப்பிச் சென்றது.

அத்தோடு தாக்குதல் சம்பவம் குறித்து யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்திற்கு அறிவிக்கப் பட்டதையடுத்து பெருமளவான பொலிஸார் ஆயுதங்களுடன் அங்கு வருகை தந்தனர்.

அதுமட்டுமன்றி சுமார் பத்துக்கும் மேற்பட்ட இராணுவத்தினரும் சம்பவ இடத்தில் பிரசன்னமாகியிருந்தனர்.

இதேவேளை தாக்குதலுக்குள்ளான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளரான தம்பிராசாவினால் வடக்கு மாகாண சபைத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பில் யாழ்.மாவட்டத்தில் போட்டியிடும் சிறிலங்கா சுதந் திரக்கட்சியின் யாழ்.மாவட்ட பர்தான அமைப்பாளர் அங்கஜன் மீதும் அவரது தந்தையான இராமநாதன் மீதும் குற்றஞ்சாட்டியதோடு அங்கு பிரசன்னமாகியிருந்த இராமநாதனை கைது செய்யும் வரை தான் அந்த இடத்தை விட்டு செல்லமாட்டேன் எனவும் தெரிவித்தார். அத்துடன் தன் மதான தாக்குதலை இராமநாதன் தலைமையிலான குழுவே மேற்கொண்டதாகவும் கூறினார்.

இருப்பினும் பொலிஸாரின் நீண்ட நேரக் கோரிக்கையை அடுத்து கூட்டமைப்பின் வேட பாளர் அங்கிருந்து செல்ல சம்மதித் ததையடுத்து பொலிஸாரின் வாகனத்தில் யாழ்.பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார். அத்தோடு வேட்பாளர்வாகனம் கனரக வாகனத்தின் உதவியுடன் வீதியில் இழுத்துச் செல்லப்பட்டது.

பட்டப்பகலில் பலர் பார்த்திருக்க துப்பாக்கி முனையில் நடந்தேறிய இந்தத் தாக்குதல் சம்பவம் யாழ். நகரப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (எ-4,6)


5 வருட - 10 வருட விசா
3 இலட்சம் சம்பளம்
தங்குமிடம்,
உணவு இலவசம்

அமெரிக்காவில் படிக்க,
உழைக்க அதிரடி வாய்ப்பு
விரைந்து வாருங்கள்.

(C-4395)

திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 0212219016, 0215689090




# தேர்தல்கள்...

வடக்கு மாகாண சபைத் தேர்தல் எதிர் வரும் 21ஆம் திகதி இடம்பெறவுள்ள நிலையில் அது தொடர்பான முன்னாயத்தங்களை செய்யும் நோக்கத்தோடு தேர்தல்கள் திணைக்கள ஆணையாளர் வடக்கு மாகாணத்திற்கான விஜயத்தை இன்று மேற்கொள்கின்றார்.

குறிப்பாக வடக்கு மாகாண சபைத் தேர்தலை முன்னிட்டு இடம்பெறும் சம்பவங்கள் தொடர்பாக ஆராய்வதற்கும் அதிகரித்து வரும் தேர்தல் விதிமுறைகளை மீறும் சம்பவங்களை கட்டுப்படுத்தும் நோக்குடனும் தேர்தல்கள் திணைக்கள ஆணையாளர் இன்று வருகை தரவுள்ளா எனவும்தெரிவிக்கபபட்டுள்ளது.

இதேவேளை வடக்கு மாகாண சபைத் தேர்தலில் யாழ்.மாவட்டத்தில் போட்டியிடும் கட்சிகள் மற்றும் சுயேட்சை குழுவினதும் வேட்பாளர்களையும் உறுப்பினர்களையும் சந்தித்து கலந் துரையாடவுள்ளார்எனவும்தெரிய வந்துள்ளது. (எ-11)

# சர்வதேச சமூகத்...

கடந்த காலங்களில் இலங்கை மீது மனித உரிமைகள் தொடர்பான குற்றச்சாட்டுகளை முன்வைத்த மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளைக்கு எதிராக பல்வேறு தாக்குதல்களை அரசாங்க உறுப்பினர்கள் மேற்கொண்டு வந்தனர்.

அத்துடன் அரசாங்கம் சர்வதேச நாடுகளின் எச்சரிக்கைகளை பொருட்படுத்தாது செயற்பட்டிருந்தது.

ஆனால்சர்வதேச நாடுகளிடையே தாம் தனிமைப்படுத்தப்படுவதை உணர்ந்த அரசாங்கம் தற்போது அதனுடன் இணைந்து செயற்படும் நாடகத்தை அரங்கேற்றியுள்ளது.

இதற்காகவே நவநீதம்பிள்ளையின் இலங்கை விஜயத்தை அரசாங்கம் அனுமதித்துள்ளது.

அத்துடன் தேர்தல் விதிகளை மீறி, அரசாங்கம் வடக்கில் தேர்தல் நடத்துவதாகவும் அறிவித்துள்ளது.

இதேவேளை நவநீதம் பிள்ளையின் இலங்கை வருகையின் போது, அவர் முன்வைத்த குற்றச்சாட்டுகளை நிராகரிக்கும் வகையில், பல்வேறு ஆணைக்குழுக்கள் நியமிக்கப்பட்டன.

அத்துடன் கடத்தல், தாக்குதல் சம்பவங்கள் போன்ற நீண்டநாட்களாக விசாரணை நடத்தப்படாமல் இருந்து வழக்குகள், மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவை அனைத்தும் அரசாங்கம் சர்வதேசத்தை ஏமாற்ற எடுத்துள்ள முயற்சிகள் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-11)

# பேச்சைக்...

சத்தின் பல மனிதாபிமான அமைப்புகள் இலங்கை அரசாங்கத்திற்கு ஒத்துழைப்பை வழங்கின.

நான்கு ஆண்டுகள் கடந்துள்ள போதும் இடம்பெயர்ந்த மக்களுக்கு செய்யவேண்டியதேவைகள் இன்னமும் மீதமுள்ளன.

எனவே அரசாங்கத திட்டங்களை வெறும் பேச்சுவார்த்தைகளில மட்டுப்படுத் தாமல் அதற்கு செயல் உருவம் வழங்கவேண்டும்என்று அவர் தெரிவித்துள்ளார். (எ-11)


திருமணத் தேவைக்கான
கார் வாடகைக்கு விடப்படும்

தொடர்புகளுக்கு:
0771950228,
021 222 8984
0776152992





இல.44. சங்கிலியன் வீதி.
நல்லூர். யாழ்ப்பாணம்.
(C-4398)

AFter A/L? Vacancyes

எமது கனேடிய நிறுவனத்தில்
ஓர் அரிய சந்தர்ப்பம்
1. நீங்கள் க.பொ.த(சா/த) அல்லது உயர்தரம் சித்தியடைந்தவரா?
2. புதிய தொழில் தேடுனரா?
3. முகாமைத்துவத்தில் சிறந்த வருமானம் பெற விரும்புபவரா?
பயிற்சியின் போது 12000-18000/=
பயிற்சியின் பின் 40,000க்கு மேல் குறுகிய காலத்தில்
பதவி உயர்வும் மற்றும் சிறந்த சலுகைகளும்.

We are Looking For this catogories
- Supervisors
- Assistant manager
- Training Administration
- Training manager

(3656)
தொடர்பு: 0779298842, 0779994807, 0214993166

BRITISH COLLEGE OF HIGHER STUDIES
BCHS
சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய
நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும்
புதிய கற்கை நெறிகள்

Spoken English With Grammar - Quick Learning Course (1 1/2 Months)
ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்க விரும்புவர்களுக்காகவே நடாத்தப்படுகிறது. தொழில் புரிபவர்களுக்கு பிற்பகல், சனி மற்றும் ஞாயிறு வகுப்புக்கள் உண்டு.
A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு இது மிகவும் சிறந்தது.
வகுப்புக்கள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாகவும் (Video & Audio Visuals) கூடுதலான பயிற்சிகளுடன் நடாத்தப்படுகிறது.

Diploma In English (2 Months)
ஒரு தொழில் தேடுவதாயினும் சரி உயர் கல்வியினைத் தொடருவதாயினும் சரி
ஆங்கிலத்தின் தற்காலத்தேவையும் அதிலே உங்களின் புலமை என்பதும் இன்றியமையாதது.
இத்தேவைகேற்ப எமது பாடத்திட்டங்களும் வகுப்புக்களும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.
தொழில் புரிவோர் மாணவர்களுக்கென வகுப்புக்கள் உண்டு.

IELTS
Toping centre for registering more IELTS candidates in Jaffna
&
Approved centre for IELTS online Registration system for Exam
< We gurantee minimum 6.0 band and above >
Duration: 2 1/2 Months

BI Exam - Student Visa மூலம் UK செல்பவர்களுக்கானது
City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளை விட மிகவும் இலகுவானதுடன்
இது G.C.E. (O/L) English இற்கு ஒப்பானது. இது British High Commission னால் முற்றிலும்
அங்கீகரிக்கப்பட்டதுடன் எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கும் தோற்றமுடியும்.

A1 Exm - Sponsor / Settlement Visa மூலம் UK செல்பவர்களுக்கான பரீட்சை
- U.K. அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது
- எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கு தோற்ற முடியும் சான்றிதழின் வலிது கால எல்லை அற்றது.
- நம்பிக்கைக்குரிய சர்வதேச பரீட்சை
- ஏனைய பரீட்சைகளை விட மிகவும் இலகுவானது

Young Learners for English (YLE) (வயதெல்லை : 7 - 12)
இது ஒரு சர்வதேசப் பரீட்சை என்பதுடன் University of Cambridge வழங்கும் சான்றிதழ்

| Batch - 1 | Batch - 2 | Batch - 3 | Batch - 4 |
|---|---|---|---|
| 24-08-2013 | 26-08-2013 | 31-08-2013 | 02-09-2013 |

மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

(C-4391)
BCHS
Jaffna Branch:
No. 15, Sirambiyady Lane,
off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550
Vavuniya Branch:
No. 3, 6th Lane, Vairavarkovil Veethy,
Vairavarpulliyamkulam, Vavuniya.
Tel: 024 324 5287
Hot Lines : 0777222422 0777585913, 0714299935, 0777730074

Digital இண்டர்நஷனல் எக்ஸ்பிரஸ்
பொதி விநியோக சேவை
விஷேட கட்டண சலுகைகள்





- 200க்கும் மேற்பட்ட நாடுகளுக்கான உலகின் முதற்தர கூரியர் நிறுவனம் மூலம் தபால் மற்றும் பொதி விநியோக சேவையினை தரமாகவும் பாதுகாப்பாகவும் அனுப்பிட நாடுங்கள்
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- மிகச்சிறந்த வாடிக்கையாளர் சேவை
- அனுப்பும் பொதிகளுக்கான உத்தரவாதம்

(C-4382)

WESTERN UNION
MONEY TRANSFER

மிக விரைவான
பணப்பரிமாற்ற சேவையினை
நம்பிக்கையாகவும்
பாதுகாப்பாகவும்
பெற்றுக்கொள்ள முடியும்

62/16 ஸ்ரான்லி வீதி
(சம்பத்வங்கி முன்பாக)
யாழ்ப்பாணம்
தொடர்புகளுக்கு -
0212224040 / 0772931062





Kumaran Silks இன்
ஒருவருட பூர்த்தியை முன்னிட்டு நல்லூர் கந்தன் ஆலய உற்சவ காலத்தில்
Wedding Sarees திருமணப் பட்டுப் புடைவைகள்
Bridal Sarees பிறைடல் சாறீஸ்
Casual Sarees கஸ்சுவல் சாறீஸ்
Designer Sarees டிஷைனர் சாறீஸ்
Cotton Sarees கொட்டன் சாறீஸ்
Salwar, Material [Cotton & Silks] சர்வார் மெற்றீரியல் (கொட்டன் அன் சில்க்ஸ்)
Blouse, T-shirt, Tops & etc பிளவுஸ், ரீ-சேட்ஸ், ரொப்ஸ் மற்றும் பல
500/= கொட்டன் சாறீஸ் Cotton Sarees
700/= சில்க்ஸ் சாறீஸ் Silks Sarees
Discount 15% to 25% கழிவு வழங்கப்படும்
Sequence Sarees 30% கழிவு வழங்கப்படும்
No. 788, Point Pedro Roadm, Nallur, Jaffna. Tel : 021 20 54075. e.mail : kumarantlc@gmail.com
இல.788, நல்லூர், யாழ்ப்பாணம். (முத்திரைச் சந்தி அருகாமை) (3655)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.08.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.